# திருக்கோயில்

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

OFFICE OF THE STATE EDITOR
25/ 11/ 73
9 - FEB 1973
GAZETTEER

177




மாலை 15] பரிதாபி — தை, மாசி — பிப்ரவரி, 1973 [மணி 5

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசி



திருத்தணிகையில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் திரு. கலைஞர் அவர்கள், திருப்பணித் துவக்க விழா, கண்ணொளி வழங்கு விழா நிகழ்ச்சிகளின் போது உரை நிகழ்த்துதல். (9-1-73)

## பொருளடக்கம்


1. அருள்நந்திசிவத்தின் அருளுள்ளம்.
2. திருக்குட முழுக்கு விழா
3. அழுது அடியடைந்த அன்பர்
4. திரு விருத்தத்தில் ஒரு விருத்தம்
5. செய்திச் சுருக்கம்
6. திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும்
7. பரிசு பெறும் கோயில்களின் பெயர் பட்டியல்
8. அறுவகைச் சமயங்கள்
9. பெரியாழ்வார் திருமகள்
10. நம்பெருமாள் வடிவநலன்
11. செய்திச் சுருக்கம்
12. கரையேறவிட்ட முதல்வர்
13. மனம் எனும் பேய்க்குரங்கு
14. மணவாள மாமுனிகள் மாட்சி
15. பழந்தமிழ் இலக்கியத்தில் இராமாயணம்
16. தமிழ் நாட்டில் சாக்தம்



## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் " திரு. ஆணையா அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை–34 " என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது. அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.—ஆசிரியர்.




OFFICE OF THE STATE ... GAZ...
25/..../73
9-FEB 1973

மாலை 15 ] பரிதாபி — தை, மாசி — பிப்ரவரி 1973 [ மணி 5

# அருள்நந்திசிவத்தின் அருளுள்ளம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

**முன்னுரை :**

ஒரு கவிஞன் அல்லது நூலாசிரியனின் குணம் அனுபவம் கொள்கை பழக்க வழக்கம் முதலியன, அவனுடைய நூல்களில் விளங்கித் தோன்றும். கவிஞன் அல்லது நூலாசிரியன் நினைந்தோ நினையாமலோ, அவனுடைய இயல்புகள், மனப்போக்குகள், நோக்கங்கள் முதலியன, அவனது நூல்களில் நிழலிட்டுத் தோன்றக் காணலாம். நூலின் போக்கு, நடையமைப்பு, கருத்தழகு, சொல்நலன், சொற்றொடர் அமைப்புத்திறன் முதலியனவற்றைக் கொண்டு, ஒரு நூலாசிரியனின் இயல்புகள் எத்தகையவை என்று, நாம் எண்ணியுணர்தல் கூடும். இவ்வுண்மை இலக்கிய ஆராய்ச்சியாளர் அனைவரும் அறிந்ததொன்று.

**செகப்பிரியர்:**

இம்முறைமைக்கு ஏற்ப, உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராகிய வில்லியம் செகப்பிரியரின் குணம் கொள்கை அறிவு அனுபவம் முதலியன, அவர்தம் நூல்களின் வாயிலாக அறியக் கிடக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் பலரும் கூறுவர். செகப்பிரியர் கவிஞராக மட்டுமேயன்றி, மிகச் சிறந்த ஒரு பெரும் நடிகராகவும் விளங்கி இருந்தார். அவர் தாம் எழுதிய 'அமலாதித்தன்' என்னும் நாடகத்தில் டென்மார்க் தேசத்து அரசராகிய கிளாடியசு என்பவரின் ஆவியாகவும்; 'வெனிசு வாணிகன்' என்னும் நாடகத்தில் ஷைலக்கு என்னும் யூதனாகவும், 'நீங்கள் விரும்புவது போலவே' என்னும் நாடகத்தில் ஆதாம் என்னும் பணியாளனாகவும் வேடம் தாங்கி நடித்து, மிகப் பெரிதும் போற்றப்பெற்றார். அத்தகைய சிறந்த பெரும்நடிகராக விளங்கிய செகப்பிரியர், மனித வாழ்க்கையைப் பற்றிய தம்முடைய கருத்துக்களைத் தமது நடிப்புக்கலை அனுபவமும் பயிற்சியும் புலனாகும் வண்ணம், முறையே "மகபதி" "நீங்கள் விரும்புவது போலவே" "அமலாதித்தன்" என்னும் நாடகங்களில் அழகுறப் பின்வருமாறு வெளியிட்டிருக்கக் காண்கின்றோம்.

* சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெறும் "சிவஞான சித்தியார்" வகுப்பில் விளக்கிய கருத்துக்களைத் தழுவியது.

— ஆசிரியர்.

**வாழ்க்கையும் நாடகமும்:**

(1) "வாழ்க்கை என்பது, ஒரு நடக்கும் நிழலே; மேடையின் மீது தனக்குரிய நேரத்தில் ஓடியாடி உறுமி அலட்டிக் கொண்டு, அதற்குப் பின்னர்க் கேட்கப்பெறுமற் போகின்றஓர்ஏழை நடிகனைப் போன்றது வாழ்க்கை; ஓர் அறிவிலியால், கூச்சலும் இரைச்சலும் நிரம்பி, குறிக்கத் தக்க கருத்து ஏதுமின்றிச் சொல்லப்படுகின்ற சுவையற்ற வெறும் கதை போல்வதே வாழ்க்கை எனலாம்".

"உலக வாழ்க்கை என்பதுதான்,
 உலவித் திரியும் வெறும்நிழலே;
நலமில் வறிய நடிகன்அவன்,
 நடந்து குலுங்கி மேடையினில்
சிலவே நேரம் இருந்தொழிவான்;
 பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்;
இலகு சுவையின் றறிவிலிசொல்
 கதைபோற் பொருளில்லா
 வெற்றொலியே" (1)

—ந. ரா. மு.

148706.

(2) "இவ்வுலகமே ஒரு பெரும் நாடக மேடை. இதன்கண் வாழும் ஆண்களும் பெண்களும் இந்நாடக மேடையில் வருகின்ற வெறும் நடிகர்களேயாவர். அவர்கள் தத்தமக்கென உட்புகும் வழியிலும், வெளியேறும் வழியையும், பெற்றுள்ளனர். ஒரு மனிதனே தனக்குரிய நேரத்தில் பலவகைக் கோலங்களில் நடிக்கின்றான். அவனுடைய நடிப்பு எழுவகைப் படிவங்களாக அமைகின்றது".

"உலகம் எலாம்ஒரு நாடக
 மேடை; ஒருங்கிலையந்து
நிலவும்ஆண் பெண்கள் எலாமும்
 வெறும்நிழல் போல்நடிகர்;
உலவ வரும்வழி செல்வழி
 உண்டு, அவர்க்கு; உற்றொருவர்
பலவகைப் பாங்கின் நடிப்பர்; ஏழ்
 வாழ்க்கைப் படிவங்களே" (2)

—ந. ரா. மு.

N73.15

**நடிப்புக்கலைக் குறிப்புகள்:**

(3) "நீங்கள் உங்கள் பேச்சுக்களை நயமாகவும் பொருத்தமாகவும் பேசுங்கள். கூச்சலிட்டுக் கத்தாதீர்கள். காற்றை ஈர்வாள் கொண்டு அறுப்பது போன்று, கைகளை மேலும் கீழும் ஆட்டிக் குதிக்காதீர்கள். அமைதியாகப் பெருந்தன்மை தோன்ற நடியுங்கள். உணர்ச்சியினைப் புயலும் சூருவளியும் போல ஆக்கிச் சிதைத்து விடாமல், அளவாகவும் செம்மையுடனும் வெளியிடுங்கள். உணர்ச்சியினை அளவுக்கு மீறி மிகைப்படுத்தி, இரைச்சலும் கூச்சலும் போட்டுப் பேசி, சுவைத்திறன் இல்லாத தரையாளர்களைக் களிப்பூட்ட முயலாதீர்கள். மிகைப்படுத்தி நடிப்பவர்களின் உரையாடலைக் கேட்பது, என் உள்ளத்தைப் பெரிதும் துளைத்து வருத்துகின்றது. அளவுக்கு மீறி நடிப்பவனைச் சவுக்கினால் அடித்து ஒறுத்தலை நான் விரும்புகின்றேன். அத்தகையவன் செயல், ஏரோதையே விஞ்சும் ஏரோது போல இருக்கின்றது. மிகை நடிப்பை விலக்கி விடுமாறு உங்களை யான் பெரிதும் மன்றுடி வேண்டுகின்றேன்.

மிகை நடிப்பை விலக்குவதற்காக, நீங்கள் மிகுந்த கோழை போலவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் அறிவின் திறனையே ஆசானாகக் கொண்டு, வேடங்களுக்கு ஏற்றபடி இனிதாக நடியுங்கள். சொல்லுக்குச் செயலும், செயலுக்குச் சொல்லும் ஒத்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். இயற்கையினை உள்ளது உள்ளபடியே விளக்கிக் காட்டுவது தான், நடிப்பின் குறிக்கோள். அளவிற்கு மிகவோ குறையவோ நடித்தால், ஒருவேளை

---

(1) "Life is but a walking shadow;
 a poor player
That struts and frets his hour upon the
 stage,
And then is heard no more; it is a tale
Told by an idiot, full of sound and fury,
Signifying nothing"

—William Shakespeare, Macbeth

(2) "All the world's a stage,
And all the men and women merely
 players;
They have their exits and their
 entrances;
And one man in his time plays many
 parts,
His acts being seven stages."

—William Shakespeare, As You Like it.

அறிவில்லாதவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம்; ஆனால் அறிவுடையவர்களுக்கு அது மிக்க வருத்தத்தையே விளைவிக்கும். மனித இயல்பைப் "போலச் செய்து" காட்டமாட்டாமல், காண்போர்க்கு அருவருப்பை உண்டாக்கி விடுபவர்களை, மனிதர்கள் என்றே நான் மதிக்க மாட்டேன்.. நகைச்சுவை நடிகர்கள், தங்களுக்கென்று எழுதப்பெற்ற வசனத்தை மட்டுமே பேசுக. அவர்கள் தம்மனம் போனபடி எதனையும் உளருமல் இருப்பது இன்றியமையாதது ...."

## குறிப்புகளின் சிறப்பு :

"அமலாதித்தன்" (Homlet) என்னும் நாடகத்தின்கண் வருகின்ற சிறந்த இந்தக் குறிப்புகளின் வாயிலாக, ஒரு நடிகர் என்ற நிலையில் செகப்பிரியர் எத்தகைய அனுபவமும் உணர்வும் வாய்ந்து விளங்கியிருந்தார் என்பதனை, நாம் ஓரளவு உணர்ந்து கொள்ளப் பெறுகின்றோம். இவற்றால் அவர்தம் அரிய சிறந்த இயல்புகள், நாம் நுண்ணிதின் எண்ணியுணரும்படி நமக்கு இனிது புலனாகின்றன. இங்ஙனமே நமது தமிழ் நாட்டுச் சைவசித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய அருள்நந்தி சிவத்தின் அருளுள்ளம், அவர் தம் நூலில் ஓரிடத்தில் மிகத் தெளிவாக நமக்குப் புலனாகும்படி, சிறப்புற விளங்கித் திகழ்கின்றது. அதுபற்றி இங்கு ஒரு சிறிது காண்போம்!

## அருள்நந்தி சிவம் :

தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தொன்று தொட்டுத் தோன்றி வந்துள்ள, சான்றோர்கள் பலராவர். அவர்களுள் அருள் நந்தி சிவாசாரியர் என்பவர் ஒருவர். நம்மிற் பெரும்பாலோர், தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் நக்கீரர் கம்பர் போன்ற சான்றோர்கள் சிலரை மட்டுமே, பொதுவாக அறிவர். அருள்நந்தி சிவம் போன்ற சான்றோர்கள் பலரைத் தமிழ் மக்கள் பெரும்பாலோர் அறிந்து கொள்ளவில்லை. திருநீறு அணியும் சைவர்களில் ஒருசிலருக்கு மட்டுமே அருள் நந்தி சிவம் உரியவரல்லர். தமிழ்மக்கள் அனைவருக்குமே சிறப்பாக உரிய, தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற சான்றோர்களில், அருள்நந்திசிவமும் ஒருவராவர் எனத் துணிந்து கூறலாம்.

இலக்கணத்திற்குத் தொல்காப்பியரும், நீதிநூலுக்குத் திருவள்ளுவரும், நெஞ்சை அள்ளும் செஞ்சொற் காப்பியத்திற்கு இளங்கோவடிகளும், கவிதைச் சுவைக்குக் கம்பரும், தமிழக வரலாற்றுக்குச் சேக்கிழாரும், பக்தி இயக்கத்திற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், யோகஞான அனுபவங்களுக்குத் திருமூலரும் போல, நமது தமிழ்நாட்டில் தத்துவ ஞானத்திற்குத் தலைசிறந்த பெருஞ்சான்றோர்களாக மதித்துப் போற்றத் தக்கவர்களுள், ஆசிரியர் அருள்நந்திசிவம் மிக்க பெரும் சிறப்புடையவர் ஆவர் உலகப் பெரும் தத்துவ ஞானச் சான்றோர்களின் குழுவில், ஒரு பெரும் சிறப்புறுப்பினராக ஒருங்குவைத்துப் போற்றி வணங்கத் தக்கவர் அருள்நந்திசிவம் எனலாம்.

## சிவஞான சித்தியார்:

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், சிவஞானசித்தியார் என்பது ஒன்று. ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் என்னும் முதல் நூலுக்கு ஒரு சிறந்த விரிவுரை போலவும், அதன் வழி நூலாகவும் அமைந்த சிறப்புடையது சிவஞானசித்தியார். இந்நூலின் ஆசிரியரே அருள்நந்தி சிவாசாரியர் ஆவர். அவரைப்பற்றி விரிவான விவரமான வரலாறு ஏதும் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் அவர்தம் பெருமாட்சிமை இனைத்தென்பது, சிவஞானசித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞானநூலாற் றெள்ளிதிற் புலனாகின்றது. சிவஞானசித்தியார், பரபக்கம் சுபக்கம் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பரபக்கத்தில் உலகாயதம் முதற் பாஞ்சராத்திரம் ஈறாக உள்ள பல்வேறு சமயங்களையும், அவ்வச் சமய நோக்கின் வழி நின்று ஆராய்ந்தும், சுபக்கத்தில் சித்தாந்த சைவ நோக்கின்வழி நின்று பிறசமயங்களின் ஐயங்களைப் போக்கியும், தமிழகத்தின் தத்துவ ஞானவித்தகக் கருத்துக்களை, நம் அருள்நந்தி சிவாசாரியர், முத்தமிழ்த் துறையின்முறை போகிய உத்தமக் கவிஞர் எனத்தகும் நிலையில், செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற் கவிதைகளால், அழகொழுக விளக்கியருளியிருக்கின்றார். தமிழ்மொழிக்கண் உள்ளமிக மேலான சிறந்த உயர்தர நூல்களின் வரிசையில் முன்னணியில் ஒன்றாக விளங்கித் திகழ்வது, சிவஞானசித்தியார் என்பதில் ஐயமில்லை. அந்நூலின் சிறப்பிற்கும், ஆசிரியரின்

அருளுள்ளத்திற்கும் சான்ருக, ஈண்டைக்கு ஒன்றை மட்டும் இயன்ற அளவு கண்டு அமைவோம்.

உலகாயதன்:

சிவஞான சித்தியாரின் தொடக்கத்தில், பரபக்கப் பகுதியில், உலகாயதன் தன்னுடைய மதக் கொள்கைகளைப் பின்வருமாறு கூறுகின்ருன்:— ''அளவையாவது காட்சி ஒன்றே; அனுமானம் முதலியன வேண்டுவதில்லை; நிலம் நீர் தீ காற்று எனப் பூதங்கள் நான்கே. வன்மை தண்மை வெம்மை அசைவு என்பன இப்பூதங்களின் இயல்புகள். மணம் சுவை உருவம் ஊறு என்பன இவற்றிற்குரிய குணங்கள். மண்ணிலிருந்து குடம் அமைவது போல, இவற்றிலிருந்து உருவங்கள் பல தோன்றும். புத்தி குணம் பொறி புலன்கள் முதலியன, நீரில் எழும் குமிழி போல இவற்றிலிருந்து தோன்றி அழியும். இவற்றின் வேருக, வினை உயிர் கடவுள் என்பன எதுவும் இல்லை.

இவ்வுலகில்மேலான இன்பம், பெண்ணின்பமேயாகும். இம்மையில் இவ்வின்பத்தை நுகரமாட்டாமல், மறுமையில் இன்பம் பெறலாம் என்று முயல்வது, மூடர்களின் செயலேயாகும். அவ்வறிவிலிகளின் செயல், தாகமுற்றவர்கள் தண்ணீர் கிடைக்குமிடத்தில் அதனைப் பருக மறுத்து விட்டு, அது கிடைக்காத இடத்தில் அதற்காக ஏங்கி வருந்துகின்றவர்களின் செயலையே ஒக்கும். உண்மையான தவம் என்பது, ஊடுவதும் உணர்வதும் காதலியரை நினைந்து வாடுவதும், அவர்களின் அடியில் விழுந்து அன்பைப் பெற வருந்துவதுமேயாகும். தம்மை மறந்து வேட்கை மீதூர்ந்து மகளிர்பால் எய்துகின்ற இன்பமே முத்தியாகும். இத்தகைய இன்பத்தில் ஆழ்ந்து திளைப்பவர்களே முத்தி பெற்றவர்கள் ஆவர்...'' என உலகாயதன் கூறுகின்ருன். இக்கருத்துக்களை ஓர் உலகாயதன் எத்தகைய நிலையில், அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தி, உணர்ச்சி பெருகக் கூறுவானே, அதே நிலையில் அக்கருத்துக்களை அழகிய இனிய கவிதைகளாக, அருள்நந்தி சிவம் மிகச் சிறப்பாகத் தொகுத்துக் கூறியிருக்கின்ருர்.

உலகாயதன் மதமறுதலை :

இங்ஙனம் உலகாயதனின் மதக்கொள்கைகளைத் தொகுத்துக் கூறியிருக்கின்ற அவரே, அவன்பால் அருள்உள்ளம் கொண்டு அவனைத் திருத்தி அறிவுறுத்தி ஆட்கொள்ளும் முறையில், 'உலகாயதன் மதமறுதலை' என்னும் பகுதியில் அவனது கொள்கைகளை மறுத்துப் பின்வருமாறு சில அறிவுரைகள் கூறுகின்ருர்.

(1) ''உலகாயதனே! பெண்ணின்பமே பேரின்பமென்று நீ பெரிதும் வியந்து புகழ்ந்து கூறினுய். அருவருப்பிற்குரிய தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுக்கிலம் என்னும் என்னும் எழுவகைப் பொருள்களால் அமைந்ததே, ஒரு பெண்ணின் உடல். அஃது ஒரு சிறு குடிசை போன்றது; புலால் நாற்றம் வீசுவது; அழுக்கு நிறைந்தது; புழுக்கள் நெளிவது; நூல்போலக் கோழை நீர் ஒழுகுவது; ஈரல் நுரைக்கின்ற மூத்திரபாத்திரமாக விளங்குவது. வெறும் போலிப் புறத்தோற்றம் மட்டுமே கண்டு மயங்கற்க. திண்ணமாக இது மலத்திரள் என்பதனை உணர்த்து தெளிக''.

(2). ''பன்றியானது, அருவருக்கத் தகுந்த அழுக்கும் புழுக்களும் நிறைந்த மலத்தை அளைந்து தின்று இன்பமென்று நுகர்ந்து மகிழும். அதுபோலவே பெரிதும் இழிந்த ஒன்றைப் பேரின்பம் என்று மயங்கி நிற்கின்ருய். குற்றமற்று விளங்குவதும், என்றும் அழிவில்லாததும், மிகத் தூய்மையானதும், மேன்மேலும் பெருகி வளர்ந்தோங்குவதும் ஆகிய சிறந்த பேரின்பம் ஒன்றுள்ளது. அஃது இறைவனுக்கு அடிமை செய்து, அவனருளால் நாம் பெறுகின்ற இன்பமேயாகும்''.

(3) ''பிறர்மீது பகையுணர்ச்சியாகிய குரோதமே, தமது குணமாகக் கொண்டிருப்பவர்கள், மன அமைதியாகிய சாந்தியின் நன்மையை அறியமாட்டார்கள். எதன்மாட்டும் ஆராத பேராசையை உடையவர்கள், ஆசைகளை ஒழிப்பதனுல் உண்டாகும் இன்பத்தை உணரமாட்டார்கள். யாவராலும் துதிக்கப்படுகின்ற தேவர்களும் போற்றி வணங்குகின்ற மாபெரும் தலைவனுகிய இறைவனுடைய திருவடிகளை நீ பற்றிக் கொள்; அதனுல் உண்மையிலேயே மிக மேலான சிறந்த இன்பம் நினக்கு மேன்மேல் பெருக உண்டாகும். இதுசத்தியம்''.

(4) ''காமம் முதலிய இழிந்த குணங்களை, நீ உனக்குச் சுகந்தரும் என்றுமயங்கி எண்ணிக் கொண்டிருக்கின்ருய். குளிர் மிகுந்துள்ள பொழுது, வெப்பம் மிக்க நெருப்பு சுகம் தரும்

கடுமையான வெப்பம் மிகுந்துள்ளபொழுது, நல்ல குளிர்ச்சி, இன்பம் தருவதாக இருக்கும். வெம்மையும் தண்மையும் தாமே இன்பம் தருவன அல்ல; அவைகள் இன்பம் தருவதாகத் தோன்றுவது சார்பினுலேயேயாகும். தெய்வத் திருவருளாகிய நன்னெறியைச் சேர்ந்து ஒழுகுவதனுல் தான், நமக்கு உண்மையிலேயே நலம் தருகின்ற அழியாத பேரின்பம் ஏற்புடும்''.

(5) ''உலகாயதனே! நீ நல்ல இறையருள் நூல்களைப் படி; பயனற்ற இழிந்த போலி நூல்களைப் படியாதே; வீண் பேச்சுக்களைப் பேசாமல் இறை உயிர் உலகு என்னும் பதி பசு பாசங்களைப் பற்றிய நல்ல பயனுடைய சொற்களையே பேசுக. அழிந்து போகின்ற இழிந்த மனிதர்களைப் போற்றிப் புகழ்ந்து வணங்கிக் காலம் கழிக்காமல், அழிவற்ற அருள்நிறைந்த இறைவனின் திருவடிகளையே புகழ்ந்து போற்றி உய்க. காமம் வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களைக் கடிந்து அகற்றுக. இறைவனுடைய திருவருட் பேருகிய செல்வத்தையே அடைய முயற்சி செய்க. ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலத் தொடர்பை நீக்கிக் கொண்டு இறையருளால் நின்மலத்துவம் எய்துக. அதனுல் நினக்குப் பிறப்பிறப்புத் துன்பங்களற்ற பேரின்பமாகிய முத்தி எளிதிற் கிடைக்கும்''

**முடிவுரை:**

இங்ஙனம் பல சிறந்த கருத்துக்களை உலகாயதன் மதமறுதலைப் பகுதியில், அருள் நந்திசிவம் அறிவுறுத்துகின்ருர். இப்பகுதியில்,

''குரோதமே குணமாய் இருந்தவர்
சாந்தி நன்மை குறிக்கொளார்;
அராகமே அணைவார்கள் ஆசை
அறுத்த இன்பம் அறிந்திடார்;
பராவு தேவர் பராவு தூய
பராபரன் அடி பற்றிநீ,
விராவு மெய்யில் விடாத இன்பம்
விளைந்திடும்! இது மெய்ம்மையே!'' (1)

''படிக்கும் நூல்கள் சிவாகமம்:பசு
பாசமோடு பதித்திறம்
எடுத்து இயம்புவது; ஈசன் வார்கழல்
ஏத்திடும் தொழில்: என்றுமே
விடுத்திடும் பொருள் காமம் ஆதிகள்;
வேண்டிடும் பொருள் ஈண்டு அருள்;
முடித்து மும்மலம் விட்டு, நின்மல
ஞேடு நின்றிடல் முத்தியே'' (2)

எனவரும் இரு சிறந்த பாடல்களும், ஏதோ பொதுவாக நூற்போக்கில் அமைந்த செய்யுள்களாக இல்லாமல், அருள்நந்திசிவம் தாமே நம்முன் நேரில் வந்து நின்று வழங்கியருளும் அறிவுரை அருளுரைகள்போல விளங்குகின்றன.

''சேமம் ஆகிய இன்பமாம், மிகு
தெய்வ நன்னெறி சேரவே'' (1)

''மாசு தற்றெளிர் நித்த சுத்த
வளம்தரும் சுக வாரிகாண்;
ஈசனுக்கு அடிமைத் திறத்தின்
இசைந்து நாம்பெறும் இன்பமே'' (2)

எனவரும் வரிகள், எத்துணைச் சிறந்த பொருள் பொதிந்துள்ளன என்பது, எண்ணி எண்ணி மகிழ்தற்கு உரியது. ''படிக்கும் நூல்கள் சிவாகமம்; எடுத்தியம்புவது பசு பாசமோடு பதித்திறம்; ஏத்திடும் தொழில், ஈசன் வார் கழல்; என்றுமே விடுத்திடும் பொருள் காமம் ஆதிகள்; வேண்டிடும் பொருள் ஈண்டு அருள்; முடித்து மும்மலம் விட்டு நின்மலனேடு நின்றிடல் முத்தியே'' என்று உலகாயதனுக்குக் கூறப்பெறும் அறிவுரையால், அருள்நந்திசிவத்தின் அருளுள்ளம் புலனுதல் காணலாம். ''கலைத்துறையில், மனிதன் தன்னுடைய கலைப்படைப்புகளை வெளியிடாமல், தன்னையே வெளியிட்டுக் கொள்கின்ருன்'' (In art, man reveals himself and not his objects) என்னும் உண்மைக்கு ஏற்ப, அருள்நந்திசிவம் இப்பாடலின் மூலம், தம்முடைய சிறந்த இயல்புகளையே, தம்மையும் அறியாமல் ஒரு வகையில் வெளியிட்டுக் கொள்கின்ருர் எனலாம்.

—ஆசிரியர்

# திருப்பாதிரிப் புலியூர்ப் பாடலேசுவரர் கோயில்

# திருக்குட முழுக்கு விழா

## ( வாழ்த்துச் செய்தி )


திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,

(ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.)


தமிழகத்தில் திருமுனைப்பாடி என்னும் நடுநாட்டில் அமைந்துள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களில், திருப்பாதிரிப்புலியூர் மிக்க பெருஞ் சிறப்புடையதாகும். திருநாவுக்கரசர் என்னும் அப்பரடிகளை, மகேந்திரவர்மன் (கி.பி. 600—630) கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளிய போது, அப்பரடிகள் ''கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே'' எனப் பாடித் துதித்தார்; அக்கல்லே தெப்பமாக மாறியமையக் கடலில் மிதந்து வந்து கரையேறினார், நகரமக்களெல்லாம் அதிசயம் உற்று அன்புகொண்டு மகிழ்ந்து வரவேற்கச் சென்று,

''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்அடி யோங்களுக்கே''

எனத்தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றி வழிபட்டார். அத்தகைய பெருமாட்சிமையுடைய தலமே ,திருப்பாதிரிப்புலியூர் ஆகும்.

இங்கே அப்பர் கடலிலிருந்து கரையேறிய இடம் ''கரையேறவிட்ட குப்பம்'' என்னும் பெயரால் இன்றும் விளங்கி வருகின்றது. ''தேயமெல்லாம் நின்று இறைஞ்சும் திருப்பாதிரிப் புலியூர்'' என்று திருநாவுக்கரசர், இத்தலத்தினைப் புகழ்ந்து போற்றியிருக்கின்றார். இந்தத் தலத்தின் தேவாரப் திருப்பதிகத்திலேயே,

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலி யூரரனே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்கவரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே

என்பன போன்ற அழகிய சிறந்த திருப்பாடல்கள் அமைந்து விளங்கி, அன்பர்களின் உள்ளங் களையெல்லாம் உருக்குவனவாகத் திகழ்கின்றன.

இங்குள்ள இறைவனுக்குத் ''தோன்றாத் துணைநாதர்'' என்றும், அம்பிகைக்குத் ''தோகைநாயகி'' என்றும் பெயர். இத்தலத்திற்குரிய புனித மரம் 'பாடலம்' என்பது. ஆதலின் சுவாமிக்குப் ''பாடலேசுவரர்'' எனவும் பெயர் வழங்கும். இந்தத் தலத்திலேயே திருக்கோவலூர் ஆதீனம் ஐந்தாம் பட்டத்துக் குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள், சைவமும் தமிழும் தழைத்து இனிது வளர்ந்தோங்கப் பெருந்தொண்டாற்றியருளினார்கள்.

இத்தகைய பல சிறப்புக்களையுடைய திருப்பாதிரிப்புலியூர்த் தோன்றாத் துணைநாதர் கோயிற் குடமுழுக்குவிழா, 8-2-73 அன்று மிகவும் சிறப்புற நடைபெறவிருப்பது அறிந்து, பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன். குடமுழுக்கு விழா நன்கினிது நிகழவும், விழா மலர் சிறப்புற அமையவும் தோகைநாயகி உடனுறை தோன்றாத்துணைநாதரின் திருவடிகளைப் பணிந்து வணங்குகின்றேன்.

# அமுது அடியடைந்த அன்பர்

'முத்தமிழ் வள்ளல்' 'முதுபெரும் புலவர்'

திரு. புரிசை. சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

## முன்னுரை:

உயிரினங்கள் மனவுணர்வைப் பெறும்பொழுதே இன்ப துன்பத்திற்காளாகி விடுகின்றன. தினையையும் பனையையும் போல, இன்பமும் துன்பமும் விளைவிக்கத்தகுந்த பொருள்களே. தினை விளைபொருள்களுக் குள்ளே மிகச் சிறு காலப் பயிர். பனை மிகநீண்ட காலப்பயிர். பனை ஒரு பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் பயன்தரத் தொடங்கும். அதற்குள் தினைப் பயிர் அறுபது போகங்கள் விளைந்து பயனளித்து விடத்தக்கது. ஆனால் அவ்வறுபது போகங்களும் அடிக்கடி அல்லலும் அனுபவமுமாகவே அமையும். அல்லல் படும்பொழுது துன்பம், அனுபவிக்கும்பொழுது இன்பம். பனை அப்படியல்ல. நினைக்கும்போதே விதையிட்டுவிடலாம். பிறகென்ன வேலை? "ஒருவெட்டில் விதையிட்டு மிதியொன்றில் மூடுவோம். அதற்கு ஒருபிடி யெருவா? ஒருகை நீரா? காவலொன்றுண்டா? வேலியொன்றுண்டா? கண்ணெடுத்து அதனைப் பார்ப்பதொன்றுண்டா?" அது தானே வளர்ந்து தலையெடுத்துப் பதினைந்தாண்டுகளில் பயன் தரத் தொடங்குகின்றது. மறுமுயற்சியொரு முயற்சியும் வேண்டாமல், அஃது ஓராயிரம் ஆண்டுகள் பயனளிக்குமென அறைகின்றனர்கள் ஆய்வுள்ளோர்கள்.

முன்னர், உயிர்களனுபவிக்கும் இன்ப துன்பங்களும் விளைபொருள்களேயாகுமெனக் கூறினோம். அப்ப்டியானால் இவ்வின்ப துன்பங்களுக்கும் விதைகளுளவோ எனக் கேட்கலாம். உள்ளன துன்பத்திற்கு விதை ஏக்கமுத்தம் (செருக்கு). இன்பத்திற்கு விதைஏக்கம். மக்கள் எங்கெங்கே செருக்குறுகின்றனரோ அங்கங்கே அதன் விளைவாகத் துன்பமும், எங்கெங்கே ஏக்க முறுகின்றனரோ [அங்கங்கே] அதன் விளைவாக இன்பமும் எய்துகின்றனர். "இன்பம் வேண்டினேன் துன்பந் தண்டான்" என்றது அறநெறி.

இச்செருக்கும் சிறுமையும் மிகச் சிறு செயல்களுக்கும், மிகப் பெரிய செயல்களுக்கும் வித்துக்களாகி விளங்குகின்றன. சிறு செயல்களின் மூலங்கள் தினையையொத்தன. பெருஞ் செயல்களின் பிறப்பிடங்கள் பனையையொத்தன. இதனாலேயே சிறுமைக்கும் பெருமைக்கும் தினையையும் பனையையும் காட்டித் "தினைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்" எனவும், "தினைத் துணைக் குற்றம்வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணுவார்" எனவும் கூறினார் திருவள்ளுவர். இக்கருத்தெலாம் நினைவிக்க "தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே" யென்றனர் திருவாசகத் தேன் கூடமைத்த, திருவடிப் பெருந்தாமரைத் தேன் கண்ட, மணிவாசகப் பெருமானார்.

இப் பெருந்தேன் கண்ட பெருமானார், அமாத்தியர் (அமைச்சியலார்) குடியிற்றோன்றிப் பிறப்பாலும் பெருமை பெற்றவர். இளவயதில் அழியாச் செல்வமாகிய கல்வி நலம் பெற்றுப் பெருமையுற்றவர். கற்கும் வரையில் மதிப்பெண் அதிகம் பெறும் ஆசை, தேர்வுற்றுச் சிறந்தவுடன் வேலையெங்கே என்ற விசாரம். இவ்விரு வித ஏக்கமும் இவருக்கில்லை; பெரிய வேலை தானே தேடிவரப்பெற்ற பேறுடையரானார். இப்பெருமைகள் அனைத்தும் தினைப் பயிர் போன்றவைகளே. இவைகளால் வரும் இன்பங்கள் சின்னஞ்சிறு பூக்களிலுள்ள "தினைத் துணைத் தேன்" துளிகளே. இவற்றை நிலைபேறுள்ளவையெனக் கருதவும் இடமில்லை. மறையா மொழியும் ஒழியா இன்பமுந்தரும் தேனுக்கேஏக்கங்கொண்டார் மணிமொழியார்.

இவர் தேடும் தேனளிக்கும் தாமரையை, அத் தாமரை வளரும் தடாகத்தை, நனிகண்டு அத் துறையில் மூழ்கித் திளைத்து மொழிந்துள்ளார் பரஞ்சோதியார். சேக்கிழாருக்கும் வாய்க்காத செல்வம் பெற்றவரல்லவா பரஞ்சோதியார்? திருவாசகம் அருளிய மணிவாசகரைச் சிறப்பிக் கும் திருவாய் பெற்ற அச் செம்மல் செப்புவது என்ன?

''எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத்
தலம்ப, அன்பர் இதயம் என்னும்
செழுமலர்ஓ டையிற்பிறந்து சிவானந்தத்
தேன்ததும்பும் செய்ய கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து
மைக்கண்ணீர் துளும்ப வாய்விட்டு
அழுதுஅணையா டையிற்கிடந்தான்
அனைத்துலகும்
ஈன்றுகாத்து அழிக்கும் அம்மான்''

இப் பெருந்தாமரைத்தேன் ஒரு சிறு துளியல்லவாம். அது, பூவின் உள்நுழைந்து தேட வேண்டுவதல்லவாம். வெளிவந்து ததும்புமாம். அது ''பொங்கித் ததும்பிப் பூரண மாய் ஏகஉருவாய்க்'' கிடப்பதாம் இசைக்கின் ருர், வேதாரணிய வித்தகர். இப்பேரானந்தப் பெருந்தேன் வேண்டும் ஏக்கமே எந்நாளும் வாய்த்த உள்ளத்தர் மணிவாசகனுர்.

சிறு குழந்தைகள் பலகூடி விளையாடித் திரிவதுண்டு. அவர்களுள் மூத்த ஒருவனுக்கு ஓர் இடர் வந்தால், அவன் அங்கே அப்போது அழுவதில்லை. அவன் கீழே விழுந்தான். ஒரு கல் தெற்றிற்று. சிறு காயம் உண்டாயிற்று. அதனை அப்போது அவன் பொருள்படுத்தாமல் துடைத்துக்கொண்டு ஓடிவிடுகின்ருன். ஒன்றி ரண்டு நாள் செல்ல அவனுக்குத் தைலமாட்டு கின்ருள் அவன் பாட்டி. அவள் அப்போது பேரனது முழங்காற் புண்ணைக்கண்டு வருந்து கின்ருள். கண் கலங்குகின்ருள். இஃது என்ன எனக் கேட்கின்ருள். அவளது கண்ணீரும் உண்ணீர்மையுமே பேரனது பெருங்கண்ணீராக மாறுகின்றன. தேம்பித்தேம்பி அழத்தொடங்கு கின்ருன் அச்செல்வன். அவனவளோடு சென்று அவ்வடிக்குக் காரணமான கல்லைக் காட்டி அவளால் அக்கல் வெறுக்கப்படும் வரை அவனது அழுகை வளருகின்றது. இஃது உலக இயற்கையல்லவா? இந்நிகழ்ச்சி சிறு குழந்தைகளுக்கு மட்டுமா?

மகாபாரதப் பெருங்கதையில் ஒரு நிகழ்ச் சியைக் காண்கின்ருேம். துரியோதனன் ஒரு காலத்திலும் ஒரு கசடனுலும் செய்யவியலாத ஒரு பெருந் தீமையைச் செய்தான் பாண்டவர் களுக்கு. அவ்வல்லற்பாட்டிற்கும் பேரிழப்பிற் கும் அழுதறியாத வீமன் ஒரு நாள் தேம்பித் தேம்பி அழுதான். அவன் பல ஆண்டுகளுக் குப் பின் அளகைக்குப் போகும் வழியில் அனுமனைக் கண்டனன். அவரிருவரும் உரை யாடி ஒருவரையொருவர் உணர்ந்தனர். வணங்கி மடியில் வீழ்ந்த வீமனை வாரி மார் புறத் தழுவினுன் அனுமன். இது வீமன் என்றும் அனுபவித்தறியாத இன்பமாக இருந்தது. ஏன்? வீமனை வாரித்தழுவும் வல்லமையுடையவர்கள் அவனுக்குரியவர்களில் யாவருமிலர். இந்த அனுமனுகிய அண்ணன் ஆற்றலுக்கே, அந்தக் தம்பி ஓர் இளங் குழந்தை போல இருந்தான். வாரியணைத்த மாண்பன், தம்பி யைக் காடடைந்ததற்குக் காரணமென்னெனக் கடாவினுன். அவன் இரங்கியேங்கித் தமக் குற்ற துன்பத்தை இசைக்கின்ருன்:

''தாயத் தாரும்வெவ் வஞ்சனைச்
சகுனியும் கூடி
மாயத் தாலொரு கவறுகொண்டு
எங்கள் மண் கொண்டார்

நேயத் தாரொடு கானகம்
நேர்ந்தனன் என்ருன்
சீயத்தால் அரசிழந்திடும்
சிம்புள்ஏறு அனையான்.''

வீமனுரைத்த இவ்வுரை ஆருப் பெருந்துக்கத் துள் ஆழ்ந்தவுரை. ஏன் நாடாளுவதும் நல்குர வெய்தலும் வேந்தற்குப் புதுமையல்ல. இடத் தாலோ காலத்தாலோ படையாலோ பலத் தாலோ வெற்றி தோல்வியெய்துதலே வேந் தற்கு இயல்பாவது. வல்லவனை அல்லவன் வஞ்சகத்தால் வென்ருன் என்ருல், அஃது ஆற்றலுடையார்க்கு ஆருத் துயரளிப்பதாகும். ''வஞ்சர் தீவினையினுல் மானமாம் மணியிழந்து, அஞ்சினுர் நெஞ்சுபோல் என்றும் ஆருததே'' என்ருர் பாலைவனத்தின் பாங்குரைக்க வந்த கம்பர். ஒரு சார்த்தூலம் அனைய வீமன், சிங்க மனையவொரு சிற்ருளிடமுந் தோற்காமல், அவன் மாமனுகிய குறுமுயலனைய ஒரு கோமா ளியின் சொக்கட்டான் கருவியினுல் தோற்க நேர்ந்ததெனில், அஃது எத்துணைத் துயரளிப்பது?

வீமனென்ன? இராமனைத்தான் பார்ப்போமே. அஞ்சொற் கிளியை அருநடையன்னத்தைப் பிரிந்த அப்பொழுது அழுகை வரவில்லை இராமனுக்கு. தமக்கெனவே வைத்த ஆற்றலையும், அருளையுமுடைய சடாயுவைக் கண்டபொழுதே வந்தது மாருத அழுகை. அவன் "வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கிரியென வீழ்ந்து அழுதனன்". அவற்றினுல் அவலமும் அன்பும் உடையவர்க்கெல்லாம் எங்கெங்கே அருளும் ஆற்றலும் முன்னிற்கின்றனவோ, அங்கங்கே அழுகையுந் தொழுகையுந் தோன்றுவனவாகுமென ஒரு முடிவிற்கு வருகின்றேம்.

வீமனுக்குத் துரியன் பகை: இராமனுக்கு இராவணன் பகை: அவரிருவருக்கும் நமக்கும் அகிலத்திற்கும் ஐம்புலன்களுமே பெரும்பகை. இவ்வைம்புலப் பகைவர்களைக் கொண்ட நமது அல்லலுக்கும் வகைதேடி வைக்கின்றது நமது வாழ்க்கைக்கு வழிதேடி வைக்க வந்த மனம். இம்மனந் தேடிக் கண்ட பெரு முதல் செருக்கு, இச்செருக்கே எதற்கெடுத்தாலும் நான் நான் என்பதும், எதைப்பார்த்தாலும் எனது எனது என்பதுமான தீவினை விதையைத் திரட்டி வைக்கின்றது. இவற்றின் விளைவே மாருத துன்பம். மாருத இன்பம் விளையவேண்டுமானல், நமக்குள்ள அவலத்தையும் நம்பால் அருளுள்ளாரையும் அவராற்றலையும் நாடவேண்டும். இவ்வாற்றலும் அருளும் நிறைந்ததொரே ஒரு பொருள் தான். பாங்கு நிற்க ஒருவரும்இணையிலாதபண்ணவனை,அவனென்னுது அவரென அழைப்பதே ஒரு குற்றமாகும். ஆனல் அவ்வொருவனை நாம் நேரே அணுகிவிட முடியாது, அவனைநாடி நல்லருள் பெற்ற தம்பிகளையே நாம் நம்பியாக வேண்டும். அப்பெரியரோ எண்ணிலர். எண்ணிக்கையில் மிகுந்த அவர்களை ஏகவசனமாக அழைப்பது என்றும் பொருந்தாதென்பது சேக்கிழார் போன்ற பெருமக்கள் துணிபு. நாம்தான் கம்பன் கழறினுன், வள்ளுவன் உள்ளியுரைத்தான் என நாக்கில் நரம்பின்றிச் செருக்கில் சிறுமையின்றிச் செப்பலுறுகிறேம்.

நாம் நம்மைவிட ஆற்றலும், மாருத அருளும் நிறைந்த ஒருவனை அவனடி அடைந்த அருளாளரை உள்ளியுள்ளி யுணரவேண்டும். அவ்வுணர்வு நமக்குள்ள கீழ்மையையும் இறைவனது மேன்மையையும் தெரிவிக்கும். அத்தெளிவுணறவூறச்சிந்தையில்ஒரு ஏக்கமுண்டாகும். அவ்வேக்கத்தின் மிகுதியே அழுகையாக மாறும். அவ்வழுகையே உழந்துழந்தும் ஒழிக்க முடியாத நம் தீவினைகளைக் கட்டோடு களைவித்து இன்பத்தில் திளைப்பிக்கும். இவ்வினை யொழிப்பை மிக விளக்கமாக வாசகத்தில் வகுத்துள்ளார் வாதவூரார்:

> "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன்
> நாமங்கள் பேசுவார்க்கு
> இணக்கி லாததோ ரின்பமேவரும்
> துன்பமேதுடைத் தெம்பிரான்
> உணக்கி லாததோர் வித்துமேல்வினை
> யாமலென்வினை யொத்தபின்
> கணக்கி லாத்திருக் கோலம்நீவந்து
> காட்டினுய் கழுக்குன்றிலே"

உலரவைக்காத விதை முளைப்பதில்லை. ஒருவன் ஓர் ஆயிரம் மூட்டை நெல்லை விளைவித்தான். அதனுள் ஐம்பது மூட்டை நெல்லை விதைக்கென்று நன்ருகக் காயவைக்கின்ருன். எஞ்சியவற்றுள் காற்பங்கை உணவிற்காகக் கொள்கின்ருன். மீதமெல்லாம் விலைசெய்து செலவிற்காக்கிக் கொள்கின்ருன். இருப்பிலும் வைக்கின்ருன். இருப்பில் வைப்பது சஞ்சிதம்; செலவிற்குக் கொள்வது பிராரத்துவம்: விதைக்கு வைத்து விளைவிப்பது ஆகாமியம். இவை சாத்திர வழக்குச் சொற்கள். அனுபவவினை, இவற்றை நாம் விளக்கமாக இருப்புவினை புதுவினை யெனக் கொள்ளலாம். இம் மூன்று வினைகளையும் ஞானிகள் ஒரு செயலினுலே வென்றுவிடுகின்ருர்கள். அவ்வொரு செயல், நான் எனது என்பதை ஒழிப்பது. எனக்கு அதிருஷ்டம் உண்டு என ஏக்கழுத்தம் கொள்பவன் இருப்புவினைக்கு ஆளாகின்ருன். நான் உண்கின்றேன் உறங்குகின்றேன் சுகமுறுகின்றேன் என்பவன் கர்ம வினையிற் கலக்கின்ருன். நான் முயற்சிப்பேன் முன்னேறுவேன் என்னை எவரும் வெல்லமுடியாதென எண்ணுகின்றவனுக்குப் புதுவினை வளருகின்றது. இந்த நான் எனது என்ற இருதொல்லையையும் தொலைத்தவர்: கர்ம வினையையும் சஞ்சித வினையையும் ஊன்ருமல் அனுபவித்துக் கழித்துவிடுகின்ருர்கள். எதுவும் என் செயலல்லவென உன்னுபவர்களுக்குப் புதுவினையும் போதருவதில்லை. இவர்கள் கணக்கில்லாத இன்ப வெள்ளத்தில் திளைக்கின்ருர்கள்.

''முத்திநெறி யறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா
ருர்பெறுவா ரச்சோவே''.

இப்பாடலால் இப்பெருமானுர் குறிக்கும் மூர்க்கர் யார்? கள்வரா? கொலைஞரா? ஏனைக்கயவரா? இப்பெருமானுர் வரலாற்றில் இப்படிப்பட்ட ஈனர்களோடு இவர் இயங்கியிருக்க ஏதுவில்லையே? இவர் அறநெறி நின்று அரசாளும் கூட்டத்தையே, நான் எனது அகலாதவராதலால் மூர்க்கச் செயலர் எனக் குறிக்கின்றனர் போலும். அடிகளாரது துல்லிய உள்ளத்தை இஃது உணர்த்துகின்றது.

திருவாசகச் செம்மலால் தன்னையுந் தலைவனையும் நன்குணர்ந்து தமது மாட்டாமைக்கும் உட்பகைகளுக்கும் உள்ளம் உடைந்து படிப்படியாக வினையொழிப்புக் காணுதல் எத்தனைப் பிறவியிலாவதோவென ஏங்கிச் சர்வசங்காரவல்லபனுகிய தலைவனுக்கு எனக்கிடர் செய்யும் உட்பகைகளை ஒடுக்கி என்னைக் காத்தல் இமையளவு நேரச் செயலல்லவோவென நினைத்து.

தேனை அமுதத்தைக் கரும்பின் தெளிவை ஒப்பத் தித்திக்கும் எம்மானே: அடியேன் உனை வந்து அடையும் வழி வேறுளதோ? யானும் என் நெஞ்சமும் என் அன்பும் பொய்மையான இப்படியிருப்பினும் இவற்றிக்குக் காரணமான வினையை அகற்ற எனக்கு வேறு வழியேது? அல்லலப்பட்டு அழுவதுதான். அப்படி அழுவேனை ஆட்கொள்வாயல்லவா? என்ற முடிவே மணிவாசகனுர் தாமும் கைக்கொண்டு உலகவர் தம்மைப் பின்பற்ற அருளும் முடிவாகும். இதனை,

''யானே பொய் யென்னெஞ்சும்பொய்
யென்னன்பும்பொய்
ஆனுல் வினையேன் அழுதா லுன்னைப்
பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே னுனைவந்துறுமாறே''

என்ற அருள்மொழியாற் காணலாம். வாழ்க மணிவாசகர் புகழ்! பரவுக மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம்! ★



திருவருட்பா வெளியீட்டு விழாவில், தவத்திரு. ஊரன் அடிகள் அவர்களுக்கு, நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள், ஆடவல்லான் திருவுருவை வழங்குதல்.

# திருவிருத்தத்தில் ஒரு விருத்தம்

'திருமால்நெறிச் செல்வர்'
திரு. தி. வேங்கடகிருஷ்ணன், M.A., B.O.L., F.A.H.

**முன்னுரை: —**

திருவிருத்தம் என்பது திருமாலால், 'மயர் வறமதி நலம்' அருளப்பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவர்களுள் மற்றவர்களைத் தம் அங்கமாகக் கொண்டு அங்கியாக விளங்கும் நம்மாழ்வார் அருளிச் செய்த சிறந்த நூலாகும். நம்மாழ்வார் நால்வேத சாரமாக அருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி ஆகியவற்றுள் இந்நூல் முதல் நூலாக உள்ளது. திவ்வியப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில்; இது ஐந்தாவதாக அமைக்கப்பட்டுள்ளது. இதை இருக்குவேதத்தின் சாரமென்பர்.

**நூற்பெயர்: —**

வடமொழியில் 'வ்ருத்தம்' என்றால் செய்தி அல்லது வரலாறு என்று பொருள்படும். இந்நூலில் நம்மாழ்வார் தமது இறையன்பின் மிகுதி ஆற்றாமை முதலிய செய்திகளை எடுத்துக் கூறுவதால் இதற்கு இப்பெயராயிற்று என்பர். வடமொழி ''வ்ருத்தம் என்னுஞ்சொல்—'' ''அவற்றுள் ஏழாமுயிரிய்யு மிருவும்—'' என்னும் நன்னூற் சூத்திரப் (பதவியல்-20) படி 'விருத்தம்' எனத் திரிந்ததென்பர், 'வ்ருத்தம்' என்னுஞ்சொல் செய்தியைக் குறிப்பதாயினும் ஈண்டுக் கருவியாகு பெயராய், செய்தியைக் கூறும் நூலைக் குறித்தது என்பர். ஆனால் இக்காலத்து ஆராய்ச்சியாளர் இக்காரணத்தை விலக்கி, இந்நூல் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளதால் சைவ சமயத்தில், திருநாவுக்கரசரின் தேவாரத் திருமுறை, பட்டணத்துப் பிள்ளையாரின் பாடல் திருமுறை ஆகியவற்றில் கட்டளைக் கலித்துறையைத் திருவிருத்தம் என்று வழங்கும் முறை உள்ளதாதலின், அவ்வாறே இதுவும் விருத்தம் என்னும் பெயர் பெற்றதென்பர், வடமொழியில், செய்யுளைக் குறிக்கும் 'வ்ருத்தம்' என்னும் பொதுச்சொல் இங்கே சிறப்பாகக் கட்டளைக் கலித்துறை என்னும் ஒருவகைச் செய்யுளை உணர்த்தி இந்நூலுக்குக் கருவியாகு பெயராக ஆயிற்று என்பது இவர்களின் கொள்கை. இனி, இந்நூல், மேன்மை, அழகு முதலியவற்றைக் குறிக்கும் 'திரு' என்னும் அடையேற்றுத் திருவிருத்தமாகியது என்பர். மேலும் இந்நூலிற் பெரும்பாலும் ஆழ்வார் தம்மைக் காதலியாக (திருமாலின் தேவியாகிய, - திருமகளாக)க் கருதிக்கொண்டு, தமக்குற்ற செய்திகளைக் கூறுகின்றாராதலின், திருவிருத்த மென்பதற்குத் திருமகளின் செய்திகளைக் கூறும் நூல் என்றும் பொருள் கொள்வர் ஒரு சார் அறிஞர்.

**நூலின்தன்மை: —**

இந்நூல் அந்தாதித் தொடையில் அமைந்த நூறு பாட்டுக்களைக் கொண்டது. இதன் முதற் பாசுரத்தையும், இறுதிப் பாசுரத்தையும் தவிர ஏனைய பாசுரங்களிலும் அகப்பொருளிலக்கணத்துறை வகைகள் அமையப்பெற்றுள்ளன. பாசுரங்களெல்லாம். வெளிப்படைப் பொருளென்னும் அந்யாபதேசமும், உள்ளுறைப் பொருளென்னும் 'ஸ்வாபதேசமும்' ஆகிய இரு வகைப் பொருள்களையும் தம்மகத்தே கொண்டுள்ளனவாகும். சொற்செறிவிலும், பொருட் பொலிவிலும், கற்பனை வளத்திலும் இது இணையற்று விளங்கும் நூலாகும். பத்தியுடன் பயிலுவோருக்குப் பரமபதத்தை நல்கவல்லது. இறைவனை அகப்பொருள் நெறியால் இனிது துய்ப்பதற்கேற்ற வழிகாட்டியாக உள்ளது. சைவ சமய நூல்களில் மணிவாசகப் பெருமானின் 'திருக்கோவையார்' போன்றது இந்நூல்.

இப்பாசுரங்களில், ஆழ்வார், தம்மைப் பெண்ணாகக் கருதிக்கொண்டு, தாய் போன்றும், தோழி போன்றும், தலைவி போன்றும் மூவகையாற் பேசுவதால் 'பராங்குசர்' என்ற பட்டங்கொண்ட இவரைப் 'பராங்குச நாயகி' என்று நயமுறக் கூறுவர்.

**ஒருபாடல்: —**

இனி இந்நூலில் ஒரே ஒரு பாடலை உற்று நோக்குவோம். மாலைநேரம் கதிரவன் மறைந்து இள நிலா எழுகிறது. சிறிது நேரஞ் சென்றதும் வாடைக் காற்று வீசுகிறது. துணைவருடன் கூடியிருந்தபோது இன்பங் கூட்டிய பொருள்கள் யாவும் அவரைப் பிரிந்திருக்கும்போது கூற்றமாக வந்து கொல்லுமல்லவா ? அவ்வாறே பிரிவுத் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு காதலிக்கு மாலை நேரமும் அதன் பின் வந்த வாடையும் துன்பந் தருகின்றன. அப்பொழுது அவள் உணர்ச்சிகளெல்லாம் ஒன்றுகத் திரண்டு பாட்டாக வெளிப்பட்டது போன்று அமைந்துள்ளது இக்கட்டளைக் கலித்துறை

பாடல் வருமாறு :—

பால்வாய்ப் பிறைப்பிள்ளை ஒக்கலைக்
கொண்டு பகலிழந்த
மேல்பாற் றிசைப்பெண் புலம்புறு
மாலை உலகளந்த
மால் பாற் றுழாய்க்கு மனமுடை
யார்க்கு நல் கிற்றையெல்லாம்
சோல்வான் புகுந்து இதுவோர் பனி
வாடை துழாகின்றதே.

—(திருவிரு-53)

திருமாலையே தனது காதலனுகக் கொண்டு அவனுடைய பிரிவால் வருந்தும் காதலி "பிறைச் சந்திரனுகிய பால் மாருத வாயை யுடைய தன்னுடைய இளங்குழந்தையைத் தனது இடையில் வைத்துக்கொண்டு, கதிரவனுகிய தன் கணவனை இழந்த மேற்குத் திசையாகிய கைம்பெண் வருந்தி அழப்பெற்ற மாலைப் பொழுதானது, உலகளந்த திருமாலின் திருத்துழாய்க்கு ஆசைப்பட்ட நெஞ்சையுடையவர்களுக்கு அருள் செய்த உதவி முழுவதையும் கவர்ந்து கொள்ளும் பொருட்டு வந்து இந்தக் குளிர்ந்த காற்று என்மேல் தடவுகின்றது. அந்தோ ! என் செய்வேன் !" என்று கூறிப் புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"காதலர் இல்வழி கொலைக் களத்து ஏதிலர் போல வரும்" மாலைப் பொழுதுக்கு ஆற்றுமல் வருந்தியிருக்கும் நேரத்தில் அதனினும் கொடியதாக வாடை வந்து வருத்த, அதற்கிரங்கித் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு. வாடையால் உண்டாகும் வருத்தத்தின் மிகுதியை நோக்குமிடத்து, மாலைப்பொழுதாலுண்டாகிய வருத்தம் இனிதென்று தோன்றுதலால், தலைவனைப்பிரிந்து அவனுடைய உடம்பில் சேர்ந்திருந்த திருத்துழாயாகிலும் பெற்று ஆற்றியிருக்க ஆசை கொண்ட தனக்கு மாலைப்பொழுது செய்த உதவியையெல்லாம் பறிக்க வந்த வாடையிது என்கின்ருள். மாலைப் பொழுது துன்பந்தரினும் உயிரைக் கவராது விட்டதென்றும், ஆனல் இவ்வாடையோ அதையும் கவர்ந்துசெல்லத் துழாவுகின்றது என்றும் கூறுகிருள். அவ்வாடையின் கொடுமையைக் கூற எண்ணியவள் வாயால் அதைக் கூறவும் கூசி, 'அது' என்று கையால் சுட்டி, இதற்கு முன்பெல்லாம் வந்த வாடை போலன்றி இது கொடுமையில் ஒப்பற்றது என்பது தோன்ற 'ஓர் பனிவாடை' என்றும், வாடைமட்டு மன்று, பனிவாடை என்று அதன் குளிர்ச்சி மிகுதியையும், நடுங்கவைக்கும் தன்மையையும் உணர வைக்கிருள். மேலும் 'புகுந்து துழாகின்றதே' என்று கூறுவதால், அவ்வாடை, தன்னுடலுள் புகுந்து உயிர் எங்குள்ளதென்று தேடித் துழாவுகின்றது என்று அதன் கொடுமையையும் வகுத்துக் கூறுகின்ருள்.

இனி 'மனமுடையார்க்கு' என்ற தொடர் இப்பாடலில் பயின்றுள்ளதால், அதைக் கொண்டு, இப்பாடலைத் தாயின் கூற்ருகவும் தோழியின் கூற்ருகவும் கொள்ளலாம்.

காதலனைப் பிரிந்து வருந்தும் காதலிக்குக் கண்ணிற்படும் பொருள்களெல்லாம் தன்னைப் போலவே வருந்துவனவாகத்தோன்றுமாதலால் "பகலிழந்த மேல்பால் திசைப்பெண் புலம்புறு மாலை" என்று மேற்குத் திசையைக் கணவனிற் பிரிந்த பெண்ணென உருவகித்துப் பேசுகிருள். 'பால்வாய்ப்பிறைப்பிள்ளை' என்று அதற்கேற்றுற் போல், இளமதியை, இளங்குழந்தையாக உருவகித்துப் பிரிவுத் துன்பத்தின் மிகுதியைக் காட்டித் துன்பவுணர்ச்சியைத் தெளிவுறத் தோற்றுவிக்கின்ருள். இவ்வாறு மாலைக் காலத்தை உருவகித்து வருணித்துள்ள திறமும் நயமும் சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாத இன்ப மளிக்கிறது.

**உட்பொருள்:—**

இனி இக்கவிதையின் உட்பொருளை (ஸ்வாபதேசார்த்தத்தைப்) பார்ப்போம். ஆழ்வாராகிய தலைவி திருமாலாகிய தலைவனைச் சேர்ந்து தெவிட்டா இன்பம் அநுபவிக்கக் கருதி முயற்சி செய்ய, அச்சேர்க்கை உடனே கிட்டாமல் காலதாமதம் ஏற்பட, அதனுல் வருந்துகின்ற அவளுக்கு உலகியல் இன்ப துன்பங்களுக்குக் காரணமான பொருள்களெல்லாம் இடையூறுகளாகத் தோன்றி மென்மேலும் வருத்துகின்ற தன்மையைக் கண்டு இரங்கிக் கூறுகிருள் என்பது, இதன் உள்ளுறைப் பொருளாகும்.

அப்பெருமானைப் பிரிந்த நிலையில், ஒரு சிறிது ஞானமே எஞ்சும்படி மிக்க விளக்கமுடைய விவேகம் குலைந்து இறைவனையே நம்பியிருக்கும் அடியார்களுக்கு, அவனை அடைதற்குரிய காலம் நெருங்கிகுல், ஆற்ருமை மிகும் என்பது "பால்வாய்ப் பிறைப் பிள்ளை யொக்கலைக் கொண்டு, பகல் இழந்த மேற்பால் திசைப் பெண் புலம்புறு மாலை" என்பதனுல் தோன்றும் பால்போன்ற முழு வெண்மதி பூரணஞானத்தைக் குறிக்கும். எனவே 'பால் வாய்ப்பிறை' என்பது மிகக் குறைந்த ஞானத்தைக் குறிக்கும். 'பகல்' அஞ்ஞானமாகிய இருளகன்ற விவேகமாகிய ஒளியைக் குறிக்கும். எனவே அதை இழத்தலாவது விவேகம் குன்றியிருத்தல்.

'மேல் பாற்றிசைப் பெண்' என்பது மற்றையோர்க்கு மேலான வழியைக் காட்டுகின்ற அடியார்களைக் குறிக்கும்,

புலம்புறுதல்= ஆற்ருமை மிகுதல்.

மாலை நாயகனைச் சேருவதற்குரிய காலம்.

'உலகளந்த மால்பாற் றுழாய்க்கு மனமுடையார்க்கு நல்கிற்றை யெல்லாம் சோல்வான் புகுந்து இதுவோர் பனிவாடை துழாகின்றதே'' என்பவை எல்லா அண்டங்களையும் தனக்கே யுரிய பொருளாகவுடைய தலைவனுன திருமாலுடைய சேர்க்கையிலே ஈடுபட்டவர்க்கு அப்பெருமானுடைய அனுபவம் கிடைக்காமையால் வந்த ஆற்ருமைக்கு மேலே, உலகியற் பொருள்களும், இடையூறுகளைக் கொடுக்கும் என்பதைக் குறிக்கின்றன.

'உலகளந்தமால்' என்பது கருத்துடை அடைமொழியாகும். "திருமால் உலகத்தை அளந்தபோது, அவரவர்கள் வேண்டாதிருந்த போதும், எல்லாப் பிராணிகளின் தலையிலும் திருவடிகளைத் தானே கொண்டுவந்து வைத்து, அவற்றைத் தன்னுடைமையாக ஆட்கொண்டவன் வேண்டுகின்ற என்னை ஆட்கொள்ளாமல் விடமாட்டான்'' என்னும் கருத்தை உட்கொண்டுள்ளது.

உள்ளுறைப் பொருளில் இக்கூற்று, ஆழ்வாரின் நிலையைக் கண்டிரங்கித் தாய்போன்று பரிவுடைய வைணவ அடியார்களின் கூற்ருகவும் கொள்ளப்படலாம்.

**முடிவுரை:**

இவ்வாறு பொருட்செறிவு, கருத்தின் ஆழம், பக்தியின் தீவிரம், சொற்களின் ஆட்சி, அணிகளின் அழகு ஆகிய பலவகை நலன்களும் பாங்குற அமைந்துள்ள இது போன்ற பாடல்கள் நவில்தொறும் இன்பம் பயக்குமென்பதற்கும் ஐயமுண்டோ ? ★

---

## செய்திச் சுருக்கம்

**பாவை விழா :** இராமேசுவரம் திரு. இராமநாதசுவாமி திருக்கோயிலில் 15-1-73ஆந் தேதியன்று திருப்பாவை—திருவெம்பாவை விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று காலையில் திரு. மாணிக்கவாசகர், திரு.ஆண்டாள் வீதி உலாக் காட்சி நடைபெற்றது. அவ்வமயம், இராமேசுவரம் திரு.பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் சீருடையணிந்து தேவார இன்னிசையுடன் புறப்பாட்டில் கூட வந்திருந்தார்கள். ஆலய அலுவலர்களும் மற்றும் பக்தர்களும் கலந்து கொண்டார்கள். மாலை 6 மணிக்கு நடைபெற்ற மாநாட்டிற்கு மதுரைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு பழநி அரங்கசாமி தலைமை தாங்கிப் பாடல் போட்டியில் தேர்வுபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினுர்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்கள் அனுப்பிய ஆசிச் செய்தியும் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. வித்துவான் சேலம் ஆர். குமாரசாமி அவர்களும், வித்துவான் மதுரை நீ. சி. சுந்தரராமன் அவர்களும் திருவெம்பாவை, திருப்பாவைபற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினுர்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு எஸ். பி. முனிசாமி நன்றியுரை வழங்க விழா இனிது முடிவு பெற்றது. ★

# திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

தமிழ் நாட்டிற்குத் தனிப்பெருஞ் சிறப்பை விளைவிக்கும் மேன்மையுடையதாகத் திகழ்வது, சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையாகும். ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' என உமாபதிசிவாசாரியரும், ''ஆரா இன்ப அருங்கனி பிழிந்து அதன் சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேன் அமுது'' எனக் குமரகுருபரரும் பிறரும், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை வியந்து பாராட்டியுள்ளனர்.

**சைவசித்தாந்த சாத்திரங்கள் :**

''சைவ சித்தாந்தம்'' என்னும் தலைசிறந்த தத்துவக் கொள்கையினைத் தகவுற எடுத்து விளக்கும் முதன்மை சான்ற தமிழ் நூல்கள், பதினான்கு ஆகும். அவைகள் முறையே திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் இருபாஇருபஃது உண்மைவிளக்கம் சிவப்பிரகாசம் திருவருட்பயன் வினாவெண்பா போற்றிப்பஃறொடை கொடிக்கவி நெஞ்சுவிடுதூது உண்மைநெறிவிளக்கம் சங்கற்பநிராகரணம் எனபன. இவற்றைச் 'சைவ சித்தாந்த சாத்திரங்கள்' அல்லது 'மெய்கண்ட நூல்கள்' என அறிஞர்கள் வழங்குவர்.

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்த அருட்
பண்பு வினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.

எனவரும் பழைய செய்யுள் ஒன்று, இச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பெயரையும் வரிசைப்படுத்தி வழங்கியிருத்தல் காணலாம்.

**திருவுந்தியார் :**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், மிகவும் பழைமை வாய்ந்தவை, திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாருமே யாகும். இவை இரண்டும் ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்திற்கும் முற்பட்டவை. திருவுந்தியார் என்பது திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. இது வீடு அடைவதற்குரிய நெறியையும், அடைந்தோர் தன்மையையும், ஆசிரியரது அருளனுபவத்தையும் 45 கலித்தாழிசையால் விளக்குகின்ற அருமையான சிறப்பு நூல். ''உந்தீபற'' என்னும் சொற்றொடர், இந்நூலின் ஒவ்வொரு தாழிசையின் இறுதியிலும் பயின்று வருவதனால், இதற்குத் திருவுந்தியார் என்று பெயரமைந்தது. 'உந்தீபற' என்னும் தொடருக்கு, ''உம்முடைய தீமையினின்றும் நீங்குவீராக'' என்றும், ''உம்முடைய ஆதார குண்டலியாகிய உந்திக் கனலை உயரப் பறத்தலைச் செய்க'' (உந்திக் கனலை உயர எழுப்புக) என்றும் அறிஞர்கள் பொருள் கூறுவர்.

---

* இது, திருப்பாதிரிப் புலியூர்ப் பாடலேசுவரர் கோயிற் குடமுழுக்குவிழா மலருக்காக எழுதப்பெற்ற கட்டுரை.

—ஆசிரியர்

**திருக்களிற்றுப்படியார் :**

திருவுந்தியார் இயற்றிய திருவியலூர் உய்யவந்த தேவரின் மாணுக்கர், திருவியலூர் ஆளுடையதேவர். இவரது கட்டளையின்படி, இவர்தம் மாணுக்கர் ஆகிய திருக்கடவூர் உய்ய வந்ததேவர், திருவுந்தியாரைத் தழுவி நூறு வெண்பாக்களால், ஒருநூலை இயற்றினர். இயற்றிய தன் பின்னர், தில்லையம்பலவாணரைத் தரிசிக்கச் சென்றுர். அங்குத் தில்லையம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியின் மருங்கு சென்று, தாம் இயற்றிப்போந்த நூலைத் திருக்களிற்றுப்படியின் கண் வைத்துப் பணிந்து, அம்பலவாணரைக் கண்டு தொழுது நின்ருர். இந்நூலின் அருமை பெருமைகளை அனைவரும் அறிந்து கொள்ளும்வண்ணம், அந்தப் படியின்கண் இருந்த சிற்ப மாகிய திருக்களிறு, தன் கையை நிமிர்த்தி இந்நூலை எடுத்து, அம்பலவாணர் திருவடியில் வைத்தது. அதுகண்டு மகிழ்ந்த தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் பிறரும் அதிசயித்து, இந்நூற்குத் திருக்களிற்றுப்படியார் எனப் பெயரிட்டு வழங்கி மகிழ்ந்தனர் என்பது வரலாறு.

திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாகும், சிவஞானபோதத்திற்குப் பிற்பட்டனவாக இருந் திருப்பின், சிவஞானசித்தியார் உண்மைவிளக்கம் சிவப்பிரகாசம் முதலிய நூல்களில், ஆசிரியர் மெய்கண்டார்க்கு வணக்கப் பாடல்கள் அமைந்திருப்பதுபோல, இந்நூல்களிலும் அமைந் திருக்கும். அங்ஙனம் காணப்படாமை ஒன்றே, உந்தியும் களிறும் ஏனைய மெய்கண்ட நூல் களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதற்குப் போதிய சான்ருகும். மேலும் ஏனைய மெய் கண்ட நூல்கள்போலத் தடை விடை முறைகளிலோ, பரபக்கம் சுபக்கம் என்னும் நெறிகளிலோ, பிரமாணம் இலக்கணம் சாதனம் பயன் முதலியவைகளிலோ, அதிகரணம் முதலிய நூற் பிரிவு களிலோ அமைந்திருக்கக் காணுமையும், இவ்விரு நூல்களும் மற்றைய மெய்கண்ட நூல்களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதனை வலியுறுத்தும். இவ்விரு நூல்களும், சிவாநுபூதி பற்றிய செய்திகளை மாத்திரம் தமக்குரிய பொருளாக மேற்கொண்டு, இனிய எளிய பாடல்களால் இயற்றப்பெற்றுள்ளன.

(1) திருவுந்தியார் சுருங்கிய சூத்திரமும், திருக்களிற்றுப்படியார் விரிந்த பேருரையும் போல, அமைந்தனவாகும். திருவுந்தியாரின் சொல்லையும் பொருளையும் முழுவதும் தழுவியே, திருக்களிற்றுப் படியார் இயன்றுள்ளது. திருவுந்தியாரின் பொருளை விரித்துரைத்து நன்கினிது விளக்குவதே, திருக்களிற்றுப்படியாரின் நோக்கமும் அமைப்பும் ஆகும். இவ்விரு நூல்களுக்கும் இடையேயுள்ள கருத்தொருமைத் தொடர்பினை உணர்த்துதற்கு, இங்கு ஒருசில சான்றுகளை மட்டும் கண்டறிய முயல்வோம்.

அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தாஞகத் தந்ததென் றுந்தீபற

என்னும் திருவுந்தியார் செய்யுள், இறைவனே ஆசிரியஞக வந்து உயிர்களுக்குத் தாஞகும் தன்மை அருளுதலை யுணர்த்துகின்றன.

அகளமய மாய்நின்ற அம்பலத்தெம் கூத்தன்
சகளமயம் போல்உலகில் தங்கி-நிகளமாம்
ஆணவ மூல மலம்அகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனுய் வந்து

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுள், மேலைத் திருவுந்தியார் செய்யுளை முழுவதும் தழுவியது.

திருவுந்தியார் அகளம் என்றதை 'அகளமயமாய் நின்ற அம்பலம்' எனவும், சகளம் என்ற தைக் 'கூத்தன்' எனவும், யாரும் அறிவரிது அப்பொருள் என்றதைப் 'பாகத்து அருள் வடிவும் தானும் ஆகிய அந்தப் பெருவடிவை' எனவும், தாஞக என்றதைப் 'பேருலகில் தங்கி என்னு டனுய்வந்து' எனவும், தந்தது என்றதை 'நிகளமாம் ஆணவமூலமலம் அகல ஆண்டனன் காண், மனவும் திருக்களிற்றுப்படியார் விரித்துரைத்திருக்கும் பொருத்தமும் சிறப்பும், போற்றற்பாலன.

(2) காணப்படும் நிலையில் எழுந்தருளிய குருவின் திருவுருவத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, அவர் செய்தருளும் தீக்கையால் சஞ்சித கன்மத்தையும், உடற் சார்பான இன்ப துன்ப துகர்ச்சியால் பிராரத்த கன்மத்தையும், குருவின் அருட்பார்வையால் ஆகாமிய கன்மத்தையும் போக்கிக் கொண்டவர்கள், மீண்டும் உடல் சார்பாக மலவாசனையை எய்தப்பெற மாட்டார்கள். அவர்களுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லையாகும். இக்கருத்தைப் பின்வரும் திருவுந்தியார் செய்யுள் உணர்த்துகின்றது.

கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற

இத்திருவுந்தியார் செய்யுளை அடியொற்றியே, பின்வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அழகுற அமைந்திருத்தல் காணலாம்.

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவரே
அண்டத்தின் அப்புறத்த தென்னுதே,—அண்டத்தின்
அப்புறமும் இப்புறமும் ஆரறிவுஞ் சென்றறியும்
எப்புறமுங் கண்டவர்கள் இன்று''

'கண்டதைக் கொண்டு' என வருதற்குரியது 'கண்டத்தைக்கொண்டு' என வந்தது கண்டது-காணப்பெற்றதாகிய குருவடிவம். கருமம் முடித்தவர் சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்னும் வினைகளைப் போக்கிக் கொண்டவர்கள்.

(3) மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்று சொல்லப்பெறும் ஆறு ஆதாரங்களில், அவ்வவற்றிற்கு முறையே உரிய விநாயகர் பிரம்மா விட்டுணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னும் கடவுளரைத் தியானித்துச் சமாதி நிலை அடைந்து, அந்நிலை கைவந்த பின்னர், நிராதாரயோகம் என்று சொல்லப்பெறும் ஆன்மசொரூபத்தை உணர்ந்து, ஒரு பற்றும் இன்றி, அதற்கு மேற்பட்ட நிலையாகிய சிவயோக நிலையைச் சென்று அடைந்து, சன்மார்க்க நெறியாகிய ஞானபூசையில் தலைப்படுக. இந்நிலையே நின்மல சிவனைக் கூடும் இடமாகும். இக்கருத்தினை.

ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற

எனவரும் இனிய திருவுந்தியார் செய்யுள் அழகுறத் தெளிவிக்கின்றது. இத்திருவுந்தியார் செய்யுளையே முழுவதும் தழுவி,

ஆதார யோகம் நிராதார யோகமென
மீதானத்து எய்தும் விதியிரண்டே—ஆதாரத்து
ஆக்கும் பொருளலே யாக்கும் பொருளாமொன்று
ஆக்காப் பொருளேயொன் றும்

என வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அமைந்திருத்தல் ஒப்புநோக்கி உணருதற்குரியது ஆறு ஆதாரங்களிலும் அவ்வவற்றிற்கு முறையே உரிய தெய்வங்களைத் தியானித்துச் செய்யும் யோகம் ஆதாரயோகம். இந்நிலை கைவந்த பின்னர் ஆதாரங்கள் அன்றி, ஆன்ம சொரூபத்தை உணர்ந்த நிலையில் அழுந்திச் சமாதி எய்தும்நிலை நிராதாரயோகம் எனப்படும். இந்த ஆன்ம சொரூபம் உணர்ந்த பிறகு சிவசொரூபம் தெளிந்து அதனோடு கூடப்பெறுதல் மிக மேலான பெருநிலை யாதலின், அது மீதானம் (மேலான இடம்) எனப்பட்டது. சிவத்தின் தடத்த இயல்பும் சிறப்பியல்பும் உணர்ந்து அதில் அழுந்துதலே மேலான சிவயோகமாகும். இதன்விளைவே சிவத்துடன் ஒன்றித் திளைத்தலாகிய சிவபோகம் எனப்படும். அதுவே முடிந்த முடியான நிலை, ஆதலின் அதனை 'விமலற்கு இடம்அது' என்றார்.

(4) ஞானம் குரு அருளினால் பெறப்படும் மெய்யுணர்வு, அம்மெய்யுணர்வினின்றே சிவ போகம் ஆகிய பேரின்பம் விளைகின்றது. ஆதலில் குருவருளால் பெறும் சிவஞானத்தை வித்து (விதை) என்று பெரியோர்கள் கூறுவர். பசு பாச ஞானங்கள் மேலும் மேலும் பிறப்பிறப்புக்கள் உண்டாவதற்குக் காரணமாக அமையும். ஆதலின் 'முளை' என்று அவை உருவகமாகக் கூறப் பெறும். இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் என்பனவற்றை முறையே அடைந்து, சிவஞானம் தலைப்பட்டவர்கள், பிறப்பிறப்புக்களுக்குக் காரணமாகிய பசு பாச ஞானங்கள் நீங்கப் பெற்றவராவர். அந்நிலையில் அவர்கள் எதன் மாட்டும் விருப்பு வெறுப்பு இலராய்த் தமக்கென ஓர் உணர்வும் ஒரு செயலுமின்றி, எல்லாம் சிவமயமாகக் கண்டு, அச்சிவ உணர்விலேயே ஒன்றித் திளைத்து நிற்பார்கள். அந்நிலையில் அவர்கள் ஒருவகையில் பித்தர் எனவும் திகழ்வர். இங்ஙனம் சிவஞானத்தில் விருப்பமும், பசு பாச ஞானங்களில் பற்றின்மையும் எய்தப் பெறாதவர்கள், இவ்வுலகில் அடையக்கூடிய நன்மை எதுவுமில்லை. இக்கருத்தினை,

வித்தினைத் தேடி முளையைக்கை விட்டவர்
பித்தேறி னார்கள்என் றுந்தீபற
பெறுவதங் கென்பெணே உந்தீபற

எனவரும் திருவுந்தியார் செய்யுள் சிறப்புற விளக்குகின்றது, இச்செய்யுளின் பொருளை அடி யொற்றி அதன் சொற்பொருள் நலங்களை உள்ளடக்கிக்கொண்டு,

வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்தும்அதன் அங்குரமும் மெய்உணரில்—வித்ததனில்
காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யால்அற்றார் பேறு.

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அமைந்திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

(5) பொதுவாகச் சிவத்தைத் தலைவனாகவும், சீவனைத் தலைவியாகவும் கூறுவது உண்டு. சிவபிரான் பேரின்ப வடிவமானவன். வீடுபேற்று நிலையில் சீவன் சிவத்தை அனுபவிக்கின்றது. ஆன்மா இன்பத்தை நுகர்வதாகவும், சிவம் இன்பத்தைக் கொடுப்பதாகவும் உள்ளது. ஆதலின் இன்பத்தைத் தருகின்ற சிவத்தைக் தலைவியாக உருவகித்து, 'பேரின்பமான பிரமக்கிழத்தி' என்றும் பெரியோர்கள் கூறுவர். சீவன் முத்தனின் பொருட்டுப் பேரின்ப வடிவமான பராசத்தியு டன் பேரின்பப் பிழம்பாகச் சிவன் நிற்கும். அங்ஙனம் நிற்றலால், சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்ற சீவன்முத்தன். தான் எனச் சிவம்என வேறின்றி நின்று, சிவபோகம் துய்க்கின்றான். இங்ஙனம் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய சிவம், யாவர்க்கும் கீழாம் ஆன்மாவை ஆட் கொண்டு, யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைக்கின்றது. இதனையே,

பேரின்பமான பிரமக் கிழத்தியோ(டு)
ஓரின்பத் துள்ளான்என் றுந்தீபற
உன்னையே ஆண்டதுஎன் றுந்தீபற

என்னும் திருவுந்தியார் செய்யுள் தெரிவிக்கின்றது. இத்திருவுந்தியார் செய்யுளின் சொல் பொருள் சொற்றொடர்களையே முழுவதும் தழுவிப் பின்வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அமைந்திருத்தல் காணலாம்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளபடி—பேரின்பம்
கண்டவரே கண்டார்; கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை

(6) ஆன்மா பாசங்களுடன் கூடிப் பொறிபுலன்களை அறியப்புகுகின்றது. ஆன்மா சிற்றறிவுடையதாய் எதிரே உள்ள பொருளை மட்டுமே சுட்டியறிய வல்லதாகலின், அது இது என எதனையும் ஒவ்வொன்றாகவே சுட்டி உணரும். அங்ஙனம் அறியினும் ஒன்றினும் நிலைத்தலில்லாது, நினைப்பும் மறப்பும் மாறிமாறி அடையும். பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் பிறழ உணரும். இத்தகைய சிற்றுணர்வினின்றும் நீங்கி, எல்லாப் பொருளையும் அறியவல்ல சிவத்துடன் கலந்து ஒன்றி நின்று ஆன்மா சிவமாய் நிற்கும். சுட்டறிவு நீங்கிய ஆன்மா, சிவோகம் பாவனையின் பயனைத் தலைப்பட்டு, அவிழ்ந்த சடையானாகிய சிவபிரானைப்போல, முற்றறிவாகிய வியாபக அறிவு பெற்று நிற்கும். இவ்வுண்மையை,

அதுஇது என்ன(து) அனைத்தறி வாகும்
அதுஇது என்றறிந் துந்தீபற
அவிழ்ந்த சடையான்என் றுந்தீபற.

என்னும் திருவுந்தியார் செய்யுள் செவ்விதின் விளக்குகின்றது. இத் திருவுந்தியார் செய்யுளின் பொருளையே முழுவதும் தழுவி, பின்வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அமைந்துள்ளது.

அதுஇது என்றும் அவன்நானே என்றும்
அதுநீயே ஆகின்றாய் என்றும்—அதுவானேன்
என்றும் தமையுணர்ந்தா ரெல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்வரோ உற்று.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினைப் பேதம் அபேதம் பேதாபேதம் எனப் பலவகையில் சமயங்கள் கூறும். ஆன்மாவும் சிவமும் இரண்டாகவே இருக்குமென்றும், சிவம் என்று ஒரு முதலில்லை; ஆன்மாவே சிவம் என்றும், நீயே சிவமாய் நின்றாய் என்றும், நான் சிவத்துடன்கூடிச் சிவமாகி விட்டேன் என்றும், பலர் பலவாறு கூறுவர். ஆனால் தம்மை உணர்ந்த சிவயோகியராகிய சீவன்முத்தர்கள், சிவத்துக்கும் ஆன்மாவுக்கும், உள்ள தொடர்பினை இரண்டாகவோ ஒன்றாகவோ இன்னதென்று அறுதியிட்டுக் கூறமாட்டார்கள். சிவமும் உயிரும் ஒன்றாகாமலும், இரண்டாகாமலும், ஒன்றும் இரண்டும் இன்றாகாமலும், அத்துவித சம்பந்தமுற்று நிற்கும் என்பது திருக்களிற்றுப்படியார்.

(7) தத்துவ நூல்களில் அவன் என்னும் சேய்மைச் சுட்டுப்பெயர்ச்சொல் கடவுளையும், இவன் என்னும் அண்மைச் சுட்டுப் பெயர்ச்சொல் ஆன்மாவையும் குறிக்கும். சிவம் மிக மேலாம் தலைமைப்பாடுடையது. ஆன்மா மிகக் கீழான தன்மையது. எனினும் மிக மேலாம் தலைவனாகிய சிவபிரான், மிகக் கீழாய ஆன்மாவுடன், தன்னுடைய பேரருட் பெருந்தன்மையால் கூடிநின்று, மலமாசுகளைப் போக்கி, ஆட்கொண்டு அருள்வார். இங்ஙனம் தன்பாற் சிவம் கலந்து நிற்றலால் சிவத்தை உணர்ந்து சிவமாகிய ஆன்மா சிவாநுபவம் நுகர்ந்து நிற்குமேயன்றிச் சிவத்தைப் போலப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்து தொழில்களைச் செய்ய வல்லதன்று. வீடுபேற்று நிலையிலும், ஆன்மா சிவத்திற்கு அடிமையாகுமேயன்றி, அஃது ஒரு போதும் சிவத்திற்குச் சமமாகமாட்டாது. இக்கருத்தைப் பின்வரும் திருவுந்தியார் செய்யுள் எளிய இனிய முறையில் சுருக்கமாகத் தெளிவுற விளக்குகின்றது.

அவன்இவன் ஆன(து)அவனருளால் அல்ல(து)
இவன்அவன் ஆகான்என் றுந்தீபற
என்றும் இவனேஎன் றுந்தீபற

இத்திருவுந்தியார் செய்யுளின் சொற்பொருட் கருத்துக்களை அடியொற்றி,

அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல(து)
எவனவனாய் நிற்கின்ற தேழாய் —அவனிதனில்
தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்
ஈன்றிடுமோ சொல்லாய் இது''

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் அருளிச் செய்யப்பெற்றுள்ளது. வீடுபேற்று நிலையிலும் சிவம் சிவமே. ஆன்மா ஆன்மாவே. ஆன்மா சிவமாகாது. சிவன் ஆன்மா ஆகாது; முத்தியிலும் முதலுக்கு அழிவில்லை. ஆதலின் முத்தியில் சிவன் ஆண்டான்; ஆன்மா அடிமை. சிவன் மாமரம் போல்வன். ஆன்மா அதனைப் பற்றுக்கோடாகக்கொண்டு வளர்கின்ற புல்லுருவி போலும். மாமரம் கனி தரவல்லதாக விளங்கும். புல்லுருவி அத்தன்மையதன்று. புல்லுருவி மாமரத்தின் சாரத்தை ஈர்த்து வளருமேயன்றி, தனியே வாழவல்லதாகாது. அதுபோல் சிவத்தைச் சார்ந்தே, சிவம் இயக்க, ஆன்மா இயங்கி நிற்கும். அதற்கெனத் தனியே ஓர் ஆற்றலும் செயலும் இல்லை என்பது இப்பாடலின் கருத்து.

(8) உயிர் என்னும் சொல், உயிர்ப்பது (மூச்சுவிடுவது) என்னும் சொல்லினின்று தோன்றிய தென்பர் சிலர். ஆனால் உய் (உய்க, கடைத்தேறுக) என்னும் பகுதியினின்று தோன்றியதாக வும் கொள்ளுதல் கூடும். உய்தி பெறுவதற்கு உரியது உயிர் எனலாம். உய்தியாவது, பிறப்பு இறப்புத் துன்பங்களைக் கடந்து, பிறப்பிறப்பில்லாப் பேரின்ப வாழ்வாகிய வீடுபேற்றை அடைதல். வீடுபேறு முத்தி எனவும், வழங்கப்படும். முத்தியை அடைதற்குரிய முதன்மையுடைய பொருள் உயிர் அல்லது ஆன்மாவாதலின், முத்தி முதல் என்பது உயிரைக் குறிக்கும். உயிர்களைப் பண்டே செம்பிற் களிம்புபோலப் பற்றியிருப்பது ஆணவமலம். ஆணவமலத்தின் செயல்கள், மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என ஏழு வகைப்படும். அஞ்ஞானம் அல்லது அறி வின்மையாகிய மோகம் உயிரின்பால் படரும்படிச் செய்வதாகலின், ஆணவமலம், மோகக்கொடி எனப் பெறும். ஆணவமலம் மோகக்கொடி எனப்பெறவே, அது படரும் உயிர் மரமாக உருவகிக் கப்பெற்று, 'முத்திமுதல்' (முதல்-மரம்) எனக் குறிக்கப்படுவதாயிற்று. உயிராகிய மரத்தில் ஆணவ மலமாகிய கொடி படர்ந்து வளரவே, அங்கு ஒரு பழம் பழுப்பதாயிற்று. அப்பழம் அத்திப் பழம் அத்தி என்னும் சொல் ஒருவகைப் பழத்தையும், எலும்பு (அஸ்தி), எலும்பினால் ஆகிய உடல் என் பவற்றையும் குறிக்கும். உயிரை ஆணவமலம் பற்றியிருப்பதன் விளைவாக, உயிர்களுக்கு உடல் (பிறவி) என்னும் அத்திப்பழம் தோன்றிப்பழுக்க நேர்கின்றது. பழங்களுள் நன்மை தருவனவும் உண்டு, கேடு விளைவிப்பனவும் உண்டு. இவ்வுடலாகிய அத்திப்பழமோ நன்மை தராமல் தீமை விளைவிக்கும் நச்சுப் பழமாகும். ஆதலின் வினைகளைப் பெருக்கி நரகத்திற் செலுத்தும் நச்சுப் பழ மாகிய அத்திப்பழத்தை உண்ணாமல், அது பழுத்தற்குக் காரணமான ஆணவ மலக்கொடியை ஞானமாகிய வாளால் வேருடன் அறுத்து எறிந்து, சிவத்துடன் கூடுதலாகிய முத்திப்பழத்தை உண்ணுதற்கு நாம், முயலுதல் வேண்டும்.

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற

எனவரும் திருவுந்தியார் செய்யுள், மேற்கூறிய கருத்துக்களை இனிது உணர்த்துகின்றது. இச்செய்யுளின் கருத்தையே மேலும் தெளிவாக உருவகம் செய்து, பின்வரும் திருக்களிற்றுப் படியார் செய்யுள் உணர்த்துதல் காணலாம்.

முத்தி மரத்திலே மோகக் கொடிபடர்ந்து
அத்தி பழுத்தது அருளென்னுங்—கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று.

9. திருவுந்தியார் என்னும் சிறந்த சிவாநுபவச் செம்பொருள் நூலை இயற்றியருளிய திருவியலூர் உய்யவந்ததேவநாயனார், தம்முடைய ஞானசிரியர் தமக்குச் செய்தருளிய நல்ல பல தண்ணளித் திறன்களை நினைந்து,

சிந்தையின் உள்ளும்என் சென்னியி னுஞ்சேர
வந்தவர் வாழ்கஎன் றுந்தீபற
மடவாள் உடனேஎன் றுந்தீபற

என்னும் செய்யுளால், தமது ஞானசிரியரைப் புகழ்ந்து போற்றி வணங்குகின்றார். தாம் ஒரு சிறிதும் மறக்கலாகாதவகையில் தண்ணளி செய்து, தம்மனத்தகத்தில் என்றும் நிலைபெறுதலின், 'சிந்தையின் உள்ளும்' என்றும்; திருவடித் தீக்கை செய்து தம்மை ஆட்கொண்டருளியமையால் 'என்சென்னியிலும் சேர வந்தவர்' என்றும் புகழ்ந்து கூறிப் போற்றினர். குருவின் திருவடியைச் சென்னிமேலும், அவர் வழங்கிய அருள் உரையினைச் சிந்தையிலும் என்றும் பிரியாமல் வைத்துப் போற்றுவது கடமையாதலின், 'சிந்தையினுள்ளும் என் சென்னியிலும் சேர வந்தவர்' என்று தன் ஞானசிரியரைப் புகழ்ந்தார் எனினுமாம். சிவமே குருவாய் வருதலானும், சிவத்தின் திருவருளே அவர்தம் சத்தியாகிய தேவி எனப் போற்றப்படுதலானும், ஞானசிரியரையும், அவர்தம் திருவருட் பெருக்கையும், ''வந்தவர் வாழ்க'' என்றும்; ''மடவாடனேன வாழ்க'' என்றும் வணங்கி வாழ்த்தி மகிழ்ந்தார். இப்பாடலின் சொற்பொருட் சுவைநலங்களையே தழுவிப் பெரிதும் அடியொற்றி,

சிந்தையிலும் என்றன் சிரத்தினலும் சேரும்வண்ணம்
வந்தவனை மண்ணிடைநாம் வாராமல்—தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்
ஏதுசொலி வாழ்த்துவேன் யான்

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள், சிறப்புற இயன்றிருத்தல் யாவரும் ஒப்புநோக்கியுணர்ந்து இன்புறுதற்குரியது.

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றல் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள், திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும், சைவ சித்தாந்தத் தத்துவ நூல்களாக, மெய்கண்டர் அருளிய சிவஞான போதத்திற்கும் முற்பட்டுத் தோன்றியவை என்பதும்; சிறந்த சிவானுபூதிச் செல்வர்களால் இயற்றப்பட்டவை என்பதும், எளிய இனிய நடையில் சுருக்கமாகவும், அழகாகவும் அமைந்தவை என்பதும்; திருவுந்தியார் சூத்திரம் போல விளங்க, அதற்கு ஒரு விரிவுரையாகிய பாடியம் போல அமைந்ததே திருக்களிற்றுப்படியார் என்பதும்; இங்கு ஏற்றபெற்றி இயன்ற அளவு ஒரு சிறிது சுருக்கமாக விளக்கப்பெற்றன. இந்நாளில் மேலைநாட்டு மக்களும், நம்முடைய நாட்டுத்தத்துவ நூல்களிலும் கொள்கைகளிலும் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு, அவற்றை ஆராய்ந்து கற்கவும் கற்று வியக்கவும் தலைப்பட்டு வருகின்றனர் * இந்நிலையில், நாம் அவற்றை எங்ஙனம் போற்றிக் கற்றுப் பயனடைய முற்படக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பது, சொல்லாமலே விளங்கும். எனவே தெய்விக நலஞ்சான்ற திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இவ்விரு நூல்களையும் பிறவற்றையும், நாம் நயந்தினிது கற்றுப் போற்றிப் பயன் கொள்ள முற்படுவோமாக!

---

* "When we read with attention the poetical and philisophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths and truths so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has some times stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this Cradle of the human race the native land of the highest philosophy".

—**Victor Cousin.**

# பரிசு பெறும் கோயில்களின் பெயர்ப் பட்டியல்

தூய்மைப் பொலிவில் சிறந்து விளங்கியமைக்காக, 1971-ஆம் ஆண்டின் சுழல்கோப்பை-நிரந்தரக்கோப்பைப் பரிசு பெறுவதற்குத் தகுதியுடையன என்று, பின்வரும் கோயில்கள் நமது அறநிலைய ஆணையர் அவர்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளன. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு :

| எண் | பகுதியின் பெயர் | | தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கோயிலின் பெயர் |
|---|---|---|---|
| 1. | துணையாணையர், சென்னை | — | திரு. இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில், சோளிங்கபுரம், வடஆற்காடு மாவட்டம். |
| 2. | துணையாணையர், கோவை | — | திரு கலியுக வரதராசப் பெருமாள் கோயில், கள்ளக்குறிச்சி, உடையார்பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம். |
| 3. | துணையாணையர், மதுரை | — | திரு சுப்பிரமணியசுவாமி கோயில் திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம் |
| 4. | துணையாணையர், தஞ்சாவூர் | — | திரு நவநீதேசுவரர் கோயில், சிக்கல்; நாகப் பட்டினம் வட்டம், தஞ்சை மாவட்டம். |
| 5. | உதவியாணையர், சென்னை | — | திரு பிரசன்னவெங்கட நரசிம்ம சுவாமி கோயில், சைதாப்பேட்டை, சென்னை |
| 6. | உதவியாணையர் வேலூர் | — | திரு சோளபுரியம்மன் கோயில், வேலூர் நகர் மற்றும் வட்டம், வடஆற்காடு மாவட்டம். |
| 7. | உதவியாணையர், கடலூர் | — | திரு இலட்சுமிநாராயணப் பெருமாள் கோயில், இராம்பாக்கம், விழுப்புரம் வட்டம், தென்னாற்காடு மாவட்டம். |
| 8. | உதவியாணையர், காஞ்சிபுரம் | — | திரு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், இளையனூர் வேலூர், உத்திரமேரூர் வட்டம் செங்கற்பட்டு மாவட்டம். |
| 9. | உதவியாணையர், நாகப்பட்டினம் | — | திரு பிரமபுரீசுவரர் கோயில், சீத்தமங்கை, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். |
| 10. | உதவியாணையர், தஞ்சாவூர் | — | திரு ஒற்றைத் தெருவிநாயகர் கோயில், மன்னார்குடி நகர் மற்றும் வட்டம், தஞ்சை மாவட்டம். |
| 11. | உதவியாணையர், திருநெல்வேலி | — | திரு நதிக்கரை சுப்பிரமணியசுவாமி கோயில், ஸ்ரீவைகுண்டம் நகர், திருநெல்வேலி மாவட்டம். |
| 12. | உதவியாணையர், சேலம் | — | திரு வேலாயுதசுவாமி கோயில், கனககிரி, சங்ககிரிவட்டம், சேலம் மாவட்டம். |

# அறுவகைச் சமயங்கள்

அறுவகைச் சமயங்கள் என்னும் தொடர், தொன்று தொட்டு வழங்கிவருவது. "அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும் வீடு பேறாய் நின்ற விண்ணோர் பகுதி கீடம் புரையும் கிழவோன்" என்று திருவாசகத்திலும், "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறும் குறியது உடைத்தாய் வேத ஆகமங்களின் குறி இறந்து......" என்று சிவஞான சித்தியாரிலும் வருவது காணலாம்.

சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ்வறு வகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களிற் பலவேறு வகைகளிற் குறிப்பிட்டுள்ளனர். 1. சைவம் சிவபிரானை வழி படுவது. 2, வைஷ்ணவம் விஷ்ணுவை வழி படுவது. 3. சாக்தம் சக்தியை வழிபடுவது. 4. சௌரம் சூரியனை வழிபடுவது. 5. காணபத்தியம் கணபதியை வழிபடுவது. 6. கௌமாரம் குமரன் ஆகிய முருகனை வழி படுவது, எனச் சிலர் விளக்கம் கூறுவர்.

சமயங்களைப் புறப்புறம் புறம் அகப்புறம் அகம் என நான்கு வகைப்படுத்தி, ஒவ்வொன்றினையும் பின்வருமாறு ஆறுவகையாகவும் கூறுவது உண்டு. 1. புறப்புறம்: உலகாயதம் மாத்தியமிகம் யோகாசாரம் சௌத்திராந்திகம் வைபாடிகம் ஆருகதம். 2. புறம்: தருக்கம் மீமாஞ்சை ஏகான்மவாதம் சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம். 3. அகப்புறம்: பாசுபதம் மாவிரதம் காபாலம் வாமம் வைரவம் ஐக்கிய வாதம். 4. அகம்: பாடாணவாதம் பேத வாதம் சிவசமவாதம் சிவசங்கிராந்தவாதம் ஈசுர அவிகார வாதம் சிவாத்துவிதம், எனத் தனித்தனியே அறுவகைச் சமயங்கள் இவை யிவை எனச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், பொதுவாக 'அறுவகைச் சமயங்கள்' என இந்தியத் தத்துவ நூல்களிற் குறிக்கப்பெறுவன, நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாஞ்சை வேதாந்தம் என்னும் ஆறுமேயாம். இவற்றை "ஷட் தரிசனங்கள்" என வழங்குவர். இவைகளை விளக்கியருளிய ஆசிரியர்களின் பெயர்கள் முறையே பின்வருவனவாகும். 1. அக்கபாதர் (கோதமர்)—நியாயம். 2. கணாதர்—வைசேடிகம். 3. கபிலர்—சாங்கியம். 4. பதஞ்சலி—யோகம். 5. சைமினி—மீமாம்சம். 6. வாதராயணர் (வியாசர்)—வேதாந்தம்.

பழங்காலத்திலேயே இந்திய நாடானது, கிரேக்கர் உரோமர் முதலிய மேலைநாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இரு நாடுகளும் தமக்குள் பல பொருள்களைக் 'கொண்டும் கொடுத்தும்' கலந்து உறவாடி மகிழ்ந்தன. இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞர் கூறியிருக்கும் ஒப்புமையாய்வுக் கருத்துரை, இங்கு நாம் உணர்ந்து மகிழ்ந்து பயன் பெறத்தக்க செய்தியாகும்.

> "இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் பெரிபடெடிக் கொள்கையையும், வைசேடிகம் ஐயோனிக் கொள்கையையும், மீமாம்சம் பிளேட்டோவின் கொள்கையையும், சாங்கியம் இட்டாலிக் கொள்கையையும், யோகம் ஸ்டாயிக் கொள்கையையும், பெரிதும் ஒத்துள்ளன. எனவே கோதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்சையும், சைமினி சாக்ரட்டீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும்; கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்"*

இங்ஙனமே கோல்ப்ரூக், ரிச்சர்ட் கார்பே முதலிய பல அறிஞர்களும் கருதுகின்றனர். மேனாடு கீழ் நாடுகளின் தத்துவக் கொள்கைகளையும், நூல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து உணர விரும்புபவர்களுக்கு, இக்குறிப்பு மிகவும் பயன்படும்.

(தொடரும்)

—ஆசிரியர்

---

* "Of the philosophical Schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second, sometimes called Vaisesika, to the Ionic; the two Mimamsas, of which the second is often distinguished by the name of Vedanta, to the Platonic; the first Samkhya to the Italic; and the second of Patanjali to the Stoic philosophy; so that Gautama corresponds with Aristotle, Kanada with Thales, Jaimini with Socrates, Vyasa with Plato, Kapila with Pythogoras, and Patanjali with Zeno".

—Sir William Jones,
**Works : Vol I, p. 360.**

# பெரியாழ்வார் திருமகள்

மகாவித்துவான், பத்மவிபூஷண்

திருமிகு: பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்.

''திருப்பாவை பாடிய ஆண்டாள், பெரியாழ்வார் பெற்றெடுத்த புத்திரியுமல்லள், வளர்த்த புதல்வியுமல்லள்; ஆண்டாள் என்று ஒரு வியக்தி இருந்ததே கிடையாது; ஆழ்வார்கள் தங்களுடைய ஆண் தன்மையை விட்டுப் பெண் தன்மையை அடைந்து பேசுகிற முறைமையும் ஒன்று உண்டாதலால், இந்த முறைமையைக் கைப்பற்றின பெரியாழ்வார் தம்முடைய மனோ பாவனையையே ஒரு பெண்ணாக வைத்துப் பேசியிருக்கிறார். இது காவிய மனோபாவத்தின் கற்பனையாகும்'' என்று சிலர் கூறுவது உண்டு. இதன் தத்துவத்தைப் பலர் அறிய விரும்புவதால் இங்கு இதைப்பற்றி நாம் விவரிக்கின்றோம்.

நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் தங்களுடைய பக்திப் பெருங்காதல் புறவெள்ளமிடப் பெற்று அதனால் ஆண்மையை இழந்து பெண்மை எய்தித் தாய்பாசுரமாகவும், மகள் பாசுரமாகவும், தோழிபாசுரமாகவும் பேசி இருப்பது உண்மையே. அப்படிப் பேசும் இடங்களில் பதிகத்தை முடிக்கும் போது, ''குருகூர்ச் சடகோபன் சொன்ன'' என்றும், ''பரகாலன் கலியன் சொன்ன'' என்றும், தம்முடைய சொந்த வாக்காகவே முடிப்பதுதான் காண்கிறது. அதனால் அப்பதிகத்தில் கூறப்பட்டவர் ஆழ்வாரே என்பது தேறும்.

இதே வகையில் பெரியாழ்வாரும் தம்முடைய சொந்தப்பிரபந்தமான (பெரியாழ்வார் திருமொழியென வழங்கும்) திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவை மூன்றாவது நூறில், 7, 8 பதிகங்களாகும். அவை இரண்டும் தாய்பாசுரமாகவே பேசியவை. அவற்றில் பெரியாழ்வார் மகளாகவைக்கப்பட்டு அம்மகளினது ஈடுபாட்டைத் தாய் சொல்லி முறையிடுவதாக அமைந்திருக்கிறது. அவற்றுள் முதல் பதிகம் ''ஐயபுழுதியுடம்பளைந்து இவள் பேச்சும் அலந்தலையாய்'' என்று தொடங்குவது. இரண்டாவது பதிகம் ''நல்லதோர் தாமரைப் பொய்கை நாண்மலர் மேல் பனிசோர, அல்லியுந்தாதும் உதிர்ந்திட்டு அழகழிந்தால் ஒத்ததாலோ என்மகளை எங்குங் காணேன், மல்லரை அட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள் கொலோ'' என்கிற பாசுரம் தொடங்கியுள்ளது. 'எனது மகள் என் வீட்டை விட்டு எம்பெருமான் பின்னே போய்விட்டாள் போல் தெரியவருகிறது' என்று இதில் கூறப்படுகிறது. இப்பதிகத்திலேயே நான்காவது பாசுரம் — ''ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்'' (3—8—1) என்பதாம்.

இப்பாசுரங்களை நோக்குமிடத்து, பெரியாழ்வார் தம்முடைய ஒருபெண்பிள்ளையின் செய்தியை எடுத்துக் கூறுவதாக மேலெழுந்த பார்வையில் தோன்றும். இப்படியே உண்மையாகச் சிலர் கொள்வதும் உண்டு. ''ஒரு மகள் தன்னை உடையேன்'' என்று பெரியாழ்வார் தாமே தமக்கு ஒரு பெண் இருந்ததாகவும் அவளைச் செங்கண்மால் கொண்டு போனதாகவும் கூறுகிறார் என்று அரிகதா காலட்சேபகாரர்கள் கூறுவதுண்டு. இது மிகவும் தவறான கொள்கை ஏனெனில், இங்கு மகள் என்று சொல்லுவது பெண் பாவனையை அடைந்த பெரியாழ்வாரையேயல்லது ஆண்டாளை அன்று. ஆண்டாளைப் பற்றின குறிப்பு அந்தப் பதிகங்களில் இல்லை.

இங்கு சிலர் கேட்கக்கூடும். ஆண்டாளென் றொரு வியக்தி இருந்ததேயில்லை என்று சிலர் சொன்னாலும், பெரியாழ்வார் மகளாக ஆண்டாள் இருந்ததாகவே சித்தாந்தம். ஆதலால் ஒரு ''மகள் தன்னையுடையேன்''


என்கிற பாசுரமானது அத்திருமகளை நோக்கியே அவதரித்ததென்று கொண்டால் என்ன? பெரியாழ்வார் தம்முடைய மகளின் பக்தியை வெளியிடவும் பிராப்தமாகையால், உண்மையில் தமக்குப் பரமபக்தியே வடிவெடுத்த புதல்வியொருத்தி இருக்கிறபடியாலும் அவளைப் பற்றியே "ஒருமகள் தன்னையுடையேன்" என்கிற பாசுரம் அவதரித்ததாகக் கொண்டால் பிசகு என்ன என்று சிலர் கேட்கக்கூடும்.

இதற்குச் சொல்லுகிறோம். கேண்மின். இப்பதிகத்தின் முடிவு பாசுரம் எங்ஙனே உள்ளதென்று பார்க்கவேணும். "தாயவள் சொல்லிய சொல்லைத் தண்புதுவைப்பட்டன் சொன்ன" என்றன்றோ உள்ளது. தாய் பாசுரமாக வைத்துப் பெரியாழ்வார் தமது நிலைமையைத் தாம் பாடின பதிகம் என்றே இதற்குப் பொருளாதலால், இப்பதிகத்திலும் இதன் முற்பதிகத்திலும் பெரியாழ்வாரே மகளாக வைத்துப் பேசப்பட்டிருக்கின்றாரே அல்லது ஆண்டாளைப் பற்றின குறிப்பே இங்குக் கிடையாதென்பது ஐயமின்றித் தெளிந்த பொருள். ஆண்டாளுடைய பாசுரங்களாகத் திருப்பாவையென்றும் நாச்சியார் திருமொழியென்றும் இரண்டு திவ்யப்பிரபந்தங்கள் பிரசித்தமாயிருக்க, அவற்றுட்புகுந்து விஷய மருமங்களைச் சிறிதும் நோக்காமல் ஆண்டாளென்றொரு வியத்தியே இருந்ததில்லை என்றால் இதற்கு அர்த்தமுமுண்டா?

திருப்பாவையின் முடிவுப் பாசுரத்தில் "பட்டர்பிரான் கோதை சொன்ன" என்றுள்ளது. அடுத்த நாச்சியார் திருமொழியின் பதினன்கு பதிகங்களிலும் முடிவில் "விட்டுசித்தன் கோதை சொன்ன" "குழற்கோதை கூறிய" "சுரும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த" "வில்லைத் துலைத்த புருவத்தாள் வேட்கையுற்று மிக விரும்புஞ்சொல்" என்றிங்ஙனே கூறிமுடித்திருப்பதால், தனியே கோதை என்றொரு பெண்மணி இருந்தே தீரவேண்டும். இங்குப் பிறர் என்ன சொல்லக்கூடுமென்னில், திருப்பாவை என்றும், நாச்சியார் திருமொழி என்றும் இரண்டு பிரபந்தங்கள் இருப்பது உண்மையே; இவையும் பெரியாழ்வார் தாமே பாடியவை என்கிறோம்—என்று சொல்லக்கூடும். இது பொருந்தாது என்பதை நிருபிக்கிறோம்.

பெரியாழ்வார் பாடியவை இரண்டு பிரபந்தங்கள் என்றும், ஆண்டாள் பாடியவை இரண்டு பிரபந்தங்கள் என்றும், உள்ள விவகாரத்தைத் தள்ளி, பெரியாழ்வார் அருளியவை நான்கு பிரபந்தங்கள் என்று கொள்ளவேணுமென்பதே பிறருடைய கொள்கையென்று தேறி நிற்கும். பெரியாழ்வார் திருப்பல்லாண்டிலும், அதற்கடுத்த திருமொழியிலும் பதிகந்தோறும் "விட்டுசித்தன் சொன்னமாலை" "பட்டர்பிரான் சொன்ன பாடல்" என்றே கூறிவைத்து, திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் அங்ஙனம் கூறுது, "பட்டர்பிரான் கோதை சொன்ன" "விட்டுசித்தன் கோதை சொன்ன" என்று இப்படி கூறினது வஞ்சனையின் பாற்படும் அன்றோ. இக்குற்றத்திற்கு ஆளாகார் பெரியார். பெரியாழ்வாரே பாவனையின் கனத்தால் பெண்மை எய்தி இவை பாடினரென்னின், பிற இடங்களிற் போலப் பட்டர்பிரான் பாடலாகவும், விட்டு சித்தன் சொல்லாகவுமே நிகமனப் பாசுரம் அமையுமே அல்லது "சுரும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த" என்றும்" "வில்லைத்துலைத்த புருவத்தாள் விரும்பிய சொல்" என்றும் இவ்வகைகளிலேயே அமைந்திருப்பது பொருந்தாது. பெரியாழ்வாரே இப்படி மாறுபாடாக அமைத்தாரென்னில், அவரை வஞ்சனைக் குற்றத்திற்கு ஆளாக்க வேண்டியே வரும்.

நாச்சியார் திருமொழியினுட் புகுந்து நோக்குவோமாயின், பெரியாழ்வாரிற் காட்டில் வேறுபட்ட ஆண்டாள் என்னும் வியக்தி உள்ளபடி உண்டென்பது தெளிவாகப் புலப்படும். மூன்றிடங்கள் எடுத்துக்காட்டுகிறோம். அத்திருமொழியில் (10-4). "கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரனர், சொல்லும் பொய்யானல், நானும் பிறந்தமை பொய்யன்றே" என்றொரு பாசுரமுள்ளது. இதற்குப் பூருவாசாரியர்கள் என்ன பொருள் கூறியிருக்கிருர்கள் என்று தெரிந்துகொள்ள விரும்பி, அவர்களது வியாக்கியானங்களை நாம் தேடவேண்டும். நம்முடைய தமிழறிவு கொண்டு நாமே பார்ப்போம். இப்பாசுரத்திற்கு என்ன பொருள் சொல்லக் கூடுமென்று ஒவ்வொரு தமிழரும் பார்க்கலாம். "நானும் பிறந்தமை பொய்யன்றே" என்ற அளவுக்குப் பொருள் உணரவேணும். வீபீடணனை நோக்கிப்




திருத்தணிகையில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் திரு. கலைஞர் அவர்கள் யாத்திரீகர் விடுதி இணைப்புப் பாதையைத் திறந்துவைத்தல். (9—1—73)



திருத்தணிகை முருகன் கோயில் திருப்பணித் துவக்க விழாவில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் திரு. கலைஞர் அவர்களும், மாண்புமிகு அன்பில் தருமலிங்கம் அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (9-1-73)



திருத்தணிகை முருகன் கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. புலவர் மி. ச. நடேசன் அவர்கள், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் திரு. கலைஞர் அவர்களுக்கு, வெள்ளிவேல் வழங்குதல். (9—1—73)



திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிர மணியம் B.A.. B.L. அவர்களுக்குச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தல்.

பெருமாள் கடற்கரையில் அபயமளித்தது அவ னொருவனுக்கேயன்று; அவனை வியாஜமாகக் கொண்டு அவதரித்த சரமச்லோகமானது பக்தர்களெல்லாரும் தேறியிருப்பதற்குப் பாங் காகும். ஒருகால் அந்த வார்த்தை, பொய்யாக ஆகிவிட்டாலுங்கூட (அதாவது, அவ்வழியால் பேறு தவறினுலுங்கூட) நானும் பிறந்தமை பொய்யன்றே—நான் ஒரு மகா பாகவதருடைய பெண்ணாய்ப் பிறந்திருக்கிறேனே; இப்பிறப்பு பொய்யாகமாட்டாதே. (அதாவது, இவ்வழி யாலே பேறு தவறிப் போகமாட்டாதன்றோ) என்பதே இவ்விடத்திற்கு ஏற்ற பொருளாகும். இப்பாசுரத்தைக் கொண்ட பதிகத்தின் இறுதிப் பாசுரமும் இப்பொருளையே வற்புறுத்தும். அப் பாசுரமும் முக்கியமான தாகையால் அதனையும் விவரிக்கிறோம்.

''நல்லவென் தோழி நாகணைமிசை நம்பரர்,
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்
செய்வதென்?
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள்
தேவரை,
வல்லபரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே''

இதன் பொருளாவது, என் இழவுக்கு என்னைக் காட்டிலும் முன்னம் நோவுபடுகின்ற தோழியே! பராத்பரரான எம்பெருமான் ஒருவருக்கும் எட்டவொண்ணுத பெருமையை உடையராயி ருப்பார்; நானே 'நீசனேன் நிறையொன்று மிலேன்' என்னும்படி சிறுமைக்கு எல்லை நில மாயிருப்பவள். அவர்க்கும் எனக்கும் பர்வத பரமாணுக்களோட்டைவாசி போந்திருக்குமான பின்பு அவரைப் பெறுதற்கு நம்மாற் செய்யலா வது உண்டோ? ஆனாலும் எனக்குப் பேற்றுக்கு வழியுண்டுகாண். சர்வ வியாபக னுக அப்பெருமானைத் தம் திருவுள்ளத்திலே அடக்கிக் கொண்டு, அதனால் விஷ்ணுசித்த ரென்று விருது வகிக்கும் நமது பெரியாழ்வார் தமக்குத் தேவராய் இருக்கின்ற அப்பெருமானை ஓரிசையைச் சொல்லியழைக்கவுமாம்; கிழிய றுத்து வரப்பண்ணவுமாம்; திருமஞ்சனத்தைச் சேர்த்துவைத்து, 'நாரணா நீராட வாராய்' என்றழைக்கவுமாம்; திருக்குழல் பணியைச் சமைத்து வைத்துக் குழல்வார வாராய் என்ற ழைக்கவுமாம்; பூச்சூட வாராய் என்றழைக் கவுமாம்; திருவந்திக் காப்பிட அழைக்கவுமாம்; தமக்குப் புருஷகாரமானாரை முன்னிட்டு வரப் பண்ணவுமாம்; ஏதேனுமாக, அவர்க்குச் சாத்தியமான ஒருவகையாலே வருவித்தா ராகில் அவ்வழியாக அப்பெருமானைச் சேவிக்கப் பெறுவோம்; நம்முடைய சிறுமை காரணமாக நாம் இழக்கவேண்டியதில்லை; நமக்கு ஆசிரிய ரான பெரியாழ்வாருடைய வலிமையினால் நாம் பெற்றே தீருவோம்—என்பதாம்.

அன்றி (11–10) ''செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெரு வார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பார்'' என் கிற பாசுரமும் முக்கியமாகக் குறிக்கொள்ளத் தக்கது. எம்பெருமான் அர்ச்சுன வியா ஜத்தாலே திருத்தேர்த் தட்டிலே நின்றருளிச் செய்த யாதார்த்தமான ''மாமேகம் சரணம் வ்ரஜ'' என்கிற சரம சுலோக வார்த்தையை எங்கள் பெரியாழ்வார் கேட்டு தந்நிஷ்டராயி ருப்பார்—என்பது இதன் பொருள்.

ஆக இப்பாசுரங்களைப் பெரியாழ்வார் தாமே எழுதிவைத்தார் என்னில், இது சிறிதும் பொருந்தமாட்டாதன்றோ. இப்பாசுரங்களை நோக்கின பின்பு கோதை அல்லது ஆண்டா ளென்கிற வியக்தி தனிப்பட இல்லை என்கிற வார்த்தை தோன்ற நியாயமில்லை.

பெரியாழ்வார் ஆண்டாள் என்று இரண்டு வியக்திகளாகக் கொள்வதைவிட ஒரே வியக்தி யிடத்தில் இந்த இரண்டு விசேஷங்களையும் கொள்வது குறைவா?'' என்று சிலர் வினவுவர். இது சிறிதும் அர்த்தமில்லாத வார்த்தையே. இரண்டு வியக்திகளென்று ஐயமின்றி வியக்தமாகத் தெரிந்திருக்க, ஒரே வியக்தியாகக் கொள்வது பிசகன்றோ. எதைக் கொண்டு ஒரே வியக்தியாகக் கூறுவது? கூறு வதற்கு அற்பமான ஆதாரமாவது இருந்தால் கூறலாம். பிரமாணம் சிறிதுமில்லையே.

ஆழ்வார்களுள் பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசையார் திருப்பாணர் ஆகிய இவ்வைவரது பாடல்களில் இன்னார் பாடிய தென்கிற குறிப்பேயில்லாமலிருக்கிறது. நம்மாழ்வாருடைய நான்கு பிரபந்தங்களுள் திருவாசிரியத்திலும் பெரிய திருவந்தாதியிலும் ஆழ்வார் பெயர் குறிப்பிடப்பெருமலிருக்கிறது. திருமங்கையாழ்வார் பாடிய ஆறு பிரபந்தங் களுள் திருவெழு கூற்றிருக்கையிலும் இரண்டு

திருமடல்களிலும் ஆழ்வார் பெயர் குறிப்பிடப் பெருமலிருக்கிறது. இவற்றைக்கொண்டு நவீனர்கள், அந்தப் பிரபந்தம் அவர் பணித்த தன்று இந்தப் பிரபந்தம் இவர் பணித்ததன்று; என்று எதையாவது சொல்லியும் எழுதியும் போந்தால்' பிரமாணிகர்களான பெரியார் ஏற்றுக் கொள்ளார்' என்கிற ஒரு வார்த்தையோடு முடிக்க வேண்டியிருக்கும். பிரக்கிருத விவாத விஷயமோ, அப்படிப்பட்டதன்று, ஆண்டாளென்பாள் தனி வியக்தியே என்பதற்கு நாம் கீழே காட்டியவை தவிர இன்னமும் பல காட்டுகிறோம்.

ஆண்டாளுடைய அவதாரத் தலமான ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நாச்சியார் திருமாளிகை என்றே பெயர் வழங்கி வருகின்றது. சூடிக் கொடுத்த நாச்சியாரென்று அவளுக்குத் திருநாமமாவதற்கு ஒரு ஐதிஹ்யம் பிரசித்தமானது. அதனை வேதாந்த தேசிகரும் தாமருளிய கோதாஸ்துதியில் பலகால் எடுத்துக் கூறியுள்ளார். பிள்ளைப் பெருமாளையங்காரும் தமது பிரபந்தங்களிற் பேசியுள்ளார். திவ்யசூரி சரிதம் குருபரம்பரா பிரபாவம் முதலான பல கிரந்தங்களிலுமுள்ளது. அவ்வைதிஹ்யத்தின்படி நாளைக்கும் அத்தலத்தில் நாடோறும் காலையில் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை மேளதாள மரியாதைகளுடன் வடபெருங்கோயிலுடையானென்னும் பெருமாளுடைய சந்நிதிக்குக் கொண்டுபோய்ச் சமர்ப்பிப்பது முதற் காரியமாக நடைபெற்று வருகின்றது.

ஆண்டாள் தனது திருமொழியில் "மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவிவைத்தேன். நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்" என்று கூறியிருந்ததை அப்படியே உண்மையான அனுட்டானமாக நடத்தி வைத்து உடனே ஆண்டாளையும் சேவிக்க எழுந்தருளின ஸ்ரீராமானுசரை ஆண்டாள் அர்ச்சாவதார சமாதியைங் கடந்து எதிர்கொண்டு வந்து எம் அண்ணரே! என்று தழுவிக்கொள்ள அன்று முதலாகப் "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்று உலகமெல்லாம் வாழ்த்த நேர்ந்திருக்கின்றது. "கோதற்ற ஞானத் திருப்பாவை பாடிய பாவை தங்கை" என்றார் ஆன்றோரும்.

இப்படி இன்னமும் பல ஹேதுக்களுண்டு. ஆனால் இவையெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஒரு சங்கேதமான ஐதிஹ்ய வாதங்கள் என்று பிறர் இலேசாகச் சொல்லிவிடவுங் கூடும். அப்படிச் சொல்லும் அவர்களைத் திருத்தவேணுமென்கிற எண்ணம் நமக்குச் சிறிதுமில்லை. இவ்விஷயங்களில் நம்பிக்கை உள்ளவர்களுக்குத் தோன்றும் கலக்கங்களைப் பரிகரிக்கவே நாம் இஃது எழுதினது. ஸ்ரீராமாயணத்தைப் பார்ப்பவர்கள் சிலர் 'ராமனும் அவதரித்ததில்லை, சுக்கிரீவாதிகளுமில்லை, ராவணாதிகளுமில்லை. நல்ல சில நீதிகளை உணர்த்துவதற்காகவே ராமாயணம் கற்பனை செய்யப்பட்டது' என்று கூறுபவர்களும் எழுதிவைத்திருப்பவர்களும் உளரன்றோ. அன்னவர்களைப் பற்றி நாம் என்ன செய்ய நினைப்போம்? ஒன்றுமில்லை. "கருவிலே திருவிலாதீர்; காலத்தைக் கழிக்கின்றீரே!" என்கிற திருமாலைப் பாசுரத்தையே அநுசந்தானஞ் செய்து நிற்போம்.

பிரகிருத விஷயத்தில் ஐதிஹ்யங்களில் ஒன்றையும் இவர்கள் நம்பவேண்டா, நாச்சியார் திருமொழியிலுள்ள பாசுரங்கள் ஆண்டாளென்கிற வியக்தியை அவசியம் ஸ்தாபித்துத் தரும். "நானும் பிறந்தமை பொய்யன்றே" என்று அவள் கூறியிருந்தும் அவள் பிறந்தது பொய்யேயென்று கூறுவதுதான் ஆச்சரியம். இதனில் மிக்கோரயர்வு உண்டே?

# நம்பெருமாள் வடிவநலன்

பகவன் அல்லது பகவான் என்னும் சொல், திருமாலையே சிறப்பாகக் குறிக்கும் என்பர் பெரியோர். 'பகம்' என்னும் சொல் ஆறு எனப் பொருள்படும். ஆறு சிறந்த குணங்களை யுடையவன் பகவான் எனப்படுவான். ஆதலின் பகவான் என வழங்கப்பெறும் திருமாலுக்குரிய பெரும் சிறப்பியற் குணங்கள் ஆறு என நூல்கள் கூறும். அவைகள் முறையே, வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம் சௌலப்பியம் ஞானம் சக்தி என்பன வாகும்.

(1) வாத்சல்யம்: தான் ஈன்ற கன்றின் அழுக்கை இனிமையாக உண்டு அதற்குத் தன் பாலைக் கொடுத்து வளர்த்து, அதன்பால் தீங்கு புரிவோரை எதிர்த்துக் காக்கும் பசுவைப் போன்று, தன்னைப் புகலடைந்த அடியவனின் குற்றங்களைக் குணமாகக் கொண்டு, தன் சிறந்த குணங்களால் அவனை உய்யச் செய்து அவனுக்குப் பிறரால் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் காத்தருளும் இறைவனின் எல்லை யற்ற பரிவுத் தன்மை. வத்ஸம்–கன்று. வாத்ஸல்யம்-கன்றின்பால் பசுவுக்குள்ள பரிவு போன்ற பெருங்கருணைத் திறம்.

(2) சுவாமித்துவம்: தன்னைச் சிறிதும் கருதாமல் புறக்கணித்துவிட்டு ஓர் அடியவன் உலகியல் நுகர்ச்சிகளையே தேடி அலைந் துழன்று திரியினும், தன் உடைமையான அவனைத் தான் விடாமல் பின்தொடர்ந்து சென்று, அவன் நெஞ்சினுள் மறைந்துறைந்து நின்று நலம் செய்யும் பண்பு. சுவம்–உடைமை, பொருள். சுவாமி-உடையவன், பொருளுக் குரிய தலைவன்.

(3) சௌசீல்யம்: தான் உயர்வற உயர் நலம் உடையவனேயாயினும், எத்துணை இழிந்தவர்களோடும் எத்தகைய வேறுபாடும் இன்றிப் புரையறக் கலந்து பழகி உறவாடும் தன்மை. சு-நல்ல, சீலம்-பண்பாடு.

(4) சௌலப்பியம்: இறைவன் தன்னு டைய அழகிய திருவுருவை உயிர்களின் கண் களுக்கும் புலனுகுமாறு செய்தருளும் எளிமை யியல்பு. சுலபம்–எளிமை.

(5) ஞானம்: உயிர்கள் தீவினைகளிற் செறிந்து கிடத்தலையும், அவைகள் வீடு பேற்றை அடைதற்கேற்ற தகுதியினை எய்தும் நிலைகளையும் பிறவற்றையும் எல்லாம் ஒருங்கே யுணரவல்ல பெருந்திறம்.

(6) சக்தி: உயிர்களின் குற்றங்களைக் களைந்து குணங்களை வளர்த்து ஆட்கொண்டு காத்தருளுதற்குரிய பேராற்றல்.

ஈசுவரனுக்குள்ள இந்த ஆறு பெருங் குணங்களும், திருவரங்கத்தில் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள்பால் அமைந்திருத்தலை, நாம் தெளியக்காணலாம். பெருமானின் இடக்கை தன் திருவடிகளைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருப்பது, உயிர்களின் குற்றங்களையே குணமாகக் கொண்டு யாவரை யும் ஏற்றருளும் வாத்சல்யத்தைப் புலப்படுத்து கின்றது. முகத்தில் காணப்படும் புன்முறுவல் எத்துணை இழிந்தாரோடும் கலந்து உறவாடிப் பழகும் சௌலப்பியத்தைக் குறிக்கின்றது, பகவானின் தலையில் ஒளிரும் திருமுடி, அவனே எல்லோரையும்விட ஞானம், சக்தி ஆகியவை களினுல் உயர்ந்த தலைவன் என்னும் சுவாமித் துவத்தை உணர்த்துகின்றது. எல்லோருக் கும் கட்புலனுகும் வண்ணம் தாமரை மலரில் மெல்லென ஊன்றி நிற்கும் இறைவனது திருவடிகளின் நிலை சௌசீல்யத்தைச் சுட்டுகின்றது.

மேற்கூறிய கருத்துக்கள் பலவும் பிள்ளைலோகாசாரியர் என்னும் திருமால்நெறிப் பெருஞ் சான்றோரால், செவ்விதின் விளக்கப் பெற்றுள்ளன. ''குற்றங்கண்டு வெறுவாமைக்கு

வாத்சல்யம்; காரியம் செய்யும் என்று துணிகைக்குச் சுவாமித்துவம்; சுவாமித்துவம் கண்டு அகலாமைக்குச் சௌசீல்யம்; கண்டு பற்றுகைக்குச் சௌலப்பியம்; விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஞானசக்திகள். இவையெல்லாம் நமக்கு நம் பெருமாள் பக்கலிலே காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்விய ஆயுதங்களும், வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும், முறுவலும், ஆசனபத்மத்திலே அழுத்தின திருவடியுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். இரட்சகத்துவம் போக்கியத்துவம் ஆகிய இரண்டும் பெருமாள் திருமேனியிலே தோற்றும்'' என்று பிள்ளை லோகாசாரியர், தாம் இயற்றிய முமுட்சுப்படி என்னும் நூலில் விளக்கியிருத்தல் அறிந்து மகிழ்தற்குரியது.

—ஆசிரியர்

—★—

---

## செய்திச் சுருக்கம்:

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் 65-வது பிறந்தநாள் விழாவும், அவரது சிவத் தொண்டின் 25-வது ஆண்டு பூர்த்தியும், அண்மையில் சென்னை மைலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் அவ்வாலய அறங்காவலர் குழுவினரால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அறங்காவலர் குழுவின் சார்பில் திருவாசகமணிக்குத் திரு செல்வ. நடராஜ முதலியார் பாராட்டுப் பத்திரம் வாசித்து அளித்தார். விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை உயர் மன்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், திருவாசகமணி அவர்களின் ஆழ்ந்த ஆர்வம் மிக்க சிவத் தொண்டினையும், அவரது இணையற்ற, கவர்ச்சி மிக்க பேச்சின் தனிப் பாணியினையும், நுணுக்கமான நகைச்சுவையையும் விஞ்ஞான, ஆராய்ச்சி மிக்க விளக்கங்களையும் ஆங்கில மொழியின் ஆற்றலையும், வெளி நாட்டுப் பிரச்சாரகளையும், அழுத்தமான பக்தியையும் மிக மிக விளக்கிப் பாராட்டிப் பேசிவிட்டு, ஆலயத்தின் சார்பில் அவருக்குப் பொன்னுடை ஒன்றினை அணிவித்துக் கௌரவித்தார். அதன் பின்னர் உயர்மன்ற நீதிபதிகள் திரு. கே. எஸ். வெங்கட்ராமன் அவர்களும் திருவாசக மணியைப் பலவாறு புகழ்ந்து பாராட்டி விட்டு ஒவ்வொருவரும் அவருக்கு ஒரு பொன்னுடையை முறையே அணிவித்தனர். கடைசியாக உயர்மன்ற நீதிபதிகள் திருவாளர்கள், இராமமூர்த்தி அவர்களும், பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்களும், தமிழ்நாடு திட்டக் கமிஷன் உறுப்பினர் டாக்டர் பி. நடராஜன் அவர்களும், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் திரு. டி. செங்கல்வராயன், அமெரிக்கன் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் பி. மாணிக்கம், ஸ்ரீலஸ்ரீ. ஞானப்பிரகாச சுவாமிகள், தருமபுர ஆதீனத்தின் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் ஆகியோரும் முறையே திரு. பாலசுப்பிர மணியத்தின் இணையற்ற, அளவற்ற, சர்வதேச சைவத் தொண்டினையும், தமிழ்ப் பணியையும் பாராட்டிப் பேசி, அவர் விரைவில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று தமிழ்ப் பண்பாட்டையும் சைவ, வைணவக் கொள்கைகளையும் பரப்பி வரவேண்டும் என்று ஆசி கூறினர்.

திருவாசகமணி தம்மைப்பாராட்டிய அனைவருக்கும், விழாவை நடத்திய ஆலய அதிகாரிகளுக்கும் தமது, நன்றி தெரிவித்துப்பேசிய பின், ஆலய நிர்வாக அதிகாரி திரு டி. நாகராஜன் அவர்கள் நன்றி கூறியதோடு விழா இனிது நிறைவுற்றது.

# கரையேறவிட்ட முதல்வர்

முன்னுரை :

திருநாவுக்கரசர் சமண சமயத்தை விடுத்துச் சைவ சமயம் சார்ந்தமைக்காக, மகேந்திர வர்ம பல்லவன் (கி.பி. 600—630) அவரைக் கல்லொடு சேர்த்துக் கட்டி, கடலில் தள்ளினான். அப்போது திருநாவுக்கரசர், "சொற்றுணை வேதியன் சோதி வானவன், பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக், கற்றுணைப் பூட்டி ஓர்கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே" என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடிச் சிவபிரானைத் துதித்தார். சிவபிரான் திருவருளால், அக்கல்லே தெப்பமாக மாறியது. திருநாவுக்கரசர் அத்தெப்பத்தில் மிதந்து திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில், கடற்கரை ஓரத்தே அமைந்திருந்த ஒரு குப்பத்தின்கண் கரையேறினார். திருப்பாதிரிப்புலியூரில், அப்பகுதி இன்றும் அவ்வருள் நிகழ்ச்சியின் நினைவாகக் "கரையேறவிட்டகுப்பம்" என்று வழங்கி வருகின்றது. இதனால் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியுள்ள தோன்றுத்துணை நாதருக்குக் 'கரையேறவிட்ட முதல்வர்' என்றும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது.

சிவஞான சுவாமிகள் :

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மாதவச் சிவஞானசுவாமிகள், ஒரு சமயம் திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு நாள் அங்குக் கோயிலின் முற்றத்தில் கூடிய புலவர் பேரவையில்—செல்வர் ஒருவர் நூறு பொன்கொண்ட ஒரு பொற்கிழியை வைத்து, "கரையேறவிட்ட முதல்வா! உன்னை அன்றியும் ஓர் கதியுண்டாமோ?" என்னும் அடியை ஈற்றடியாகக் கொண்டு ஒரு செய்யுள் இயற்றித் தருபவருக்கு, அப்பொற்கிழியைக் கொடுப்பதாக அறிவித்தார். அப்பேரவையில் இருந்த புலவர் ஒருவரும், அன்று மாலைவரையும் அச்செய்யுளை இயற்றி முடித்திலர். அதை அறிந்த ஓர் அந்தணன், சிவஞானசுவாமிகள் பால் வந்து பணிந்து, அச்செய்யுளை இயற்றித்தந்து, தனது வறுமையைத் தீர்த்து உதவிசெய்து அருளும்படி பெரிதும் வேண்டிக் கொண்டான். சிவஞானசுவாமிகள் அவன்பால் இரக்கம் கொண்டு,

வரையேல்! தவிட்டமுதம் சேந்தன்இட
உண்டனை; வல்லினம் என்றாலும்,
உரையே! றஇட்ட முதல் ஆகுமோ?
எனைச் சித்து என்றுரைக்கில் என்னாம்?
நரையேறு அவிட்டமுதல் நாளவனுக்
கொண்டு, நறும் புலிசை மேவும்
கரையேற விட்டமுதல்வா! உன்னை
அன்றியும்ஓர் கதியுண் டோமா?

[வரையேல்—இகழ்ந்து தள்ளிவிடாதே.
சேந்தன்—சேந்தனார்! திருப்பல்லாண்டு பாடியவர்.
சித்து—அறிவுள்ள பொருள்.
அவிட்ட முதல்நாள் — திருவோணம்.
என்ஆம்—என்ன பயன்?
புலிசை—திருப்பாதிரிப்புலியூர்.
நரை ஏறு—வெள்ளை எருது. கதி—துணை.]

என்று முடித்து ஓர் ஏட்டில் எழுதித் தந்தார். அதனை அவ்வந்தணன் பெற்றுக் கொண்டு சென்று, அவையினரிடம் காட்டி, பொற்கிழியைப் பெற்றுத் தன் வறுமை தீர்த்தான்.

பாடலின் பொருள்:

"நல்ல திருப்பாதிரிப்புலியூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள கரையேறவிட்ட முதல்வரே! அவிட்டம் என்னும் நாளுக்கு முன்னதாகிய திருவோணம் என்னும் நாளுக்கு உரிய தெய்வமாகிய திருமாலை வெள்விடையாகக் கொண்டிருப்பவரே! சைவத் திருமுறைகளுள் ஒன்பதாவதாகிய திருவிசைப்பாவின்கண் திருப்பல்லாண்டு என்னும் திருப்பதிகம்

பாடிய சேந்தனார் என்னும் சிறந்த அன்பர் நிவேதனம் செய்த தவிட்டினால் ஆகிய களிய முதத்தை உண்டு மகிழ்ந்தவரே! வல்லின எழுத்துக்கள் என்று கூறப்பட்டாலும், 'ற', 'ட' என்னும் எழுத்துக்கள், 'கசதப' என்னும் மற்றைய நான்கு வல்லெழுத்துக்களைப்போல, மொழியின் முதற்கண் அமைந்து வருமோ? அமைந்து வரா; அதுபோலத் தத்துவ நூல்கள் பதியாகிய நின்னையும் பசுவாகிய என்னையும் சித்துப்பொருள் என்று கூறுமாயினும், அதனால் யாது பயன்? பதியாகிய நீயும், பசுவாகிய யானும் எவ்வாற்றாலேனும் சமமாதல் இயலுமோ? நீயே கூறுக. ஒருவாற்றாலும் யான் நின்னோடு சமமாகேன். ஆதலின் தகுதியற்றவன் என்று நீ என்னைத் தள்ளிவிடாதே; உன்னைத் தவிர எனக்கு வேறு ஒரு துணையும் உண்டோ? என்பால் இரங்கி என்னைக் காப்பாற்றியருள்க'' என்பது. சிவஞானசுவாமிகள் இயற்றியளித்த அச்சிறந்த செய்யுளின் பொருளாகும். உருவிற் சிறியதாயினும், இப்பாடல் பொருளிற் பெரியதாய்ச் சிறந்து திகழ்கிறது; சிவஞான சுவாமிகள் இலக்கணப் புலமையிலும், தத்துவ ஆராய்ச்சியிலும், தலைசிறந்த பெருஞ் சான்றோராதலின், இப்பாடலில் இலக்கண நுட்பமும் தத்துவக் கருத்தும் இணைந்து பிணைந்து விளங்குகின்றன.

## இலக்கண நுட்பம்:

தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கணம், வல்லினம் மெல்லினம் இடையினம் என மூன்றாகப் பிரித்து விளக்கும். ''கசட தபற'' என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும் வல்லினம் எனப்படும். இங்ஙனம் வல்லினம் என இவ் ஆறு எழுத்துக்களும் சிறந்தெடுத்துக் கூறப்படினும், இவ்வாறனுள் கசதப என்னும் நான்கே மொழிக்கு முதலில்வரும். றட என்னும் இரண்டு மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும் சிறப்பைப் பெறுவதில்லை.' 'பன்னீருயிரும் கசதந பமவய ஞங ஈரைந்து உயிர் மெய்யும் மொழிமுதல்'' என்பது தமிழிலக்கண நூற்பா. இவ்விலக்கணச் செய்தியைக் கொண்டு, ஆசிரியர் சிவஞானசுவாமிகள் ஒரு சிறந்த சைவ சித்தாந்தத் தத்துவ உண்மையினைப் புலப்படுத்துகின்றார்.

## தத்துவக் கருத்து:

முத்தி நிலையில் இறைவனும் உயிரும், நீரும் நீரும் போல எல்லாவகையாலும் சமமாகி ஒன்றாய் நிற்கும் என்று ஐக்கியவாதிகள் கூறுவர். முத்திநிலையில், இறைவனும் உயிரும் எல்லா வகையானும் சமமாகி நிற்றலின், உயிர்களும் இறைவனைப்போல ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்யும் என்பர் சிவசமவாதிகள். இக்கருத்துக்களை மறுத்துச் சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள தாரதம்மியங்களைச் சிவஞானசித்தியார் (சுபக்கம்: 320) பின்வருமாறு விளக்குகின்றது.

சிவனும் சீவனும் சித்துப் பொருள்களேயாயினும், சிவன் அருளாகிய சித்து. உயிர் அந்த அருளைச் சேரும் சித்து. சிவன் உயிர்களின் பிறப்பிறப்பினைக் கெடுத்து, உலகியல் நுகர்ச்சியும் வீடுபேற்று இன்பமும் தரும் சித்து. உயிர் பிறப்பு முதலியவைகளில் அழுந்தும் சித்து. சிவன் தானே அறியும் சித்து. உயிர் அறிவிக்க அறியும் சித்து. எனவே, சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள இடையீடு மிகப் பெரியதாகும். இஃது எதுபோலும் எனின், சூரியனொளியும் கண்ணொளியும் போலாகும். இரண்டும் ஒளி என்னும் பொதுமையாற் சமமாயிருப்பினும், கண்ணொளியானது சூரியனொளியின் துணையின்றி ஒரு பொருளையும் காணமாட்டாது. சூரியனொளி தனக்குப் பிறிதொரு துணை வேண்டாது தானே பிறவற்றினையெல்லாம் தெளிவுற விளக்கி நிற்கும். அதுபோலச் சிவனும் சீவனும் சித்துப் பொருளாகும் பொதுமையால் சமம் போலக் கூறப்பெறினும், சிவத்தின் துணையின்றிச் சீவன் எதனையும் அறிய வல்லதாகாது. சிவனையின்றிச் செயற்படும் திறம் இல்லாமையின் உயிர்கள் தூலசித்து எனப்படும். சிவனே அதிசூக்கும சித்தாகத்திகழ்வன் என்பது சைவசித்தாந்தம். இவ்விரிந்த கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கியே, ''வல்லினம் என்றாலும் ற இட்ட முதல் ஆகுமோ? எனைச் சித்து என்று உரைக்கில் என் ஆம்?'' என்று சிவஞான சுவாமிகள் சுருக்கமும் சிறப்பும் அமைய அழகுறப் பாடியருளினார்.

## முடிவுரை:

இவ்வினிய சிறந்த சுவைமிக்க பாடல், கரையேறவிட்ட முதல்வராகிய திருப்பாதிரிப்புலியூர்த் தோகைநாயகி உடனுறை தோன்றாத் துணைநாதப் பெருமானுக்கு நிகழும் திருக்குட முழுக்குவிழா நிகழ்ச்சியை ஒட்டி, நினைவு கூர்ந்துபோற்றி மகிழத்தக்கதொன்றாகும்.

— ஆசிரியர்

# மனம் எனும் பேய்க் குரங்கு

**முன்னுரை:**

மனம் என்பது ஒரு வியக்கத்தக்க கருவி. அதிலும், மனித மனம் மிகவும் வியத்தற் குரியது. மனிதன் என்ற சொல்லே, மனம் என்னும் சொல்லின் அடிப்படையாகத் தோன் றியதேயாகும். மனத்தின் இயல்பை நினைத்து உணர உணர நாம் பெரிதும் வியப்பில் ஆழ்கின்றோம். மனம் என்பது, அணு பரி மாணம் உடையது என்று, நியாய நூலார் கூறுவர். ஆனால், அதன்கண் மாறி மாறிக் கணந்தோறும் தோன்றும் எண்ண அலைகளைக் கருதினால், மனம் ஒருவகையிற் கடலினும் பெரியது எனத் துணிந்து சொல்லலாம்.

'மனம்போல வாழ்வு' என்பது பழமொழி, மனம் நம்மைத் தேவனுக்கியும் உயர்த்தும்; விலங்காக்கியும் வீழ்த்தும். நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும், மாற்றிக் காட்டும் இயல்ப மனத்திற்கு உண்டு. நிரயத்தைத் துறக்கமாகவும், துறக்கத்தை நிரயமாகவும் மாற்றும் வல்லமை, மனத்திற்கு உள்ளது. மனத்தின் இயல்பிற்கு ஏற்பவே, மனிதர்கள் உயர்வு அல்லது தாழ்வு எய்து கின்றனர். மனம் நம்மை நல்லவர்களாக்கி வாழவும் வைக்கின்றது; தீயவர்களாக்கிக் கெடுத்து வருந்தி உழலவும் செய்கின்றது.

**உருவகம்:**

மனத்தின் இயல்புகள் பலவற்றையும் ஆழ்ந்து உணர்ந்து அறிஞர்களும், கவிஞர் களும், அருளாளர்களும், அதனைப் பலவகை களில் உருவகம்செய்து, ஏற்றபெற்றி புகழ்ந்தும் இகழ்ந்தும் உரைத்துள்ளனர். ''மனம் எனும் நெடுந்தேர், 'மனம் எனும் மாயப்புரவி' 'மனம் எனும் தோணி' என்றெல்லாம் பலவகைகளில் கவிஞர்கள் மனத்தின் இயல்பைக் கவின்மிக உருவகம் செய்து காட்டியுள்ளனர். 'கல்மனம்' 'இரும்புமனம்' 'மனம் எனும் காடு' 'மனக் குகை' 'மனக்கோயில்' 'மனமலர்' என்றும், இலக்கியங்களில் மனத்தைப் பற்றிய குறிப்புக் கள், ஆங்காகே அழகுற வருகின்றன.

**குரங்கு:**

இங்ஙனம் மனத்தின் இயல்பினை அறிஞர் கள் வெவ்வேறு வகைகளில் உருவகஞ் செய்து உணர்த்தியுள்ளனராயினும், அவை எல்லா வற்றையும்விட, ஓர் உருவகம் மிகச் சிறப்பாக வும், பொருத்தமாகவும் அமைந்து காணப்படு கின்றது. அதுதான் மனத்தைக் 'குரங்கு' என்று குறிப்பிடும் சிறந்த உருவகம் ஆகும். மனத்தின் இயல்புகளை உள்ளவாறு விளக்கு தற்கு இதனினும் சிறந்த பொருத்தமான உருவகம் பிறிதொன்றில்லை எனத் துணிந்து சொல்லலாம். குரங்கின் குறும்புகளும், மனித மனத்தின் பலவகை அலைவுகளும், பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன.

''மனமெனுமோர் பேய்க்குரங்கே !
மடப்பயலே ! நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து
மருட்டாதே கண்டாய் !
இனமுறவென் சொல்வழி
யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ ! யென்சொல்வழி
யேற்றிலையா னாலோ
தினையளவுன் னதிகாரஞ்
செல்லவொட்டேன் ! உலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் !
திருவருளாற் கணித்தே
நனவினெனை யறியாயோ ?
யாரெனஇங் கிருந்தாய்?
ஞானசபைத் தலைவனுக்கு
நல்லபிள்ளை நானே !''

என அருட்டிரு இராமலிங்க அடிகளார், இவ் வுண்மை தெளிந்து அழகுற அருளிச் செய் துள்ள சிறந்த திருவருட்பாப் பாடல், இங்கு நாம் இனிது சிந்தித்து மகிழ்தற்குரியது:

**பொருத்தம் :**

மனத்தைக் குரங்காகக் குறிப்பிட்டு, இராமலிங்க அடிகளார் இயம்பியிருப்பதன்

* வடலூர்த் தைப்பூசப் பெருவிழா நாளைத் தழுவிய கட்டுரை.

நுட்பம், இனிது உணர்ந்து போற்றத்தக்கது. குரங்கு ஒரு சிறிது நேரமும் வாளா இராமல், பலவகைக் குறும்புகள் செய்து கொண்டே இருக்கும்; எங்கும் தாவித்தாவி ஏறி ஓடும். அதுபோல, மனமும் பலவகைகளில் அலைந்து திரியும். தகாத தீய பல எண்ணங்களை மாறி மாறி எண்ணிக்கொண்டு கிடக்கும். குரங்கு கள் காடுகளில் திரியும், மலைகளில் ஏறும், மரக்கிளைகளில் தாவும், தன் விருப்பம்போல் எங்கும் சுற்றித் திரியும். அதற்கு ஏற்ப மனமும், உலகியல் வேட்கை ஆகிய காடுகளில் அலையும்; மகளிரின் தனங்களாகிய மலைகளில் உலவ விரும்பும்; ஐம்புல ஆசைகளாகிய கிளை களில் மாறி மாறித் தாவி, கீழும் மேலும் சுழன்று கரணமிடும்; நன்று தீது என்று பாரா மல், எங்கும் சென்று எதையும் பற்றிக் கொண்டு, திரிந்து அலைந்து உழலும். இத் தகைய பல பொருத்தங்கள் இருப்பதனு லேயே, சான்றோர்களும் ஞானிகளும் மனத் தைக் குரங்கு என்று தகவறிந்து கூறியுள்ளனர்.

குரங்கு இத்தகைய தனது குணங்களால் மிகவும் இழிந்தது போலக் காணப்படினும், தக்க ஒரு குரங்காட்டியின் தொடர்பு பெற்றால், நல்ல பயிற்சியும் பண்பும் பெற்றுச் சிறப்பு எய்து தலைக் காண்கின்றோம். அங்ஙனமே, நம் முடைய மனமாகிய குரங்குக்கும் ஒரு சிறந்த குரங்காட்டியின் தொடர்பும் பயிற்சியளிப்பும் ஏற்படுமாயின், மிகப்பெரு நலம் பயக்கும். குரங்கின் குறும்புகளையும் அலைவுகளையும் தடுத் துத் திருத்தி, நல்ல கலைப் பயிற்சியை அளித் துப் பழக்கி, அதனை நலமுற வாழ்விக்க வல்லவன் ஒரு குரங்காட்டியே ஆவான். அம் முறையில், நம் மனத்தையும் திருத்திப் பண் படுத்திச் சிறப்பு எய்துவிக்க வல்ல சிறந்த குரங்காட்டி ஒருவன் உளன்; நாம் அவன் பால் நம் மனக்குரங்கை ஒப்படைத்தால், அவன் அதனைச் செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான். அக்குரங்காட்டி எவனுதல் கூடும் என்று சொல்லவும் வேண்டுமோ?

நம் மனமாகிய குரங்கை நாம் ஒப்படைத் தால், அதனை நனியுவந்து ஏற்றுநன்கினிது பழக்கி, நலமெலாம் அடைவிக்க வல்ல குரங் காட்டி ஆண்டவனே ஆவான். குரங்காட் டியை அடைந்தாலன்றிக் குரங்கு திருந்தி உய்யு மாறில்லை; அதுபோல ஆண்டவன்பால் அடைக்கலம் புகுந்து, அவன் வயப்பட்டு நின்று அன்பு செய்து ஒழுக முற்பட்டாலன்றி, மனக் குரங்கு திருந்திச் சிறப்புற்று நலம்பெற்று உய்தற்குரிய வழி பிறிது எதுவும் இல்லை; மக்கள் திருந்திப் பண்பட்டு மனத்துக்கண் மாசிலராய், அறவாழ்வு வாழ்வதற்கு, இறை வனிடத்து ஈடுபாடும், இறை வழிபாடும் மிகப் பெரிதும் இன்றியமையாதனவாகும்.

**சிவானந்த லகரி :**

இவ்வுண்மையினைச் "சிவானந்த லகரி" என்னும் சிறந்த துதி நூலில், ஆதிசங்கராசாரிய சுவாமிகள் அவர்கள், அழகிய ஒரு சுலோகத் தின் (20) வாயிலாகத் தெளிவுறுத்திச் செவ்வி தின் விளக்கியருளியுள்ளார்கள்:

"சிவ பெருமானே! என்னுடைய மனம் இடையறாது எப்பொழுதும் உலகியல் மயக்கம் ஆகிய காட்டில், அலைந்து திரிந்து கொண்டி ருக்கின்றது; இளம் பெண்களின் தனங்கள் ஆகிய மலைக் குவடுகளில் ஓடியாடி நடனம் செய்து கொண்டுள்ளது; பலவகைப்பட்ட ஐம்புல ஆசைகள் ஆகிய கிளைகளில் விரைந்து மாறி மாறித் தாவிக் கீழும் மேலுமாகச் சுழன்று உழலுகின்றது; தன் விருப்பம் போலக் கட்டுப் பாடு என்பது சிறிதும் இல்லாமல், எங்கெங்கோ சுற்றித் திரிந்துகெட்டு அலைகின்றது. இடை யறாது அலையும் இயல்புடைய என்னுடைய மனம் ஆகிய குரங்கை, நின்பால் யான் ஒப்படைக்கின்றேன். அதனைத் தாங்கள் பக்தி என்னும் கயிற்றினால், கெட்டியாகக் கட்டித் தங்கள்பால் வைத்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில், தாங்கள் அனைவருக்கும், இன்பமும் மங்களமும் செய்யும் இயல்புடையீர்; ஆதலின், இக் குரங்கையும் திருத்தி நலஞ் செய்தல் தங்கள் கடமை. மேலும், தாங்கள் எல்லா இடங்களிலும் பரவி விளங்கும் பண்பு டையவர். ஆதலின், தங்களுக்கு என்னுடைய மனக் குரங்கு எந்த இடத்தில் அலைந்து சுற்றிக் கொண்டிருக்கின்றது என்று தேடி அறிந்து அடக்கியாள்வது மிகவும் எளிது.

அங்ஙனம் செய்தால், குரங்குக்கு மட்டுமே நலம் பயப்பதன்றி, தங்களுக்கும் மிகப் பெரிதும் உதவியாக இருக்கும்; எங்ஙன மெனில், தாங்களோ கையிற் கபாலத்தை வைத்துக்கொண்டு, அடியார்களின் அன்பு ஆகிய பிச்சையை எடுத்துலவும் தொழில் உடையவராகத் திரிகின்றீர்; பிச்சை எடுப்ப வர்கள் வாளா தாம் மட்டுமே செல்லாமல், ஒரு குரங்கையும் கயிற்றிற் கட்டி உடன் அழைத்துக்கொண்டு செல்லின், அவர்களுக்கு அது பெரிதும் உதவியாக அமைதலைக் காண் கின்றோம்.

ஆகவே கையிற் கபாலம் ஏந்திக் கபாலி எனவும், பிச்சை எடுத்தலாற் பிட்சாடனர் எனவும் விளங்குகின்ற தாங்கள், என்னுடைய மனம் ஆகிய குரங்கைப் பக்தி என்னும் கயிற்றினுல் கட்டி, அழகுற ஆடுமாறு பழக்கி, பிச்சை எடுக்கும் தங்களின் தொழிலுக்கு உதவியாகத் தங்கள்பால் இனிது வைத்துக் கொள்ளுங்கள்.''

மீனாட்சிசுந்தரம் பிள்ளை :

'சிவானந்த லகரி' என்னும் துதிநூலில் வரும் அந்தச் சிறந்த சுலோகத்தின் பொருளைப் பின்வரும் அழகிய பாடல், தன்கண் அமையக் கொண்டுள்ளது.

மோகமாம் அடவி திரிந்து, அரிவையர்தம்
முலைக்குவட் டிடைநடம் ஆடித்,
தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்
தாவும்என் புன்மனக் குரங்கைப்
பாகமார் பக்தி நாண்கொடு கட்டிப்
பலிக்குநீ செல்க! யான் கொடுத்தேன் ;
ஏகநா யகனே! தில்லையில் ஆடும்
இறைவனே! எம்பெரு மானே!

என்பது, அந்தச் சிவானந்த லகரிச் சுலோகத்தின் சிறந்த செந்தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுளாகும்.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் எனத் திகழ்ந்திருந்த பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், தமது முதுமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையிற் கிடந்த பொழுது, தம்மைக் காண வந்த அன்பர் ஒருவர் தமது பேச்சுக்கு இடையே கூறிய சிவானந்தலகரிச் சுலோகத்தினை வியந்து சுவைத்து, உடனே தமது மாணவர் ஒருவரை ஏடும் எழுத்தாணியும் கொணரச் செய்து, எழுதிக் கொள்ளுமாறு பணித்து மொழி பெயர்த்துப் பாடியளித்தது இந்த இனிய அரிய செய்யுள்.

முடிவுரை :

இதன் சொற்பொருட் சுவைநலங்களில் ஈடுபட்டு இன்புறுவதுடன், நாம் நம்மனம் ஆகிய குரங்கை, பிட்சாடன வடிவம் கொண்டு திகழும் கபாலீசுவரப் பெருமான் ஆகிய குரங்காட்டியின் பால் ஒப்படைத்து, அன்பு செலுத்தி நலம் பலவும் பெற முயலுவோமாக ; ★



சென்னையில் தவத்திரு ஊரன் அடிகள் பதிப்பித்த திருவருட்பா வெளியீட்டு விழாவில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையிலும், 'சன்மார்க்க நெறிச் சான்றோர்' திரு. நா. மகாலிங்கம் அவர்கள் முன்னிலையிலும், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் உரையாற்றுதல்.

# மணவாள மாமுனிகள் மாட்சி

வித்துவான் திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார், வி. பூதூர், வளவனூர்.

மணவாள மாமுனிகள் வண்புகழைப் போற்றிக் குணவாள ராகுவம் இங்கு!

மாமுனிகள் என்ற தன்னேற்றம் பிறர் ஒருவர்க்குமின்றி மணவாள மாமுனிகட்கே உரிய தனிப்பெருஞ்சிறப்பாகும். மாமுனிகள் என்ருலே மணவாள மாமுனிகளைத்தான் குறிக்கும். ஆழ்வார்களிலே திருமங்கை மன்னனைப் போல ஆசாரியர்களில் மணவாள மாமுனிகள் கடைக்குட்டியாய்த் திகழ்ந்தவர். இவரைப் போல் 'நாடும் நகரமும் நன்கறிய' வைணவத்தை வளர்த்தவர்கள் இவர்க்குப் பின் யாரும் இலரென்றே சொல்லலாம். இவர் தம் ஆசாரியத்துவபூர்த்தியைக்கண்ட எம்பெருமான் இவரிடத்தே சிஷ்யனுக விளங்கியது உலகறிந்த உண்மை. இராமாவதாரத்திலே வசிட்ட முனிவரையும் கிருஷ்ணவதாரத்திலே சாந்தீபினி முனிவரையும் ஆசாரியனுக எம்பெருமான் ஏற்றுக் கொண்டான்; அர்ச்சாவதாரத்திலே திருக்குறுங்குடிநம்பி ஸ்ரீவைஷ்ணவ நம்பியாக இருந்து எம்பெருமானுரை ஆசாரியனுக ஏற்றுக் கொண்டான். இதனுனே உய்தி பெற வேண்டிய ஒவ்வொருவரும் 'ஞானம் அனுட்டானமிவை நன்ருகவே உடையனுன குருவை' அடைதல் வேண்டும் என்பதுணரலாம். ''ஆத்ம குணங்களில் ப்ரதானம் ஸமமும் தமமும் இவை இரண்டும் உண்டானல் ஆசார்யன் கைபுகுரும்; ஆசாரியன் கைபுகுந்தவாறே திருமந்திரம் கைபுகுரும்; திருமந்திரம் கைபுகுந்தவாறே ஈஸ்வரன்; கைபுகுரும்; ஈசுவரன் கைபுகுந்தவாறே 'வைகுந்த மாநகர் மற்றது கையதுவே' என்கிறபடியே ப்ராப்யபூமி கைபுகுரும்'' என்பதினல் ஆசாரியன் இன்றி யாரும் உய்தி பெற இயலாது என்பதனை நாம் இனிது உணரலாம்.

'ஆசாரியனுலே அன்ருே நாம் உய்ந்ததென்று கூசாமல் எப்போதும் கூறு'

என்பதும் இதுபற்றியே. சிஷ்யனுய் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காகச் சிஷ்யனுய் நின்ற எம்பெருமானே திருவரங்கத்தில் மாமுனிகளுடைய ஆசாரியத்துவ பூர்த்தியைக் கண்டு சிஷ்யனுக இருந்து,

''ஸ்ரீசைலேச தயா பாத்ரம்
தீபக்தியாதி குணர்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே
ரம்யஜாமாதரம் முநிம்||,,

என்கிற தனியனை அருளிச்செய்தான், என்பது நம்பெருமாளுக்குள்ள தனிப் பெருஞ்சிறப்பு. வசிட்ட முனிவரையும், சாந்தீபினி முனிவரையும் எம்பெருமானுரையும் ஆசாரியனுகக் கொண்டபோது எம்பெருமான் தனியன் அருளிச்செய்து நிறம்பெற்ருன் என்ற வரலாறு கிடையாது. அப்படி எம்பெருமானுலே (நம்பெருமாளாலே) தனியன் கொண்டபெருமை, நம்மாமுனிகட்கே உரிய சிறப்பாம்.

மாமுனிகள் வடமொழி தென்மொழிகளிலே வல்லவரேயாயினும் தென்மொழியில் அவர்க்குள்ள வன்மை நிகரற்றது. திருவாய்மொழி நூற்றந்தாதியிலே அவரதாற்றலும், உபதேசரத்தின மாலையிலே அவரதன்பும் நன்றியறிதலும், ஆர்த்திப்பிரபந்தத்திலே அம்புவியிற் கால் பொருந்தாத அவரதார்த்தியும் நன்கு வெளிப்படுகின்றது. இந்நிலை அவர்க்குத் திருவாய்மொழிப் பயிற்சியாலும், அதன் பேருரையான ஈடு முப்பத்தாருயிரப் பயிற்சியாலுமே, பெரிதும் உண்டாயிற்று என்று கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை.

திருவாய்மொழி தமிழ்வேதம் என்பதினும் 'தெளியாத மறை நிலங்கள்' தெளிவிக்கின்றமையாலே வடமொழி வேதத்தினும் இத் தமிழ் வேதம் சிறந்தென்பதுவே ஆன்ருேர் துணிபு.

தோன்ரு உபநிடதப் பொருள் தோன்றலுற்ருர்
தமக்கும்
சான்ரும் இவை என்றபோது மற்றென்?

என்பர் கம்பநாட்டடிகள். திருவாய்மொழியின் ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு வேதம் என்று கொண்டு,

'அருமா மறைஆ யிரஞ்சிரமும் ஓரோர்
திருவாய் மொழி'

என்று கூறிப் புகழ்ந்தார் பிறசான்ருேரும்.


மாமுனிகளுடைய ஆசாரியர் திருமலையாழ்வார். அமுதத் திருவாய்மொழி ஈரத் தமிழ்பால் இவர் கொண்ட காதலால் 'திருவாய்மொழிப்பிள்ளை' என்ற சிறப்புப்பெயர் பெற்றனர் என்பதும் வெள்ளிடைமலையாம்.

திருவாய்மொழிக்கு ஆன்ருேர் பலர் வியாக்கியானம் செய்திருப்பினும் 'ஈடு முப்பத்தாருயிரம்' என்ற வியாக்கியானமே சாலச் சிறந்தது. திருவாய்மொழிக்குக் கவசம் போன்று இப்பேருரை அமைந்திருத்தலின் * 'ஈடு' (கவசம்)என்றே கொள்ளத்தகும். இந்த ஈடு பயிலாதவர்கள் தமிழராக நிறம்பெற முடியாது; தமிழின் அருமை பெருமைகளை நண்குணர வேண்டுமென்ருல் ஒவ்வொரு தமிழரும் 'ஈடு முப்பத்தாருயிர' வியாக்கியானத்தை நன்கு பயிலுதல் வேண்டும். இத்துணைப் பெருமை வாய்ந்த ஈடு வியாக்கியானத்தில் மாமுனிகள் ஈடுபட்டு நன்கு பயின்று அதனை நாடெங்கும் பரவச் செய்து திருவரங்கத்தெம்பெருமானையும் திருவுள்ளம் குளிரச் செய்தார் என்பதில் வியப்பேது? ஈட்டில் தமக்குள்ள ஈடுபாட்டை மாமுனிகள் உபதேசரத்தின மாலையில்,

'தெள்ளியதா நம்பிள்ளை செப்பும் நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்—பிள்ளை இந்த
நாடறியமாறன் மறைப் பொருளை நன்
குரைத்த (து)
ஈடு முப்பத்தாருயிரம்' என்று நாடறிய

'நன்குரைத்தது' என்ற சொற்ருெடர்களால் நன்கு விளக்கியளினுர்.

திருவாய்மொழிப்பிள்ளையும் தமது அந்திம தசையிலே " நாயனுரை அழைத்தருளி



திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயிலில், மாலைப் பூசை அறக்கட்டளைத் துவக்க விழாவில், நீதிபதி திரு. என் கிருஷ்ணசாமி ரெட்டியார், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், அருட்டிரு. சுவாமி இராமதாசர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தல். (1-1-73)

148706.
JL

சம்ஸ்க்ருத ஸாஸ்த்ரங்களிலே பலகாலும் கண்வையாமல் ஸ்ரீ பாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெருமானுர்க்கும் பரியமாக திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே அநவரதம் பரிசீலநம் பண்ணிக்கொண்டு பூர்வர்களைப் போலே...எழுந்தருளியிரும்' என்றருளிச்செய்தார் என்ற வரலாறும் அறியத் தகும். மாமுனிகட்கு 'ஈடு முப்பத்தாருயிரப் பெருக்கர்' என்ற திருநாமமும் இதனை வலியுறுத்தும்.

அர்ச்சகபரிவாரங்களின் மூலமாகவே ஆழ்வார்களிடத்தும் ஆசார்யர்களிடத்தும் இதனை அருளப்பாடிட்டு வந்த நம்பெருமாள் இம் மாமுனிகளின் பெருமையை உலகிற்குக் காட்டவேண்டுமென்று கருதி இவரை நேரில் வந்து அழைத்து 'நமது பெரிய திருமண்டபத்தில் திருவாய்மொழி என்னும் வேதத்தின் பொருளை நாள்தோறும் விளக்குக' என்று கட்டளையிட்டருளினர். இதனைச் சிரமேற் கொண்டு தம் தாழ்ச்சியினையும் நம்பெருமாளின் உயர்வினையும் எண்ணி எண்ணி,

நாம் ஆர்? பெரியதிரு மண்டபம் ஆர்?
நம்பெருமாள்
தாமாக வந்து தனித்தழைத்து— நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை
நாளுமிங்கே
வந்துரைஎன் றேவுவதே வாய்ந்து

என்று வியந்து இந்நிகழ்ச்சியினை உண்மையல்லது உரையாத மாமுனிகள் விளக்கினர். பரமபதத்திலுள்ள எல்லாப் பொருள்களையுமே நித்திய சூரிகளாகக் கருதிப் போற்றுதல் வைணவமரபு. இம்மரபினை ஒட்டியே மாமுனிகள் திருவரங்கமும் பூலோக வைகுண்டமான தால் அங்குள்ளதும், பரமபதத்திலுள்ள திருமாமணிமண்டபத்தை ஒத்ததுமான பெரிய திருமண்டபத்தையும் உயர்திணையாகவே கருதி 'ஆர்' என்ற உயர்திணை முடிபு கொடுத்து, 'நாம் ஆர் பெரிய திருமண்டபமார்' என்று கூறியருளிய முறைமையால் இவரது வரம்பு கடவா நெறியும் அறியலாம். திருவரங்கப் பெருமானின் கட்டளைப்படிப்பெரிய திருமண்டபத்திலே இவர் அருளிச் செய்த ஈடு முப்பத்தாருயிரத்தைக் கேட்டருளி மிகவும் மகிழ்வுற்று அதற்குப் போக்குவீடாக ஸ்ரீசைலேஸதயாபாத்ரத்' தனியனை அருளிச் செய்து நம்பெருமாள் நிறம் பெற்றுயர்ந்தார் என்பது எவருமறிந்ததே! இங்ஙனம் நம்பெருமாள் அருளிச் செய்த தனியனைப்பெற்ற பெருமை நம் மாமுனிகட்கே உரியதொன்று.

இம்மாமுனிகளின் பெருமையைப் பூலோக வைகுண்டமென்கிற திருவரங்கத்திலே நம்பெருமாள் அருளிச் செய்தார் என்ற வரலாற்றினும், மேலுலக வைகுண்டமாகிய பரமபதத்தி லுள்ள பரவாசுதேவனும் இம்மாமுனிகளைப் போற்றினர் என்பது சிறப்பன்றே, என்று பாரித்த ஒரு பெரியார். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை ஒரு வரலாற்றின் மூலம் விளக்குகின்றார்.

## அவ்வரலாறு பின்வருமாறு:-

சுவாயம்புவமனு ஆற்றிய தீர்க்க சத்திர யாகத்தில் குழுமிய முனிவர்களின் வேண்டுகோளை ஏற்று. பிருகு முனிவர் மும்மூர்த்திகளுட் சிறந்த முதல்வனைக் கண்டறிய அருந்தவர் குழாங்களுடன் புறப்பட்டு முதலில் கயிலையை அணுகினர். பலநாள் காத்தும் இவரை உள்ளே புகவிடாமல் நந்தி தேவன் கடிந்தனன்; மேலும் 'புனிதையாம் உமையுடன் புணர்ந்து திரையுடைத்தெழு காமவெங் கடலிடைத் திளைக்கும்' பரமனைப் பார்க்க இயலாது, நீவிர் விரைந்து அப்பால் ஏகுமின்; இன்றெனில் புடைப்பேன்' என்றான். இதனைச் செவியேற்ற முனிபுங்கவர் சிவபிரானைச் சொல் லருஞ்சாபமொழி சொல்லி அந்தணாளர் வணங்கத்தகும் தெய்வம் சிவபெருமான் அல்லன் என்று அவண்விட்டகன்று மலரவனுலகெய்தினர். நல்வரவு சொல்லாத மலர்மிசை வாழும் பிரமனை உனக்குக் கோயிலும் அந்தணாளர் பூசனையும் இல்லாதொழிக' என்றுரைத்து அகன்றனர்

பின்னர் கார்ய வைகுண்டத்தில் பரவாசுதேவன் எழுந்தருளியிருக்கும் உறையுளைச் சார்ந்தனர்; காவலர்களும் உள்ளே விடுப்ப உள்நுழைந்து 'அறிதுயில் அமரும் ஆதியம் பகவனை அணுகி, 'உறங்குகின்றனையே! உறங்குதல் தகுமோ?' என்று உளம்கொதிப்ப; நாதன் நல் உரமேல் நீட்டமுற்றதாள் நெரிபடப்' புடைத்தனர். 'வஞ்சமில்லவன் வளர நிதுயில்புரி வரதன்-கஞ்சநாயகி கலங்குற எழுந்து' பதறிச் சீதநாயகமெனுமுளத்தொடு துதி செய்து, மல்லாண்ட திண்டோள்களைத்

தாங்கும் முரட்டுத்திருமார்பில் இம்முனிவர் திருத்தாள் பட்டதே! இத்திருத்தாண் மலர்க்கு என்ன தீங்கு நேர்ந்ததோ? என்று அகங் குழைந்து முனிவர் திருத்தாளைத் தம் திருக் கையால் பற்றி வருடி, இத்திருத்தாள் என் மேற்பட என்ன புண்ணியம் செய்தேனே என்று புகழ்ந்தனன்; முனிவரும் மகிழ்ந்து, தம்மை வேண்டிய முனிவர்கள் பாற்சென்று மூவருள்ளும்–முதலாவான் மூளிநீர் வண்ணனே! என்று தெளிவுறுத்தினுர் என்பது ஸ்ரீ பாத்மோத்தர புராண வரலாறு. இதனைத் தமிழ்க் காப்பியமாக்கியவர் புதுவை விலட்சணகவி ஸ்ரீமத் ஏ. வே. இராமாநுஜ நாவலர் சுவாமிகள் ஆவார்.

இப்பெரியார் இவ்வரலாற்றை விளக்கும் வாயிலாக இதில் முனிவரர் திருத்தாளை எம் பெருமான் வணங்கிப் புகழ்ந்தான் அன்றோ? புகழ்ந்துரைப்பவன் திருமால்; புகழப்படுவது முனிவரர் திருத்தாள். முனிவரன் என்பதனை வரமுனி என்றும் சொல்லலாம். இதனையே 'ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா' என்ற விதியான் மிக உயர்ந்தமுனி என்று பொருள்பட வரவரமுனி என்றும் சொல்லாம். வரவரமுனி என்பது மாமுனிகளின் சிறந்த திருநாமம் என்பதினை அறியாதார் அறியாதார் அல்லவா? மிக உயர்ந்தமுனி (பிருகு) திருத் தாள் என்று பொருள்பட, 'வரவரமுனி தாள்' என்று சொல்லும்போதே, சொல்பவர்களுக்கும் கேட்பவர்க்கும் படிப்பவர்க்கும் 'வரவரமுனி தாள்' சொல்லும் மாட்சிமையைச் சொல்லவும் இயலாது என்னும்போது வரவரமுனியாகிய மாமுனிகளின் திருவடிப் பெருமை சொல்லுந் தரமன்று என்று பரவாசு தேவனும் புகழ்ந் தனன் என்று தொனிப்பொருளாக அமைந்த அழகு சொல்லுந்தரமன்று. இக் கருத்தமைதி யுள்ள ஸ்ரீபாத்மோத்தரத்துப் பரத்வ வேதனைப் படலத்தில் உள்ள அப்பாடல்.

'தொல்லைமாதவத் தொன்றிய
தோமிலார்க்கன்றி
நல்ல மாதவர் நளினப் பொற்பதம்
நணுகுறுமோ?
வல்ல மேலவர்க் கல்லது வரவரமுனிதாள்
சொல்லு மாட்சிமை சொல்லவும்
வரும்கொலோ சொல்லீர்.

என்பதாகும்.

இஃது பரவாசுதேவன் வரவரமுனிதாளைப் புகழ்ந்த பாடல், இதன் கருத்தாவது:- பண்டைநாள் தொட்டுச் சிறந்து வருகின்ற பெருந்தவத்தை உடையவர்களும் குற்றமில்லா தவர்களுமான பெரியோர்கட்கல்லது (மற்றை யோர்கட்கு) நல்ல பெரிய தவத்தையுடையார் கட்கு உரிமையானதும் தாமரை மலரைப் போன்றதும் அழகியதுமான திருவடி அணுக இயலுமோ? இயலாதென்றவாறு. அவ்வண் ணம் உயர்ந்த வரவரமுனிதாள்' (பெருமை) இயல்பாகவே எல்லாம் அறியவல்ல மேன் மக்கள் சொல்லலாமேயன்றிப் (பிறரால்) சொல்லும் மேன்மையைச் சொல்லவும் வருமோ? (சொல்லுகின்ற பெரியோர்களின் மேன்மையை என்னுலும் சொல்ல இயலாது) என்று பரவாசுதேவன் பரவியவாறு.

இதனுல், 'கலியுங் கெடுங் கண்டு கொண் மின்' என்று எம்பெருமானுர் திருவவதாரத்தை முன்னமே நம்மாழ்வார் அருளினதுபோல, நம்மாமுனிகளின் பெருமையைப் பரவாசு தேவனும் (ஆழ்வார்களின் அவதார காலங் கட்கு) முன்னரே அருளியுள்ளான் என்று அகக்கண்ணுல் கண்டு அதனைத் தொனிப் பொருளாத் காட்டிய சான்றோரின் திருவுள்ளம் அனைவருக்கும் மகிழ்வளிக்கும் என்பதில் ஐய மில்லை. இவ்விடத்து.

'ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை
இருளனைத்தும்
மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனும்
காணகில்லான்

என்கின்ற திருமொழி நினைவுக்கு வருகின்றது.

இதனுல் மாமுனிகளோடு வார்த்தையாடி அவர் அருளும் ஈட்டு வியாக்கியானம் கேட்டு உகந்தருளித் தனியனும் அருளிய நம் பெருமாள், முன்னரே பரமபதத்தில் பரவாசு தேவனுயிருந்து நம் வரவரமுனித்தாள் (பெருமை) சொல்லும் வல்லமையினைச் சொல்ல வும் இயலாது என்று வியந்து பாராட்டினன் என்றுல், மணவாள மாமுனிகளின் மாட்சிமை எத்தகையதென்று நாம் இயம்பவும் வேண்டுமோ?

★

# பழந்தமிழ் இலக்கியத்தில் இராமாயணம்

திரு. எம். ஏ. முருகேசன், *B.A., B.L.*

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைத் துணை ஆணையாளர், மதுரை.

திருமகள் கேள்வனான திருமால் மானிட உருக்கொண்டு, இப்புண்ணிய பூமியில் நடந்து, மண்ணிடை மாதவம் அறத்தொடு வளர்த்த கதையைத்தான் இராமாயணம் என்கின்றோம். இக்கதையைக் காப்பியமாக முதன் முதலில் செய்தவர் வால்மீகி முனிவர் என்பதும், அவர் செய்த அக்காப்பியம் ஆதி காவியம் என்பதும் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. அதைத் தழுவி, கூட்டியும் குறைத்தும், விரித்தும் சுருக்கியும், ஒப்பற்ற ஓர் உன்னத காவியம் படைத்து அதற்கு ''இராமாவதாரம்'' எனப் பெயரிட்டார், கல்வியில் பெரிய கம்ப நாட்டாழ்வார். வால்மீகியைத் தழுவியே கம்பர் தம் காவியத்தை அமைத்தார் என்பதற்கு அவர் காவியத்திலேயே அகச் சான்றுகளும், வெளியே புறச்சான்றுகளும் நிறையக் கிடக்கின்றன.

''வாங்க அரும் பாதம் நான்கும்
வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்,
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை,
அன்பு எனும் நறவம் மாந்தி,
மூங்கையான் பேச லுற்றான்
என்ன, யான் மொழியலுற்றேன்.''

என்பது கம்பர் வாக்கு

''நாரணன் விளையாட் டெல்லாம்
நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான்,
அறிந்தவான் மீகி என்பான்;
சீர்அணி சோழ நாட்டுத்
திருவழுந் தூருள் வாழ்வோன்
கார்அணி கொடையான் கம்பன்
தமிழினால் கவிதை செய்தான்.''

என்பது தனியன்.

இராமாயணத்தை முதன் முதலில் பாடியவர் வால்மீகியே என்று ஒப்புக்கொண்ட போதிலும் இன்னும் இருவர் பாடியிருக்கலாம் என்பது கம்பருடைய வாக்கினாலேயே தெரிகிறது. பாயிரத்தில் நூல் வழி சொல்ல வந்த கம்பர்,

''தேவபாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும், முந்திய
நாவினான் உரையின்படி, நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ.''

என்று பாடுகிறார். இப்பாடலால் வடமொழியில் இராமாயணம் செய்தவர் மூவர் என்பதும், அம் மூவரில் முதல்வர் பாடியதைக் கம்பர் தமிழில் ஆக்கினார் என்பதும் பெறப்படுகிறது. வால்மீகி, போதாயனர், வசிட்டர் என்பவர்களே அம் மூவர் என்று கூறப்படுகிறது. ஆகவே தமிழில் கம்பர் இராமாயணம் பாடுவதற்கு முன்பு வடமொழியில் மூன்று இராமாயணங்கள் இருந்திருக்க வேண்டுமென்று கருத இடம் இருக்கிறது

ஆதி காவியத்தைப் பின்பற்றி எழுந்த இராமாவதாரமே, முதன் முதலில் தமிழில் எழுதப்பட்ட இராமாயணம் என்றும், அதன் பிறகே, தமிழ் நாட்டிற்கு இராமகாதை வந்தது என்றும் கருத்து நிலவுகிறது. ஆய்ந்து பார்க்கின், கம்பனுடைய இராமாயணத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, இராம காதை தமிழ் நாட்டில் மிகப் பரவலாக மக்களிடத்திலே வழங்கி வந்தது என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. பாட்டிலும், தொகையிலும், அதைச் சார்ந்த பல பண்டைத் தமிழ் நூல்களிலும் ''இராமாயணம்'' பேசப்பட்டிருக்கிறது. சங்கப் புலவர்களில் வான்மீகனார் என்ற பெயர் கொண்ட புலவர் ஒருவர் இருந்தார் என்பது; தொல்காப்பியம், பொருள் அதிகாரத்தில், புறத்துறையில் ''அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்'' என்ற சூத்திர உரையில் நச்சினார்க்

கினியனுர் கூறுவதிலிருந்து அறியப்படுகிறது. புற நானூற்றிலே 358-ஆம் பாட்டு வான்மீகனுர் பாடிய பாடல் என்று காணப்படுகிறது.

''ஆள் வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன் அவனெடு
மிதிலை மூதூ ரெய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கட் சீதை
கடுவிசை வில்நாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கினள் அதான்று''.

(தொல்-பொருள் 54 உரை நச்சினுர்க்கினியர்)

இனி, அகநானூற்றிலும் புறநானூற்றிலும் ''இராமாயணம்'' பேசப்படுவதைக் காணலாம். புறம் 378—ஆவது பாடலில்,

''கடும்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தாங்கு

என வருகிறது. அகநானூறு 70—ஆவது பாடலில்,

''வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிடும் பவ்வம் இரங்கு முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல''

என்று வருகிறது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய பரிபாடலில் அகலிகை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

''இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சினன் உறக் கல்லுரு
ஒன்றியபடி இது....................''

(பரிபாடல் 19 வரி 50—52)

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்ருகிய திருக்குறளில் அகலிகை கதை பேசப்படுகிறது. பிறர் மனை நயத்தலை இகழ வந்த திருவள்ளுவரும்.

''ஐந்தவித்தானுற்றலகல்விசும்புளார்கோமானிந்திரனே சாலுங் கரி'' என இராமாயணக் கதையினைக் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட ஐம்பெருங்காப்பியங்களிலும் இராமாயணம் பரவலாகப் பேசப்படுகிறது.

சிலப்பதிகாரம் ஊர்காண் காதையிலே,

''தாதை ஏவலின், மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? நெடுமொழி அன்ருே?

என்று இளங்கோவடிகள் பாடுகிருர்.

இவ் வரிகளிலிருந்து, இராமன் திருமாலின் அவதாரம் என்பதும், அவ்வழக்கு நீண்ட நெடுங் காலமாக (நெடுமொழியாக) நின்று நிலவி வந்தது என்பதும் காணக்கிடக்கிறது. இரட்டைக் காப்பியங்களில் ஒன்ருகிய மணி மேகலையில்,

''நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை
யெல்லாம்
அணங்குடை யரக்கர் வயிறுபுக்காங்கு

என்று இராமாயண நிகழ்ச்சி ஒன்றைச் சாத்தனுர் எடுத்தாண்டிருக்கிருர்.

உரை ஆசிரியர்களும் தத்தம் உரைகளிலே வெண்பாவிலும் ஆசிரியப்பாவிலும் இராமாயண நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்களைக் காட்டியுள்ளனர். ஆசிரிய மாலையிலிருந்து புறத்திரட்டில் தொகுக்கப்பட்ட பாடல்களில் இராமாயண நிகழ்ச்சிகள் உள்ளன.

இது தவிரப் புறத் துறைக்கு எடுத்துக் காட்டுக் கூற வந்த உரை ஆசிரியர்களும் இராமாயண நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளனர்.

தொல்காப்பியம் புறத்துறையில் 12—ஆம் சூத்திரத்தில், எயில் கோடல், எயில் காத்தல், தானைமறம், என்ற துறைகளுக்கு இராமாயண நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

''கட்டில் நீத்த பால்'' என்ற துறைக்கு நச்சினுர்க்கினியர் இராமாயண வரலாற்றை எடுத்துக் காட்டி உள்ளார். பின்னும், இராமன் விபீடணனுக்கு முடி சூட்டியதை 'கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்'' என்ற புறத்துறைக்கும், ''இன்று போய்ப்போர்க்கு நாளை வா'' என்று இராகவன் இராவணனுக்குச் சொன்னதைத் ''தழிஞ்சி'' என்ற புறத்துறைக்கும்

எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளார். புறத்திரட்டு 20—ஆம் சூத்திர உரையில் ''இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம்'' என்று கூறுகிறுர்.

''தொன்மை என்னும் வனப்பிற்குப் பாரதம் இராமாயணம் முதலான்வை கொள்க'' என்று சொல்கிறுர். இவ்வுரையில் குறிப்பிடப்படும் இராமாயணம் கம்பருக்கு முன் உள்ள நூலாகவும் இருக்கலாம். பெருந்தொகையில், முதுபெரும்புலவர் திரு மு. இராகவையங்கார் அவர்கள், உரைகாரர் காட்டிய பாடல்களைப் பழைய இராமாயணம் என்று கூறுகிறுர். இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து, பழைய இராமாயணம் ஒன்று தமிழில் இருந்திருக்கலாமென்று கொள்ளவும் இடமிருக்கிறது. அப்படி இல்லாமற் போனுலும், இராமாயண நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டு தனிப் பாடல்கள் பல வழங்கி வந்தன என்பதில் ஐயத்துக்கே இடமில்லை.

சைவ வைணவ சமய இலக்கியங்களிலும் இராமாயணம் பேசப்படுகிறது. பிரபந்தம் பாடிய பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய குலசேகர ஆழ்வார், தன்னைத் தயரதனுகவும், இராமனைத் தன் மதலையாகவும் பாவித்துப் பல பாடல்களைப்பாடி இருக்கின்ருர். அவர்தம் இராமாயண ஈடுபாடு எல்லையற்றது. ''கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?'' எனப் பாடுகின்ருர் நம்மாழ்வார். ''சினத்தினுல் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான்'' என்று இராமபிரானைப் புகழ்ந்து போற்றுகின்ருள் ஆண்டாள். இவ்வாறே ஏனைய ஆழ்வார்களும் இராமாயண வரலாறுகளை ஆங்காங்கே எடுத்துப் பாடியிருக்கின்றனர்.

ஆழ்வார்களின் காலத்தில் மட்டுமேயன்றி ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களின் காலத்திலும் இராமசரிதம் மிகப் பெரிதும் பரவி இருந்திருக்கிறது என்பது அவர்கள் செய்த வியாக்கியானங்களிலிருந்து தெரியவருகிறது.

''படி கொண்ட கீர்த்தி இராமாயணம்
என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட
கோயில் இராமானுசர்''

என்று உடையவரைத் திருவரங்கத்தமுதனுர் பிரபந்ந காயத்திரி என வழங்கும் தமது இராமாநுச நூற்றந்தாதியிற் கூறுகிறுர்.

சைவ சமயாசாரியார்கள் சிவனையன்றி மற்றவர்களைப் பாடுவதில்லை. அப்படிப் பாட நேர்ந்தாலும் சிவனேடு தொடர்புபடுத்தியே பாடுவர். ''நம் செந்தில் மேய வள்ளி மணுளர்க்குத் தந்தை'' என்பது போல். அப்படிப் பாடிய நால்வருள் மாணிக்கவாசகர்,

''ஆர்கலி சூழ் தென்னிலங்கை
அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானை

என்று குயில் பத்திலே கூறுகின்ருா.

தமிழ் நாட்டில் இராமாயண வரலாற்ருேடு தொடர்புடையனவாகப் பல ஊர்கள், மலைகள் முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கதைகள் இருக்கின்றன. இராமாயண பாத்திரத்தில் வரும் பெயர்களும் வழக்கத்தில் இருக்கின்றன. இவை எல்லாம் தமிழகத்தில் இராம காதை மிகவும் பரவீ மக்கள் மனதில் நிலவி வந்தது என்பதற்குரிய அடையாளங்களாகும்.

இவையெல்லாம், கம்பனுடைய இராமாயணத்துக்கும் முன்பே தமிழகத்தில் இராம காதை மிகவும் பரவி வழங்கியிருந்தது என்பதையே காட்டுகின்றன.

—★—

# தமிழ்நாட்டில் சாக்தம்

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.,
(சென்னை உயர்நீதி மன்ற நடுவர்)

வடிவமற்றதாய், குணமற்றதாயிருக்கும் பரதத்துவத்தோடு உறவாடுவது கடினம். ஆனால், அந்தப் பரம்பொருளுக்கு ஒரு வடிவத்தைக் கற்பித்து, அதைத் 'தாயே' என்று வணங்கி உறவாடத் தொடங்கிவிட்டால், நம்முடைய உணர்வோடு குலாவும் பொருளாகி விடுகிறது அது. அப்பாலுக்கு அப்பாலாயிருக்கும் பொருள், இப்பாலுக்கு இப்பாலாக நெருங்கி நம்மை ஆட்கொள்ளுகிறது,

2. இறைவனைத் தாயாகக் கருதி ஊடாடுகிறவர்களுக்குச் சோதனைகளும் அதிகமாக ஏற்படுவதில்லை. தனயனுக்குத் தாயிடமிருக்கும் உறவு பாதுகாவல் நிறைந்த உறவு, அதில் ஆபத்துக்களும் அபாயங்களுமில்லை.

உச்சி தனை முகர்ந்தால் — கருவம்
ஓங்கி வளருதடி !
மெச்சி யினைஊரார் — புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி

என்று தகப்பன் சொல்லமாட்டான். தாய்தான் சொல்லுவாள். அவ்வளவு கருணை நிறைந்தது தாயுள்ளம். நாம் என்ன குற்றம் செய்தாலும் அவள் மன்னிக்கக் காத்திருக்கிறாள். நாம் காலால் உதைத்தாலும் உதைத்த காலுக்கு ஒரு தோடா போட்டு மகிழ்பவள் தாய். சகிப்புத் தன்மையும் எல்லையற்ற அன்பும் தாய்க்கிருக்கிறபடியால், அச்சமின்றி அவளோடு நாம் பழகலாம்.

3. இந்த உறவை இறைவனிடத்திலே இணைத்து, இறைவனைத் தாயாகக் கற்பனை செய்து அவளோடு நாம் ஊடாடும் போது, நம் உணர்வு பெருகுகிறது. நம் ஆணவம் மெல்ல மெல்லக் கரைகிறது. ஆனந்தம் மேலிடுகிறது.

4. இறைத் தத்துவத்துக்கு நாமமில்லை. உருவம் இல்லையென்று நம் முன்னோர்களுக்குத் தெரியும். ஆனால், நமது புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத அந்தத் தத்துவத்தோடு நெருங்க வேண்டுமே, அதற்காக ஒரு தந்திரம் செய்தார்கள். அப்பொருளுக்கு நாமத்தையும் உருவத்தையும் கற்பித்தார்கள். அதோடு நிற்கவில்லை. மனித வாழ்க்கையில் நாம் நேரடியாக அனுபவிக்கிற, தாய்—உறவை ஏணியாகக்கொண்டு எட்டிப் பிடிக்க முடியாத வஸ்துவை உணர்வினால் எட்டிப்பிடித்தார்கள். அவ்வாறு எட்டிப் பிடித்த பிறகு, கற்பனையும் பாவனையும் அவசியமில்லாமல் போய்விடுகிறது. கற்பனையை உதறித் தள்ளிவிட்டுப் பரதத்துவத்தோடு ஒன்றிவிடலாம். திருமூலரைப்போல்,

"கற்பனை
உதறிய பாலில் ஒடுங்குகின்றேனே"

என்று ஒடுங்கிவிடலாம்.

5. ஆனால் இறைத் தத்துவத்தை உணரும் வரை கற்பனையின் உதவி நமக்கு வேண்டியிருக்கிறது: அதைச் சக்திதேவியாகக் கற்பனை செய்து வழிபடும் சமயத்தையே சாக்தம் என்று சொல்லுகிறோம். சக்தி வழிபாடு எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறது. எப்படி அபாயம் அளிக்கிறது என்பதை ஒரு பாடல் காட்டுகிறது. யம பயத்திலிருந்து என்னைக் காப்பாற்று என்று கோமதித் தாயைப் பார்த்துக் கேட்கிறார் ஒரு பக்தர்.

"கேடா வருநமனைக்
கிட்ட வராதே தூரப்
போடா எனஓட்டி, உந்தன்
பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா என அழைத்து
வாழ்வித்தால், அம்மை, உனைக்
கூடா தென்றார் தடுப்பார் ?
கோமதித்தாய் ஈஸ்வரியே"

திருநெல்வேலி அழகிய சொக்கநாத பிள்ளை என்ற பக்தர் பாடிய பாடல் இது. இப்படியெல்லாம் தாயிடத்திலே துணிந்து வரங்கேட்கலாம். உரிமையோடு கேட்கலாம், இடித்துக் கேட்கலாம், அடித்தே கேட்கலாம். கொடுக்க மாட்டேன் என்று சொல்லத் தாய்க்கு மனம் வராது.

(6) தமிழகத்திலே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தாய் வழிபாடு புழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. கி. பி. 80-இல், அதாவது, 19 நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட Periplus of the Erythrean Sea என்ற கிரேக்கப் பயண நூலிலும், கிறிஸ்து பிறந்து 75 ஆண்டுகள் வரை வாழ்ந்த Pliny என்ற கிரேக்க ஆசிரியருடையதிலே நூலிலும் தமிழகத்தில் சக்தி வழிபாடு இருந்தது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(7) தொல்காப்பியத்திலும், சங்க காலத் தமிழ் இலக்கியத்திலும், தெய்வத் தாய்க்குக் கொற்றவை என்றும் ஐயை என்றும் நாமம் சூட்டியிருக்கிறார்கள். கொற்றவையின் கோலத்தைச் சிலப்பதிகார வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் வருணிக்கிறார்.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து,
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்,
வானோர், வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய், நடுக்கின்றி யேநிற்பாய்.

காட்டெருமைத் தலைமேல் நின்றவள் மகிஷாசுரமர்த்தினிதான் என்பது அடுத்து பாட்டில் தெளிவாகிறது.

'வரி வளைக்கை வாள்ஏந்தி, மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரி, அரன், பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிர்அம் சோதி விளக்காகி யேநிற்பாய்''

இப்பாடலில் கொற்றவையை லக்ஷ்மியாகவும் பார்வதியாகவும் சரஸ்வதியாகவும் போற்றுகிறார் இளங்கோவடிகள். மரக்கால் மேல் நின்று வாட்கூத்து ஆடுகிறாள் கொற்றவை. அதைக் கண்டு அவுணர்கள் அழிந்துபடுகிறார்கள், வானோர்கள் மகிழ்கிறார்கள் என்றும் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகிறார்.

8. மணிமேகலையில் துர்க்கையைக் காடமர் செல்வி என்று கூறப்பட்டிருக்கிறது. அவளுடைய கோயில் முன்றிலில் பலிபீடங்களிருக்கின்றன; நெடுமரங்களுமிருக்கின்றன; தலைகள் மரக்கிளைகளினின்றும் தொங்கிக்கொண்டிருக்கின்றன; உலையாத உள்ளத்தோடு காளிக்குப் பலியாகத் தம் தலைகளைத் தாமே அறிந்துகொடுத்த வீரர்கள் தமிழ் நாட்டிலிருந்தார்கள் என்று மணிமேகலை சொல்லுகிறது.

குரூரமும் வன்கண்மையும் நிறைந்த சாக்தர்கள் தமிழகத்திலிருந்தார்கள் என்பதைக் கலிங்கத்துப் பரணி உறுதிப்படுத்துகிறது. தேவிக்கு நரபலி கொடுத்து வழிபடும் காட்சியினை ஒரு பாடல் விவரிக்கிறது.

சொல்லரிய ஓமத்தீ வளர்ப்பராலோ,
தொழுதிருந்து பழுஎலும்பு தொடரவாங்கி
வல்லரியின் விறகுஆக இடுவராலோ
வழிகுருதி நெய்ஆக வார்ப்ப ராலோ,
அடிக்கழுத்தி னுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப
ராலோ
கொடுத்தசிரம் கொற்றவையைப் பரவு மாலோ
குறைஉடலம் கும்பிட்டு நிற்கு மாலோ

சக்திதேவியிடத்திலிருந்து பக்திவெறியில் இப்படியெல்லாம் மக்கள் அலங்கோலத் தியாகங்கள் செய்திருக்கிறார்கள், ஆணவத்தைத் தியாகம் செய்வதற்குப் பதிலாகத் தலையையும் கையையும் அறிந்து தியாகம் செய்திருக்கிறார்கள். வெறுக்கத்தக்க இப்பழக்கங்களையெல்லாம் சீனச்சாரம் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். அதாவது, சீனாவிலிருந்து இறக்குமதியான பழக்கங்கள் என்று.

9. சாக்தத்திலேயிருந்த குரூரமான அம்சங்களை யெல்லாம் களைந்துவிட்டு, அதிலுள்ள மெய்ப்பொருளை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, சைவத்தையும் சாக்தத்தையும் சமரசப்படுத்திவிட்டார்கள் தமிழ்நாட்டிலேயிருந்த ஞானிகள். சிவனை உமையொரு பாகனுக்கி, அவனுக்கு அர்த்தநாரி வடிவத்தைக் கொடுத்து இந்தக் கொள்கையை மேலும் வலியுறுத்திவிட்டார்கள். தீயிலிருந்து எப்படிச் சூட்டைப் பிரிக்க

முடியாதோ, அப்படியே சிவதத்துவத்தி னின்றும் சக்தித் தத்துவத்தைப் பிரிக்கமுடி யாது என்று முடிவு கட்டினார்கள். இதையே திருமந்திரத்திலும்,

அண்ண லிருப்பது அவளக் கரத்துளே
பெண்ணின் நல்லாளும் பிரான்அக் கரத்துளே
எண்ணி யிருவர் இசைந்தங் கிருந்திடம்
புண்ணியவாளர் பொருளறிவார்களே''

என்று சொல்லியிருக்கிறது.

இறைவன் அம்மையப்பனாகக் காட்சி யளிக்கிறார் என்று கருத்தை நாயன்மார்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை யொட்டியே கம்பரும் ஒரு அரிய கவி பாடி யிருக்கிறார்.

'' தாய்தன்னை யறியாத கன்றில்லை ,
தன்கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகி, ஐய
நீஅறிதி எப்பொருளும் அவைஉன்னை
நிலையறியா
மாயையிது என்கொலோ ! வாராதே
வரவல்லாய்''

'உலகின் தாய்' என்று இறைத் தத்து வத்தை வருணித்துவிட்டு, ''ஐயனே'' என்று விளிக்கிறார். தாய்த் தத்துவமும் தகப்பன் தத்து வமும் பின்னிக் கிடந்த நிலையையே மேற் சொன்ன பாட்டில் கம்பர் சுட்டிக் காட்டுகிறார்.

ஒரு முஸ்லீம் சித்தர் எழுதிய ஞானரத்னக் குறவஞ்சி என்ற நூலிலே தாய் சம்மதிக்கவில்லை யென்றால் தகப்பன் இந்தப் பிரபஞ்சத்தை உற் பத்தி செய்திருக்க முடியாது என்று சொல்லி யிருக்கிறது.

''எப்படி யுலகத்தில்இப்படி உருவானேம்
—சிங்கி — அது
அப்பன்தன் நட்புக்கு ஒப்பிய தாயாலே
—சிங்கா''

இந்தக் கருத்தையே திருமூலரும்,

ஒருவன் ஒருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைவிக்கும்

என்று சொன்னார்.

10. சிவம் என்பது செயலற்ற தத்துவம் என்றும், மகாமாயையாகிய சக்தி தேவி சிவத் தைத் தொட்டவுடன் ஆணவமாயை பிறக்கிற தென்றும், ஆணவத்திலிருந்து மனசு என்ற தத்துவம் உதயமாகி, மனசிலிருந்து ஆகாசம் ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ, தீயிலிருந்து நீர், நீரிலிருந்து மண்—இவ்வாருகப் பஞ்ச பூதச் சேர்க்கையால் பிரபஞ்சமும் உயிர் களும் தோன்றுகின்றன என்றும், இந்தப் பரிணாம நெறியே (Evolution) சக்தியின் விளை யாட்டு என்றும் சித்தர்கள் கருதுகிறார்கள். பிரளய காலத்தில் மண்ணை நீர் உண்ணுகிறது, நீரைத் தீ உண்ணுகிறது. தீ காற்றில் ஒடுங்கு கிறது. காற்று ஆகாசத்திலும், ஆகாசம் மன சிலும், மனசு ஆணவ சக்தியிலும், ஆணவ சக்தி சிவத்திலும் ஒடுங்குகிறது இதையே (Involution) அல்லது ஒடுக்கம் என்று கூறு கிறார்கள்.

ஊழிக் கூத்து என்ற பாடலில் சுப்பிர மணிய பாரதியார் பிரபஞ்ச ஒடுக்கத்தில் காளியின் கூத்து எவ்வாறு நடக்கிறதென்பதை உணர்ச்சியோடு பாடியிருக்கிறார்.

''வெடிபடு மண்டத் திடிபல தாளம்
போட — வெறும்
வெளியில் இரத்தக் களியொடு
பூதம்பாடு — பாட்டின்
அடிபடு பொருளில் அடிபடு மொலியிற்
கூட — களித்
தாடும் காளீ ! சாமுண்டீ ! கங்காளீ !

ஐந்துறு பூதம் சிந்திப் போயொன்
ருகப் — பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப்
போக — அங்கே
முந்துறும் ஒளியிற் சிந்தை நழுவும்
வேகத் — தோடே
முடியா நடனம் புரிவாய், அடுதீ
சொரிவாய் !

பாழாம் வெளியும் பதறிப் போய்மெய்
குலையச் — சலனம்
பயிலும் சக்திக் குலமும் வழிகள்
கலைய — அங்கே
ஊழாம் பேய்தான் ஓஹோ ஹோ''
என்றலைய — வெறித்
துறுமித் திரிவாய், செருவெங் கூத்தே
புரிவாய்

சக்திப் பேய்தான் தலையொடு தலைமகள்
முட்டிச் — சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங்
கொட்டி — அங்கே
எத்திக் கினிலும் நின்விழி அனல்போய்
எட்டித் — தானே
எரியும் கோலம் கண்டே சாகும் காலம்.

காலத் தொடுநீர் மூலம்படு மூ வுலகும்
அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா
யிலகும் — சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் சினமும்
விலகும் — கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக்கூத்
திடுவாய்.

அன்னை ! அன்னை ! ஆடுங்கூத்தை
நாடச் செய்தாய் என்னை.''

11. இவ்வாறு பஞ்சபூதங்கள், காலம் இடம் மனம் ஆணவம் என்ற தத்துவங்கள் எல்லாம் ஒடுங்கிய நிலையில், சிவன், சக்தி தேவியின் கர்ப்பப்பையிலே சொகுசாக ஜாக்ரநித்ரை செய்து கொண்டிருக்கிறான். இந்த நிலையில் சிவனுக்கும் தாயாகக் காட்சி கொடுக்கிறாள் சக்திதேவி. பிறகு, மறுபடியும் பிரபஞ்சம் உற்பத்தியாகும் போது சிவனுக்குத் தாரமாக இருக்கிறாள் தேவி. பிரபஞ்சம் தோன்றி அதன் மூலம் கோடானுகோடி சக்திகள் இயங்கும் போது, தேவி சிவனுடைய மகளாகக் காட்சி யளிக்கிறாள். இந்தக் கருத்தைத் திருமந்திரம் விளக்குகிறது.

''வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் நற்றாரமும் ஆமே''

பேரண்டத்தில் இவ்வாறு ஞான நாடகமாடிய பெண்பிள்ளை, சிற்றண்டத்திலும் பலவித நிலை களிலிருந்து உயிர்களுக்கு உதவுகிறாள். கொங் கணநாயனார் வாலைக்கும்மியில் இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

மாதா வாய்வந்து அமுதம் தந்தாள் மனை
யாட்டி யாய்வந்து சுகங்கொ டுத்தாள்
ஆதர வாகிய தங்கை யானாள் — நமக்
காசுக் கொழுந்தியு மாமியானாள்.

(12) இவ்வாறு இயங்கும் சக்தியைத் திரோ தாயி சக்தி அல்லது மறைப்பு சக்தியென்று சைவ சித்தாந்தத்தில் சொல்லுவார்கள். பேருண்மை நமக்குப் புலப்படாமல் திரையைப் போட்டு நம் கண்ணை மறைப்பதும் அவள். திரையைக் கிழித்துச் செம்பொருளைக் காட்டு கிறவளும் அவள். மாயா சக்தியாக நின்று நம்மை அறியாமையில் அழுத்திவைக்கிறாள். ஞான சக்தியாக நின்று நமக்குப் பேரின்பத்தை நல்குகிறாள். அவளுடைய கருணையில்லை யென்றால் நாம் பரதத்துவத்தை அணுக முடியாது. பக்குவம் நமக்கு ஏற்பட்டுவிட்டால், முக்தியை நாம் விரும்பாவிட்டாலும் நம்மை வலிய இழுத்து நமக்கு முக்தியைக் கொடுத்து விடுவாள். இதை மறக்கருணை யென்று சொல்லுவார்கள்.

''இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந் தாளே''

என்பது திருமந்திரம். நம்மை மிரட்டியும் நமக்கு அருள்பாலிக்கிறாள் அவள்

(13) அஞ்ஞானத்திலிருக்கும் நாம் ஜடதத் துவத்தை, கேவலம் ஜடதத்துவம் என்றே எண்ணுகிறோம். உண்மையில் ஜடமாகத் தோன்றுவதெல்லாம் இறைத் தத்துவத்தின் வெளியீடுதான். சாம்பல் பூத்த நெருப்பிலே நெருப்பின் சிவந்த நிறமும் வெப்பமும் தெரி வதில்லை. வெண்சாம்பல்தான் தெரியும். ஆனால், ஒரு குச்சியினால் அதைக் கிளறிப் பார்த்தால் சாம்பலுக்கப்பாலுள்ள நெருப்புத் தெரிகிறது. தாய் ஞான சக்தியாக நின்று ஜடதத்துவத்தைக் கிளறிக் காட்டும்போது, நெருப்புருவமாக உள்ளேயிருக்கும் சிவதத் துவம் நம் உணர்வுக்குப் புலப்படுகிறது. இந்த அரிய உண்மையை அழகோடும் உணர்ச்சி யோடும் நந்திக் கலம்பகம் நமக்கு விளக்கு கிறது.

''பொருப்பரையன் மடப்பாவை
புணர்முலையின் முகடுதைப்ப
நெருப்புருவம் வெளியாக
நீறணிந்த வரை மார்பா''

சிவன் வெண்ணீறணிந்து தன் சிவந்த மேனியை மூடிக் கொண்டிருக்கிறான். ஆனால்,

பர்வதராஜனுடைய குமாரி தன் ஸ்தனங்களின் முகடுகளால் அவனுடைய நீறணிந்த மார்பைத் தைக்கும் போது, அவனுடைய மார்பிலேயிருந்த வெண்ணீறு உதிர்ந்து போகிறது; உள்ளேயிருக்கும் நெருப்புருவம் நமக்குத் தெரிகிறது. உண்மைக்கு அழகும் உணர்ச்சியும் கொடுப்பதற்காகக் காதல்துறையில் வைத்து அதைக் காட்டுகிறார் நந்திக் கலம்பக ஆசிரியர்.

அடையாள பாஷையிலே இவர் சொன்னதை நமக்குப் புரியக்கூடிய வெள்ளைத் தமிழிலே பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சொல்லுகிறார். இவர் திருநெல்வேலியிலே வாழ்ந்தவர். நெல்லையில் கோயில் கொண்டிருக்கும் வேய்முத்தரையும் வடிவம்மையையும் நித்தநித்தம் வணங்கியவர், தகப்பனைக் காட்டிலும் தாய்க்குக் கருணை அதிகம் என்ற உண்மையைத் தன் குடும்ப வாழ்க்கையில் உணர்ந்தவர், தம்முடைய குறைகளையெல்லாம் வேய்முத்தரிடத்திலே சொல்லிச் சொல்லிக் கதறினார். ஆனால், வேய்முத்தருடைய மனம் இளகுவதாக இல்லை. என்ன செய்வது? தாயிடம் முறையிட்டால் தகப்பனிடம் சிபார்சு செய்யமாட்டாளா என்று எண்ணுகிறார். ''அவர் திரிபுரத்தை எரிக்கப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது என்னைப் பற்றிச் சொல்லிவிடாதே, அம்மா, இளக்கமாக இருக்கும் நேரம் பார்த்து நயமாக அவரிடம் என்னைப் பற்றிச் சொல். அப்படிச் சொன்னால், உன் வாயில் இருக்கும் முத்து சிந்தியா போகும்?'' என்று தாயிடத்திலே உருகிக் கேட்கிறார்.

'' ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுஉன் அருகிருந்து
நீமுத்தம் தாவென்றவர்கொஞ்சும்
வேளையில் நித்தநித்தம்

வேய்முத்த ரோடுஎன் குறைகளெல்லாம்
மெல்லமெல்லச் சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ ?
நெல்வேலி வடிவம்மையே ''

14. பிரபஞ்சம் முழுவதுமே ஆண்-பெண் கோலத்தில், அர்த்தநாரி வடிவத்தில் இருப்பதை அப்பர் அடிகள் கண்டார். அதற்குமுன் கண்டறியாத இந்தக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு களித்தார்.

'' கண்டே னவர்திருப் பாதம்
கண்டறியாதன கண்டேன்',

என்று ஆனந்த மேலீட்டில் அவர் ஓலமிடுகிறார் எவ்வாறு கண்டார் ?

''மாதர்ப் பிறைக்கண் ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்''

ஆண்யானையும் பெண்யானையும் ஜோடியாகப் போவதைப் பார்த்தபோது, அம்மையப்பனின் இரண்டு திருப்பாதங்களுமே அவர்கண்ணுக்குப் புலப்பட்டுவிட்டன.

'' கோழி பெடையொடுங் கூடிக்
குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன் ''

என்றும்,

'' வரிக்குயில் பேடையோ டாடி
வைகி வருவன கண்டேன் ''
'' பேடை மயிலொடுங் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன் ''
'' பைங்கிளி பேடையோ டாடிப்
பறந்து வருவன கண்டேன் ''

என்றும் சொல்லி, பிரபஞ்சத்தில் எங்குமே அணுவிலிருந்து பேரண்டம்வரை, சிவனும் சக்தியும் ஜோடியாகப் பிணைந்து பின்னிக் கிடந்த நிலையையுணர்ந்து மகிழ்ந்தார் திருநாவுக்கரசர்.

15. அண்டத்தில் அவர்கண்ட ஆண் — பெண் கோலத்தைப் பிண்டத்திலும் கண்டார்கள் நம் சித்தர்கள். ஒவ்வொரு மனிதனுடைய உடம்பிலும் இவ்விரு சக்திகளும் இணைந்திருக்கின்றன. இடப்பாகத்தில் சக்தியும் வலப்பாகத்தில் சிவனும்இருப்பதைக் கண்டார்கள். மூச்சுப் பயிற்சியின் மூலமாகவும், யோகசாதனங்கள் மூலமாகவும், மந்திரச் சொற்களின் மூலமாகவும் சக்தியைச் சிவத்தோடு இணைத்து, ஆன்மாவைப் பரதத்துவத்திலே ஒடுக்கி முக்தியடைந்தார்கள்.

"வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு கண்மூடித்தழுவி நிற்ப தெக்காலம்"

என்று புலம்புகிறார் பத்திரகிரியார்.

மூலாதாரத்திலிருக்கும் குண்டலினி சக்தியைக் காலைப் பிடித்து எழுப்பி சகஸ்ராரத்துக்குக் கொண்டுபோய் அங்கிருக்கும் சிவத்தோடு அணையச் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் முத்தி கிடைக்கும் என்றும் சித்தர்களும் யோகிகளும் நம்புகிறார்கள்.

(16) சிவராஜயோகம் என்ற யோக முறையில், ஆறுதாரத்தை ஒப்புக்கொள்ளவில்லை. உடம்பிலே வெட்டாத சக்கரங்கள் இரண்டு இருக்கின்றன. இடப்பக்கத்திலுள்ள சக்கரத்துக்கு சக்தி சக்கரம் அல்லது சந்திரன் என்று பெயர். இவ்விரண்டு சக்கரங்களையும், குருவின் துணைகொண்டு, சேர்த்துவிட்டால், முத்தி கிடைத்துவிடும் என்று நம்புகிறார்கள். ஔவையார் குறளில் இதையே,

"சக்தியாம் சந்திரனைச்
செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூலம்அது"

என்று சொல்லியிருக்கிறது.

நம் உடம்பிலே அம்மை இருக்கும் இடத்தை மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் குறிப்பிடுகிறார்.

"………துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்த முழுமுதலே
முக்கட் சுடர்க்கு விருந்திடு
மும்முலையாய், முத்தம் தருகவே"

என்று சொல்லுகிறார்.

நம் உடலிலே அம்மையும் அப்பனும் கூடி விளையாடும் வீடு, அதிசயங்கள் நிறைந்த வீடு என்று கருவூரார் என்ற சித்தர் ஓலமிடுகிறார்.

"ஓசைமணி பூரமதில் உதிக்கும் வீடு
ஓகோகோ அதிசயங்கள் உள்ள வீடு
ஆசுகவி மதுரமது பொழியும்வீடு
அவனவளும் கூடிவிளை யாடும் வீடே"

என்றார்.

இராமலிங்க அடிகளும் தம் உடலுக்குள்ளேயுள்ள ஏழு மாடங்களைத் தாண்டித் திருவாயிலை அடைகிறார். அங்கு அம்மை அவருக்கு அருள்செய்த வண்ணத்தைப் பாடுகிறார்:

"அத்திருவாயிலில் ஆனந்தவல்லிஎன்
அம்மை யிருந்தாளடி — அம்மா
அம்மை யிருந்தாளடி"
"அம்மையைக் கண்டேன்
அவளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி — அம்மா
அமுதமு முண்டேனடி
தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி — அம்மா
சந்நிதி கண்டேனடி"
சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேறு
சாமி யறிவாரடி — அம்மா
சாமி யறிவாரடி"

17. யந்திரங்கள் மூலமாகவும் சக்தி வழிபாடு தமிழ் நாட்டில் நடந்து வருகிறது. திருமந்திரத்தில் திரிபுரைச்சக்கரம், ஏரொளிச்சக்கரம், வயிரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் முதலியவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

18. ஆதி சங்கரர் போன்ற சிறந்த ஞானிகள் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய ஆலயங்களில் ஸ்ரீசக்கரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். காஞ்சி காமாட்சிஅம்மை கோயிலில் உள்ள பிரசித்தி பெற்றகாமகோடி பீடத்தில் ஸ்ரீசக்கரம் ஸ்தாபிதமாகியிருக்கிறது. திருக்குற்றாலத்தில் பராசக்தி பீடத்திலும் ஸ்ரீசக்கரம் பதிக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்தில் சிவ சக்கரமும் ஸ்ரீசக்கரமும் சேர்ந்த சம்மேளன சக்கரம்இருக்கிறது. அண்ட பிண்டங்களையும் அவற்றிற்கு மூல காரணமாயிருக்கும் தத்துவத்தையும் முக்கோண, அக்ஷர பரிபாஷையில் இந்தச் சக்கரங்கள் குறிப்பிடுகின்றன.

கடைசியாக, தமிழ்நாட்டில் அரவிந்தர் சாத்தத்தை அனுஷ்டித்து வந்த முறையைப் பற்றிச் சில வார்த்தைகள்.

தெய்வத்தாய் ஒருத்திதான், ஆனால் அவளுக்குப் பல அம்சங்கள் உண்டு. முக்கியமாக நான்கு உருவங்களில் வந்து பூலோக வாழ்க்கையை அவள் வளப்படுத்துகிறாள்.

ஆதிசக்தியாயிருக்கும்போது அவள் பேரண்டத்தைக் கடந்து நிற்கிறாள். அபர நிலையிலிருக்கும் இறைத்தத்துவத்துக்கும் படைக்கப்பட்ட பேரண்டத்துக்கும் இடையே நின்று அவள் இரண்டையும் பிணைக்கும் சங்கிலியாகத் தொழில் புரிகிறாள், மகாசக்தியாக இருந்து பேரண்டத்திலுள்ள பொருள்கள் உயிர்கள், யாவற்றையும் படைத்துக் காத்துக் கோடிக்கணக்கான சக்திகளை முடுக்கி விடுகிறாள். ஆதிசக்தியையும் மகாசக்தியையும் ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தி, மனிதத் தத்துவத்துக்கும் இறைத் தத்துவத்துக்கும் இடையில் பஞ்சாயத் காரியாக நின்று அவள் சமரசப்படுத்துகிறாள்.

எல்லாம் கடந்து நிற்கும் ஆதிசக்தியானவள், எல்லா உலகங்களுக்கும் அப்பால் நின்றுகொண்டு, இறைத் தத்துவத்தைத் தன் உணர்வில் தியானப்பொருளாகக் கொண்டு தவம் செய்கிறாள். அவள் மூலம் இறைத் தத்துவமானது சச்சிதானந்தமாக வெளிப்படுகிறது. ஈசுவர — சக்தியாகவும் புருஷப் பிரகிருதியாகவும் இருந்து அவள் பிரபஞ்ச லீலையை நடத்துகிறாள்; எல்லாம் அவள், அவளன்றி அணுவும் அசையாது.

ஆதிசக்தி உதவிய பொருளை உருவாக்குவது மகாசக்தியின் வேலை. இயற்கையிலிருக்கும் சக்திகளை ஒழுங்குபடுத்தியும், நியதிப்படி இயக்கியும், பிரபஞ்ச தெய்வீக சக்திகளின் உதவியால், அவள் நாடகத்தை நடத்துகிறாள். ஆனால், சூத்திரதாரரைப்போல், தன்னை மறைத்துக்கொண்டே இயங்குகிறாள் மகாசக்தி. அவளுடைய குழந்தைகளாகிய நம்மிடத்திலே அவளுக்கு எல்லையற்ற அன்பிருக்கிறது. அரசு சக்திகளினின்றும் அவள் நம்மைக் காப்பாற்றுகிறாள். அவளுடைய நான்கு அம்சங்களுக்கும் நான்கு பெயர்கள்; மகேசுவரி, மகாகாளி, மகாலட்சுமி, மகாசரசுவதி.

மகேசுவரி மனித மனசுக்கு அப்பாலிருக்கும் வெட்டவெளியில் அமர்ந்திருக்கிறாள். மனித மனசைப் புடம் போட்டுப் பொன்னாக்குகிறாள். நம் உள்ளத்தைத் திறந்து, பராபரத்தின் ஜாஜ்வல்லியத்தைப் பார்க்கச் செய்கிறாள். அவள் அமைதி நிறைந்தவள். ஞானம் நிறைந்தவள், பிரபஞ்ச ரகசியம் தெரிந்தவள், முக்காலமும் உணர்ந்தவள், கருணைக் கடல், எல்லோரும் அவளுடைய குழந்தைகள். அசுரர்களையும் அரக்கர்களையுங் கூட அவள் கருணையோடு பார்க்கிறாள்; அவள் கொடுக்கும் தண்டனைகூட அருளிலிருந்து பிறக்கும் தண்டனை.

இனி, மகாகாளியின் குணங்கள் மகேசுவரியின் குணங்களினின்றும் வேறுபட்டவை. அவளுக்குரியது சக்திதான், ஞானம் அல்ல. எல்லையற்ற வல்லமை படைத்தவள். எந்த இடையூற்றையும் தகர்த்து நொறுக்கி, எந்த எல்லையையும் மீறி இயங்குபவள். அசுரர்களுக்கு அவள் தன் கோர உருவத்தைக் காட்டுகிறாள். பொய் புலைமை, கயமை — இவற்றையெல்லாம் தயை தாட்சண்யமில்லாமல் உடனுக்குடனே சங்காரம் செய்கிறவள். அவளுடைய வெஞ்சினமும் ஆங்காரமும் எல்லையற்றவை.

மூன்றாவதாக இருப்பது. மகாலட்சுமி இனிமையே வடிவானவள் இவள், இங்கிதம் நிறைந்தவள் இவள். பக்கத்திலிருந்தாலே நமக்கு ஆனந்தம் பொங்கும். அழகும் அன்பும் இசைவும் (harmony) இருக்கும் இடமெல்லாம் இவள் இருப்பாள். அவை இல்லாத இடத்தை விட்டுச் சட்டென்று நீங்கிவிடுவாள். அன்பினாலும் அழகாலும் ஆன்மாக்களை இறைவனுக்கு அடிமையாக்குகிறாள் இவள்.

கடைசியாக மகாசரசுவதி. நான்கு சக்திகளிலும் இளமையானவள் இவள். இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்கிறாள். மகேசுவரி பிரபஞ்ச சக்திகள் எப்படி இயங்க வேண்டும் என்று திட்டம் போட்டவள். மகாகாளி அந்த சக்திகளைச் செலுத்தி வேலை வாங்குகிறாள். மகாலட்சுமி அந்த சக்திகளைச் சுருதி சேர்த்துத் தாளம் தப்பாமல் இயங்கும்படி செய்கிறாள். ஆனால், மகாசரசுவதியோ ஒவ்வொரு சிறு துறையிலும் இறங்கி, சக்திகள் ஒத்துழைக்கின்றனவா என்று கண் காணித்து அவற்றின் தொழிலால் எதிர்பார்க்கும் விளைவுகள் உண்டாகின்றனவா என்று பார்க்கிறாள். பொறுமையோடு, களைப்புக் கொள்ளாமல், வெகு கவனமாக வேலைகள் நடந்தேறும்படி செய்கிறாள்.

மனித வழ்க்கையென்ற வீணையை மீட்டி, அதைப், பேரின்பத்தோடு சுருதி சேர்க்க விரும்புவோமேயானால், நாம் நம்மைத் தாயின் கையில் ஒப்படைத்து விடவேண்டும். நம் இதயத்தின் ஒரு பாகத்தை மாத்திரம்

அவளிடம் ஒப்படைத்து விட்டு மிச்சமுள்ள பாகத்தை நம் பொறுப்பில் வைத்துக் கொள்ளலாகாது. நிபந்தனையற்ற சம்பூரண சரணாகதியாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவள் நம் இதயத்திலிருந்து கொண்டு அவள் வேலையை அனாயாசமாகச் செய்ய முடியும். நாம் அவளைப் பற்றி நினைக்காமலிருக்கும் போதும் அவள் நம்முள்ளிருந்து தொழிற் படத்தான் செய்கிறாள். ஆனால் நாம் அவளை விரும்பித் தியானம் செய்யும் போது, அவள் மிகுந்த ஆனந்தத்தோடும் உல்லாசத்தோடும் இயங்குகிறாள்.

நாம் அவள் கைக் களிமண்ணாக மாற வேண்டும். எப்படி எப்படியெல்லாம் அவள் நம்மை உருட்டினாலும் அப்படி அப்படியெல்லாம் நாம் வளைந்து, கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய உள் மனசையும் வெளி மனசையும் மிச்சம் கிச்சம் இல்லாமல் அவள் கையில் ஒப்படைப்போமாக. அப்படிச் செய்தால், ஞானமும் ஒளியும் வல்லமையும் இசைவும் அழகும் பரிபூரணமும் சிதாகாசத்திலிருந்து நம் இதயத்தினுள் இறங்கும்; நம் இதயத்திலிருந்து பூலோக வாழ்க்கையில் அவை இறங்கும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சீவன் முத்திக்காக மட்டுமே பாடுபடுவது சுயநலத்தின் பாற்படும். சக்திதேவியின் அருளை நாம்பெற்று, நம் மூலமாக அதை உலகத்துக்குப் பாய்ச்சி, வானுலகத்தை மண்ணுலகத்துக்கு இழுத்துவந்து, மனிதச் சாதியைக் கந்தர்வ சாதியாக உயர்த்த வேண்டும். இதுவே அரவிந்தருடைய சாக்தம், இதையேதான் பாரதியாரும் சொன்னார்.

"ஆழ்க உள்ளம் சலன மில்லாது
அண்ட வெளிக்கண், அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே!!

148706



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்ன திருப்பதி திரு. வேங்கடரமண சுவாமி கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் உரையாற்றுதல். (21-10-72)



திருத்தணிகை முருகன் கோயிலில், நமது தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழவேள் டாக்டர் திரு. கலைஞர் அவர்கள (9-1-73)



திருத்தணிகை முருகன் கோயிலில், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் திரு. கலைஞர் அவர்களுடன், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், வேளாண்துறை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் முதலிய பெருமக்கள் பலர், திருப்பணித் துவக்க விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தல்.



திருத்தணிகை முருகன் கோயிலுக்கு வருகைதந்த நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் திரு. கலைஞர் அவர்களுக்கு, அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்கள் மாலையணிவித்து வரவேற்றல். (9—1—73)



திருத்தணிகை முருகன் கோயிலில், தெய்வயானை திருமண மண்டபத் திறப்பு விழாவில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் உரை நிகழ்த்துதல் (9—1—73)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor. N.R. Murugavell, M.A., M.O.L.